இன்றைய காலநிலை




கூடிய வெப்பநிலை 33 °c
குறைந்த வெப்பநிலை 27 °c
வெப்பமான காலநிலை



நடிகர் ரஜினியை சந்தித்தார் அழகிரி பக். 06



சீனாவில் மீண்டும் கத்திக் குத்து 3 பேர் கொலை; ஒருவர் காயம் பக். 07



பயங்கரவாதம் பக். 14



சல்லிக் காசு கூடப் பெறாத ஒஸிலுக்கு 431 கோடி ரூபாவா? பக். 25


# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 26

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 109 வள்ளுவர் ஆண்டு: 2045 பங்குனி 01 , சனி 15.03.2014


15 MAR 2014

# பூஸாவில் தடுப்புக் காவலில் தர்மபுரத்தில் கைதான தாய்

## 18 நாள்கள் வைத்திருக்க உத்தரவு: அவரது 13 வயது மகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 15
கிளிநொச்சி, தர்மபுரத்தில் இடம்பெற்றதாகப் பொலிஸார் கூறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட தாயாரான பா.ஜெயகுமாரிக்குப் பாதுகாப்பு அமைச்சினால் 18 நாள்கள் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவரை பூஸா சிறைக்கு அனுப்ப உள்ளதாகப் பொலிஸார் நேற்று கிளிநொச்சி பதில் நீதிவான் எஸ். சிவ பாலசுப்பிரமணியத்திடம் தெரிவித்தனர். 13 வயதே நிரம்பிய அவரது மகள் விபூசி காவை, சிறுவர் இல்லத்தில் பாதுகாப்பாக வைத்துப் பராமரிக்குமாறும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிக்கு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.
தாம் சந்தேகநபர் ஒருவரைத் தேடிச் சென்ற சமயம் அவர் ஜெயகுமாரியின் வீட்டில் இருந்து பொலிஸாரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுவிட்டார் என்றும் வீட்டில் வசித்து வந்த தாயாரையும், அவரது மகளையும் தாம் கைது செய்தனர் என்றும் பொலிஸார் தமது முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் மாலை 4 மணி முதல் பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸாரால் அவர்களது வீட்டில வைத்துத் துருவித் துருவி விசாரிக்கப்பட்ட ஜெயகுமாரியும் விபூசிகாவும் இரவு கைது செய்யப்பட்டு வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு சட்ட மருத்துவ அதிகாரியிடம் முன்னிலைப்படுத்தப்பட்டு மருத்

23 ஆம் பக்கம் பார்க்க

## இன்று முதல் கச்சதீவுக்கான பயண ஒழுங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 15
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கு யாத்திரிகர்கள் செல்வதற்கான பயண ஒழுங்குகள் இன்று தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெறவுள்ளது. அதற்காக இந்தியா மற்றும் இலங்கையில் இருந்து செல்லும் யாத்திரிகர்களுக்கான பயண ஒழுங்குகள் அந்தந்தப் பகுதிகளில் இருந்து ஏற்

23 ஆம் பக்கம் பார்க்க

## கைதானோர் விடுதலைக்காக தாயகத்திலும், புலத்திலும் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 15
கிளிநொச்சியில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தாயையும், அவரது மகளையும் விடுவிக்குமாறு கோரி வவுனியாவில் இன்று முற்பகல் 11 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போராட்டத்துக்கு பல்வேறு அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.
கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அசம் பாவிதச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து காணாமல் போனோ ரின் உறவுகள் நீதி வேண்டி நடத்தும் போராட்டங்களில் முன்னின்று குரல் கொடுக்கும் பா.ஜெயக்குமாரி மற்றும் அவரது 13 வயதான விபூசிகா ஆகிய இருவருமே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இரு வரையும் விடுவிக்குமாறு கோரியே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இந்தப் போராட்டத்துக்குக் காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழு, மன்னார் பிரஜைகள் குழு உட்பட பல்வேறு சிவில்

23 ஆம் பக்கம் பார்க்க

# நேற்றைய தினமும் வன்னியில் பதற்றம்



சோதனை நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர்

யாழ்ப்பாணம், மார்ச் 15
கிளிநொச்சியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தால் ஏற்பட்டிருந்த பதற்றநிலை நேற்றைய தினமும் தொடர்ந்தது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சோதனை நடவடிக்கைகள் நேற்றுத் தளர்வடைந்திருந்த போதும், இராணுவமும் பொலிஸாரும் வன்னிப் பிராந்தியம் முழுவதும் குவிக்கப்பட்டிருந்

23 ஆம் பக்கம் பார்க்க

## தாயையும், மகளையும் உடனே விடுவியுங்கள்

*த. தே. கூட்டமைப்பு கோரிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 15
கிளிநொச்சியில் கைது செய்யப்பட்ட தாயையும், மகளையும் எதுவித நிபந்தனைகளுமின்றி மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக

23 ஆம் பக்கம் பார்க்க

## கைது நடவடிக்கை கண்டிக்கத்தக்கது

*காணாமற் போனோரை தேடிக் கண்டறியும் குழு*

யாழ்ப்பாணம், மார்ச் 15
காணாமற்போனோரின் குடும்பங்களுக்குக் கொடுக் கப்பட்டுவரும் அச்சுறுத்தல்களுக்கு

23 ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கிச் சூடு நடத்தியவர் புலிகளோடு தொடர்பானவராம்

*கிளிநொச்சிச் சம்பவம் குறித்து இராணுவப் பேச்சாளர் கருத்து*

கொழும்பு, மார்ச் 15
பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் மீது கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
"கிளிநொச்சி தருமபுரம் முசி

23 ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்றத்திடம் மன்னிப்பு கோரினார் அமைச்சர் ரிஷாத்

கொழும்பு, மார்ச் 15
தொழில்துறை மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நீதித்துறை உறுப்பினர்களிடம் மன்னிப்புக் கோரியதுடன், மன்னார் நீதிவான் யூட்சனுக்கு ஏதும் மன உளைச்சல் ஏற்பட்டிருந்தால் அதற்காக வருத்தப்படுகின்றேன் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.
அவருக்கு எதிராக முன்னணி மூத்த சட்டத்தரணிகள் தாக்கல் செய்த நீதிமன்ற அவ

23 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ வாகனம் மோதி மூன்று நபர்கள் காயம்



யாழ்ப்பாணம், மார்ச் 15
இராணுவ அம்புலன்ஸ் வாகனம் மோதிய விபத்தில் கோண்டாவிலில் நேற்று மூவர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை நேற்றிரவு கடும் கவலைக்குள்ளானதாக இருந்தது.
நேற்று மாலை நடைபெற்ற

23 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை

*வலியுறுத்தி தமிழக மாணவர்கள் போராட்டம்*

சென்னை, மார்ச் 15
இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க்குற்ற சர்வதேச விசாரணையை உள்ளடக்கியதான தீர்மானத்தை ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இந்தியா தனித் தீர்மானமாகக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தி திருச்சி சட்டக் கல்லூரி மாணவர்கள் 12 பேர் காலவரையற்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்றுமுன் தினம் ஆரம்பித்துள்ளனர்.
ஐ.நா. சபையின் நடப்பு மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மான வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மான வரைவு

23 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கத் தீர்மானம் தொடர்பில் அனல் பறக்கின்றது பரப்புரைகள்

*ஆதரவாளர், எதிர்ப்பாளர் சுறுசுறுப்பாகப் பணிகளில்*

ஜெனிவா, மார்ச் 15
ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத் தொடர் இரண்டாவது வாரத்தைப் பூர்த்தி செய்துள்ள நிலையில், இலங்கை தொடர்பிலான அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ஆதரவாகவும், எதிராகவும் பரப்புரைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

23 ஆம் பக்கம் பார்க்க

## யுவதி மீது வன்புணர்வு சந்தேக நபருக்கு மறியல்

### அடையாள அணிவகுப்புக்கும் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் யுவதி ஒருவரை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரை எதிர்வரும் புதன்கிழமை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டுள்ள நீதிமன்றம், அதுவரை சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள பாலேந்திரன் பிரபாகரனைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் ஜே.கஜநிதிபாலனிடம் நேற்று முற்படுத்தினர். அதன் போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதேவேளை இதே குற்றச் சாட்டுச் சுமத்தப்பட்டுள்ள ஏனைய இரண்டு சந்தேக நபர்களும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில், விரைவில் அவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் நீதிமன்று பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

வடமராட்சி துன்னாலையில் கடந்த 7 ஆம் திகதி தமிழ் சினிமாப் பாணியில் யுவதியின் காதலனைத் தாக்கிவிட்டுக் காதலன் முன்பாகவே குறித்த யுவதியை மூவர் வன்புணர்வுக்குட்படுத்தினர் என்று முறைப்பாடு செய்யப்பட்டது.


அதையடுத்தே பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்ததுடன், ஏனைய இருவரைத் தேடிவருகின்றனர்.

அவர்களில் ஒருவர் மந்திகை புலோலியில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தி வருபவரின் மகன் என்றும் மற்றையவர் துன்னாலை குடவத்தையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி அரசடியில் கடந்த வருட இறுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த ஹன்ரர் - ஓட்டோ விபத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தார். அந்த ஹன்ரர் வாகனச் சாரதியான கிளவிதோட்டம் துன்னாலை கரவெட்டியில் வசிக்கும் பாலேந்திரன் பிரபாகரன் என்பவரே, குறித்த சம்பவம் தொடர்பாகத் தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் எதிர்வரும் புதன்கிழமை நீதிமன்றில் அடையாள அணிவகுப்புக்காக முற்படுத்தப்படவுள்ளார். குறித்த யுவதி வரணியைச் சேர்ந்தவர். அவரது காதலன் அல்வாயைச் சேர்ந்த ஓட்டோச் சாரதி. வீதியோரம் ஓட்டோவை நிறுத்திவிட்டு இருவரும் கதைத்துக் கொண்டிருந்த போது அவ்வழியே மோட்டார் சைக்கிளில் சென்ற மூவர் ஏன் இங்கு நிற்கிறீர்கள் என்று கேட்டு குறித்த இளைஞனைத் தாக்கி இருவரையும் பொலிஸில் ஒப்படைக்க வேண்டும் என்று கூறி பற்றைக்குள் கொண்டு சென்று காதலன் முன்பாகவே யுவதியை வன்புணர்வுக்குட்படுத்தினர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-4)

## அமைச்சரின் 10 நிமிடத் தேவைக்காக இடையில் குழம்பியது மாணவர் நிகழ்வு

### பள்ளிக்குத் திரும்புவார்களா அவர்கள்?




பாடசாலை மாணவிக்கு கற்றல் உபகரணம் வழங்கப்படுகின்றது.




கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு இடை நடுவில் குழப்பப்பட்டமையால் அங்கு வந்திருந்த மக்கள் குழப்பமடைந்து காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், மார்ச் 15

அமைச்சரின் 10 நிமிடச் சந்திப்புக்காக மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு குழப்பியடிக்கப்பட்டது. இதனால் தூர இடங்களிலிருந்து வருகை தந்த அநேகமான மாணவர்கள் பொருள்களைப் பெறாது ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை ஏற்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் பாடசாலையில் இருந்து இடைவிலகிய 956 மாணவர்களை மீளவும் கல்வித் தடத்துக்குத் திருப்பும் நடவடிக்கையாக அவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்டச் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ்.வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு யாழ்.செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் புதிதாக நியமனம் பெற்ற கிராம சேவையாளர்களுக்கும், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பும் மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இரு நிகழ்வுகளுமே பிற்பகல் 3 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

கற்றல் உபகரணங்கள் பெறுவதற்கு 15 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் பெருமளவான மாணவர்கள் வருகை தந்திருந்தனர். அவர்களுக்குப் பொருள்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன.

அச்சமயம் அங்கு அமைச்சர் வருகை தந்தமையால், கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருமாறு ஏற்பாட்டாளர்களுக்கு நெருக்கீடு கொடுக்கப்பட்டது. இதனால் குழப்பமடைந்த ஏற்பாட்டாளர்கள் மாணவர்களை' வெளியேற்றி, கற்றல் உபகரணங்களை அந்தந்தப் பிரதேச செயலர்களிடம் ஒப்படைத்தனர்.

கற்றல் உபகரணங்களைப் பெற்ற சில பிரதேச செயலர்கள் அவற்றை மாவட்டச் செயலகப் பகுதியிலுள்ள மலசல கூடத்துக்கு அருகில் வைத்து மாணவர்களுக்கு வழங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

சில பிரதேச செயலர்கள் பொருள்களைத் தமது அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்திவிட்டுப் பறந்தனர். இதனால் பெருமளவு மாணவர்கள் பொருள்களைப் பெறாது ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

கிராம சேவையாளர்களைச் சந்திக்க வந்த அமைச்சர் வெறும் 10 நிமிடங்கள் மட்டுமே அவர்களுடன் கலந்துரையாடிய பின் மண்டபத்தைவிட்டு வெளியேறிவிட்டார்.

அமைச்சரின் 10 நிமிடச் சந்திப்புக்காக, மாணவர்களுக்கான உபகரணம் வழங்கும் நிகழ்வு குழப்பப்பட்டமை தொடர்பாக பலரும் விசனம் தெரிவித்தனர்.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவர் இ.ஜெயசேகரம் உட்படப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (உ-400-14)

## பெண்ணுக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, மார்ச் 15

போலியான ஆவணங்களை தயாரித்து சிறையிருந்த நபர் ஒருவரை விடுவிக்க முயன்ற பெண் ஒருவரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர், கிராம அலுவலர் ஒருவரின் கையொப்பத்திலான போலி ஆவணங்களைத் தயாரித்த பெண்ணையே விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (கு-18)

## சடலங்கள் மீட்பு

கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சி நாச்சிக்குடா பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இருவர் நேற்று சடலங்களாக மீட்கப்பட்டனர். நாச்சிக்குடா மத்தியைச் சேர்ந்த நடராஜா யோகேந்திரன் (வயது-42), நாச்சிக்குடா அந்தோனியார் கோயிலைச் சேர்ந்த கை. விமலன் (வயது-24) ஆகிய இருவருமே தூக்கில் தொங்கிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விமலனுடைய சடலம் மரத்தில் தொங்கிய நிலையிலேயே நேற்றிரவுவரை காணப்பட்டது. (கு-400-18)

## கோப்பாய் ஆசிரியரது எச்சங்கள் ஒப்படைப்பு

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் எலும்புக் கூடாகக் கண்டெடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்ட கோப்பாயைச் சேர்ந்த ஆசிரியர் கார்த்திகேசு நிரூபனின் எலும்பு எச்சங்கள் அடக்கம் செய்வதற்காக நேற்று அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாங்குளம் காட்டுப் பகுதியில் கடந்த 12ஆம் திகதி இவரது எலும்புக்கூடு மற்றும் மண்டையோடு கண்டெடுக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் தடயப் பொருள்களின் அடிப்படையில் அது யாருக்கு உரித்தானது என்று அடையாளம் காணப்பட்டது.

விசாரணையை மேற்கொண்ட மாங்குளம் பொலிஸார், நீதிமன்றத்தில் இது தொடர்பில் அறிக்கை தாக்கல் செய்தனர். கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த மனித எலும்புக் கூட்டு எச்சத்தினை விசாரணைகளின் பின்னர் உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. பதில் சட்ட வைத்திய அதிகாரி சின்னையா சிவரூபன் உடற் கூற்றுப் பரிசோதனையினை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்தார். இதையடுத்து உறவினர்களிடம் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு எலும்பு எச்சங்கள் ஒப்படைக்கப்பட்டன. மேலதிக சோதனைகளுக்காக இறந்தவரின் தந்தையாரது இரத்த மாதிரியும் பெறப்பட்டுள்ளது. (உ-55)

## 32 இந்திய மீனவர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 15

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 32 இந்திய மீனவர்களையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தரவுக்கமைய ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் செல்வநாயகம் லெனின்குமார் நேற்று விடுதலை செய்தார்.

இந்தியா நாகப்பட்டிணம், ஜெகதாப்பட்டிணம் ஆகிய பகுதிகளிலிருந்து 8 படகுகளில் வந்த 32 இந்திய மீனவர்கள் கடந்த 3 ஆம் திகதி நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் வைத்து காங்கேசன்துறைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்.மாவட்டக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்று குறித்த 32 மீனவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் படகுகளும் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளன. (ற-சி)

## கேக் கண்காட்சி யாழ்.நகரில் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்.றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் ஆர்.எல்.கிளமண்ட் கேக் அலங்காரப் பாடசாலை நடத்தும் 'மல் மீ - 2014' கேக் கண்காட்சியும், பயிற்சிப் பட்டறையும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றோட்டேறியன் ஈ.சரவணபவனும், கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேறியன் நீலா தர்மகுலசிங்கமும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-400)

## அலுக்கோசு பதவிக்கு ஆஸியினர் விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 15

இலங்கையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றுநர் (அலுக்கோசு) பணிநிலை வெற்றிடத்துக்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இருவர் விண்ணப்பித்துள்ளனர்.

அண்மையில் இந்தப் பணிக்கு நொச்சியாகமவைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். பணியில் இணைக்கப்பட்ட அவர் தூக்குமேடையை நேரில் பார்த்தவுடனேயே தனது பணியில் இருந்து விலகியிருந்தார். இந்தத் தகவல் அனைத்துலக ஊடகங்களில் இடம்பெற்றிருந்தது.

இந்தநிலையில் இந்தப் பணிநிலை வெற்றிடத்துக்கு இரு ஆஸ்திரேலியர்கள் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பித்துள்ளனர். இந்தத் தகவலை இலங்கையின் சிறைச்சாலை ஆணையாளர் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்துள்ளார்.

"குறித்த பணிநிலை வெற்றிடத்துக்கு இரு ஆஸ்திரேலியர்கள் விண்ணப்பித்திருந்தனர். எனினும் அவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. குறித்த பதவிக்கு வெளிநாட்டவர்களை இணைத்துக் கொள்வதற்கு எமது நாட்டுச் சட்டங்கள் இடமளிக்கவில்லை. மிக விரைவில் குறித்த பணிநிலை வெற்றிடத்துக்கு மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படும்." என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## பயிற்றப்படாத ஆசிரியருக்கு கலாசாலைகளில் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றபடாதுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் அவர்களது பகுதிகளில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. இந்தப் பயிற்சிகளை நாட்டில் உள்ள அனைத்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும் 2013 - 2014 கல்வியாண்டில் வழங்குவதற்குக் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பான அறிவித்த வர்த்தமானி மூலம் விடுக்கப்பட்டுள்ள என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"இதுவரை கலாசாலைகளில் பயிற்சி பெற்றிராத ஆசிரியர்கள் மற்றும் வன்னிப் பிரதேச பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் கிடைக்கப்பெற்றவர்கள் இதன்மூலம் பயிற்சி பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இதன் மூலம் கிடைத்துள்ளது. ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றுக் குறைந்த வேதனத்துடன் கடமையாற்றுபவர்களுக்கும் இது சிறந்த சந்தர்ப்பமாக அமையும்.

சிங்களம், ஆரம்பக் கல்வி, சமூகவியல், விஞ்ஞானம், கணிதம், விவசாயம், மனைப் பொருளியல், ஆங்கிலம், கிறிஸ்தவம், றோமன் கத்தோலிக்கம், இந்துசமயம், இஸ்லாம், சித்திரம், சங்கீதம், நடனம், அரபு, விசேட கல்வி, கைப்பணியும் தொழில்நுட்பமும், வணிகம், தமிழ், உடற்கல்வியும் சுகாதாரமும், இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) ஆகிய பாடங்களுக்கான பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

தகைமை அடிப்படையில் தெரிவுகள் நடைபெறவுள்ளதால் குறித்த ஆசிரியர்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)







உதயவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு உடைகள் மற்றும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, ஈ. சரவணபவன், மாகாண சபை உறுப்பினர்களான ப. அரியரட்ணம், சு. பசுபதிப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். 18 குடும்பங்களுக்கு இந்த நிகழ்வில் வைத்து உடைகள், கற்றல் உபகரணங்கள் கொண்ட பொதிகள் வழங்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் பெண் ஒருவருக்கு பொதியை வழங்குவதையும், இந்த உதவித் திட்டத்தைப் பெற்றுக்கொண்ட குடும்பங்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண சபை உறுப்பினர்கள் இருப்பதையும் படங்களில் காணலாம். (த-18)

## விஞ்ஞான சங்க கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் கண்காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி சிவகுருநாதையர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்மொழி மூல ம்ாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞான சங்[கம்] வட மாகாணப் பாடசாலை [மா]ணவர்களுக்கிடையில் விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகளை வருடாந்தம் நடத்தி வருகின்றது. அதன் ஒரு அங்கமாகவே இக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இதனைப் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் மாலை 4 மணிவரை இலவசமாகப் பார்வையிடலாம் என சங்கத்தின் உதவிப் பொதுச் செயலாளர் கலாநிதி ப. செவ்வேள் அறிவித்துள்ளார்.

இதேவேளை இன்று நடைபெறும் கண்காட்சி யில் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏ. இராஜேந்திரன் [க]லந்துகொள்வார். (உ-400)

# நெல்லியடியில் நேற்று கண்டனப் பேரணி

## பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களுக்கு எதிராக

வடமராட்சி, மார்ச் 15

நெல்லியடியில் நேற்றுக் காலை பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டமும், கவனவீர்ப்புப் போராட்டப் பேரணியும் நடைபெற்றன.

முற்பகல் 10.30 மணிக்கு நெல்லியடி மத்திய பஸ் நிலையத்தில் பதாகைகள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு ஆண்கள், பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் திரண்டு நிற்க கண்டன ஆர்ப்பாட்டமும், கவனவீர்ப்புப் பேரணியும் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ. சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். தொடர்ந்து கண்டன ஆர்ப்பாட்ட கவனவீர்ப்புப் பேரணி யாழ்ப்பாணம் வீதி வழியாக கரவெட்டி பிரதேச செயலகத்தை நோக்கி வட மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் தலைமையில் கோஷங்களுடன் நகர்ந்து சென்றது.



ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான த. சித்தார்த்தன், வி. சிவயோகன், பா. கஜதீபன், வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந. அனந்தராஜ், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர், பூ. சஞ்சீவன், கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் பொ. வியாகேசு ஆகியோருடன் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நகர சபைகள், பிரதேச சபைகளின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோரும், பேரணியில் சென்றோரும் பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களைக் கண்டிப்போம், சட்டவிரோத பணக் கொடுக்கல் வாங்கல்கள் மூலம் உங்களின் பெறுமதியான வாழ்க்கையை வீணாக்காதீர்கள் ஆகிய வாசகங்கள் கொண்ட இரு பதாகைகளை முன்னே தாங்கிச் சென்றனர்.

பின்னால் சென்றோர் புகை, மது சமுதாயத்தின் பகை, மது சாரம் மனிதனை சமூக விரோதியாக்குகின்றது, நீதி வேண்டும் நீதி வேண்டும்; பாதிக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், பெண்கள் என்ன போதைப் பொருளா? காவல்துறையே வேடிக்கை பார்க்காதே, கசிப்பு உற்பத்தியை ஒழிப்போம், ஒழிப்போம், ஒழிப்போம்; மதுவை ஒழிப்போம், பாலியல் கொடுமைகளை நிறுத்து, திணிக்காதே திணிக்காதே; பாலியல் வல்லுறவைத் திணிக்காதே ஆகிய வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் தாங்கியவாறு கோஷங்கள் எழுப்பிச் சென்றனர்.

பேரணி கரவெட்டி பிரதேச செயலகத்தை வந்தடைந்ததும் பிரதேச செயலர் ச. சிவஸ்ரீயிடம் பொதுமக்கள் சார்பில் மனுக்களை கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் பொ. தம்பிமுத்து கையளித்தார். வடக்கு மாகாண முதலமைச்சர், யாழ். அரச அதிபர் உள்ளிட்டோருக்கு மனுக்கள் முகவரியிடப்பட்டிருந்தன. மனுக்களைப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலர் அவற்றைச் சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பி வைக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். (ஓ-173-422)

# தொடர்ந்து 10 வருடங்களுக்குக் கனடா உதவ வேண்டும்

## கீரிமலையில் நடந்த கலந்துரையாடலில் அமைச்சர் குருகுலராஜா

யாழ்ப்பாணம், மார்ச் 15

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியாக பத்து வருடங்களுக்கு உதவி செய்வதன் மூலமே அவர்கள் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். இந்த ஆண்டு நிச்சயமாக கிடைக்கும் இவ்வுணவுத் திட்டம் 2015 மற்றும் 2016 இலும் நடைமுறைப்படுத்த கனேடிய தூதுவர் ஆவன செய்யவேண்டும் என வட மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா தெரிவித்தார்.

கனேடிய உயர் ஸ்தானிகர் ஷெலி வைற் குழுவினர் நேற்று தெல்லிப்பழைப் பகுதிக்குச் சென்றிருந்தனர். கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் அவர்களுடன் நடைபெற்ற விசேட சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்;

'உலக உணவுத்திட்டம் குறித்து பல விடயங்களை நாங்கள் கனேடிய தூதுக் குழுவினருடன் பேசியிருக்கின்றோம். எங்களுடைய மாகாணத்தில் மக்கள் படுகின்ற துன்பங்கள் துயரங்கள் ஏராளம். மிக முக்கியமாக தற்போது மூன்று நேர உணவை வழங்குவதென்பது எல்லோருக்கும் ஒரு சவாலாக உள்ளது. குறிப்பாக அடிமட்டத்திலிலுள்ள குடும்பங்கள் இடம்பெயர்ந்து மீள்குடியமர்ந்து வேலை இல்லாத நிலையில் உள்ளனர். அத்துடன் இம்முறை அறுவடையும் சாதகமாக அமையவில்லை. இந்நிலையில் அவர்களின் மூன்று நேர உணவு என்பது கேள்விக் குறியாகின்றது.



நகுலேஸ்வரா வித்தியாலயத்தில் நடந்த கலந்துரையாடலில் கனேடிய உயர் ஸ்தானிகர் குழுவினருடன் குருகுலராஜா.

குறிப்பாக பத்து வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குவதில் தாய்மார்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குகிறார்கள் .

ஒரு மூடை நெல்லின் விலை கிளிநொச்சியில் 3,000 ரூபாவைத் தாண்டிய நிலையில், இன்னமும் சில நாள்களில் அரிசியின் விலை மேலும் உயரும் என எண்ணுகின்றோம்.

நாம் இப்பொழுது போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேறிய பின்னர், இன்னமும் சரியான முறையில் அரசினால் எல்லா முறைகளிலும் எல்லா திட்டங்களும் நடைமுறைப்படுத்தவில்லை. இதன் அடிப்படையிலேயே நாம் பல நாடுகளிடம் உதவி கோர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். ஆகக் குறைந்தது 2020ம் ஆண்டு வரையாவது நீங்கள் எமது மக்களுக்கு போதியளவு உதவிகளைச் செய்தாற்றான் எமது மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்.

முன்னர் 600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி கற்றார்கள். இப்போது மிக நலிவடைந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இங்கு கற்கின்றார்கள். காலை ஆகாரத்தை தாய்மார் கொடுத்து அனுப்ப முடியாத சூழ்நிலை காணப்படுவது வருந்தத்தக்கவிடயம். விளையாடுவதற்கு விளையாட்டுத் திடல்கூட இல்லாமல் நெருக்கீடுகளுக்கு மத்தியிலேயே அவர்கள் இருக்கிறார்கள்' எனத் தெரிவித்தார். (ஓ-10)

# வலி. தென்மேற்கு பிரதேச சபை கூட்ட மண்டபம் அதிர்வு

## உறுப்பினர்கள் கருத்து முழக்கம்

வலி. தென்மேற்கு, மார்ச் 15

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை விறுவிறுப்பாகவும் கலகலப்பாகவும் இடம்பெற்றது.

எதிரணி உறுப்பினர்கள் மட்டுமல்ல ஆளுங்கட்சி உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை மண்டபம் அதிரும் வகையில் உரத்த குரலில் எடுத்துக் கூறினர். சில உறுப்பினர்கள் மேசையில் தட்டி அமைதி அமைதி என்று தெரிவித்தனர்.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மார்ச் மாதத்துக்கான கூட்டம் பதில் தவிசாளர் எஸ். சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பதில் தவிசாளரின் தலைமையுரையைத் தொடர்ந்து நிகழ்ச்சி நிரலின்படி கடந்த மாதக் கூட்ட றிக்கை செயலாளினால் வாசிக்கப்பட்டது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்கள் குறித்து காரசாரமான முறையில் தங்கள் ஆட்சேபனைகளை உறுப்பினர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து அரை மணித்தியாலத்துக்குப் பின் அறிக்கை திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

> “எதிரணி உறுப்பினர்கள் மட்டுமல்ல ஆளுங்கட்சி உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை மண்டபம் அதிரும் வகையில் உரத்த குரலில் எடுத்துக் கூறினர். சில உறுப்பினர்கள் மேசையில் தட்டி அமைதி அமைதி என்று தெரிவித்தனர்.

இதேவேளை, செயலாளரின் நடவடிக்கை குறித்து பதில் தவிசாளர் மட்டுமல்ல எதிரணி உறுப்பினர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் கடும் விசனம் தெரிவித்ததுடன் அவரின் தவறுகளையும் சுட்டிக்காட்டினர். (ஓ-115)

# பொது சுகாதாரப் பரிசோதகர்கள் விவகாரத்தில் ஆளுநர் தலையீடு

## கூப்பிட்டதும் அவரிடம் ஓடினர் மருத்துவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச், 15

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிக்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கும் இடையிலான தனிப்பட்ட பிணக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலையீட்டால் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட நிலையில் தற்போது இந்த விவகாரத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மூக்கை நுழைத்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ். கிளை நிர்வாகிகளுக்கும் ஆளுநருக்கும் இடையில் நேற்று இது தொடர்பிலான சந்திப்பு இடம்பெற்றது. ஆளுநர் அழைத்ததின் பேரிலேயே தாம் அவரைச் சென்று பார்த்தார்கள் என்று சங்கத்தின் தலைவர் மருத்துவர் சிறிகரன் தெரிவித்தார்.

பிரதேச சபைகளின் கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை உடனடியாக சுகாதார அமைச்சின் கீழ் கடமையைப் பொறுப்பேற்குமாறு தான் உத்தரவிடுவார் என்று ஆளுநர் மருத்துவர்களுக்கு உத்தரவாதம் அளித்துள்ளார். அந்த உத்தரவை செயற்படுத்த மறுத்தால் சம்பந்தப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களைக் கைது செய்வதற்கு வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் மூலமாகத் தான் நடவடிக்கை எடுப்பார் என்று ஆளுநர் மருத்துவர்களுக்குக் கூறியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமாரைக் கடமை நேரத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மிரட்டினார் என்று பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை மேற்கிளம்பியது. பிணக்கில் சம்பந்தப்பட்ட இருவரும் பொலிஸ்நிலையத்தில் இணங்கிச் சென்று பிணக்கைக் கைவிட்ட பின்னர் இந்தப் பிரச்சினையில் தலையிட்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ். கிளையின் நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச சபைகளின் கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வரவேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைத்துப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் அறிவித்தனர்.

இதன் தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்தில் உள்ள மாவட்ட மற்றும் ஆதார வைத்திய சாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் நேற்று அரை நாள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் அப்பாவி நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பல வைத்தியசாலைகளில் காலையில் வந்த நோயாளர்கள் சிகிச்சைக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி வந்தது.

இந்தப் போராட்டத்துக்குக் காரணமாக மருத்துவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளின் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

பிரதேச சபைகளின் பணிகள் தேவைகள் அதிகரித்திருக்கும் நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பிரதேச சபைகளுக்கு அவசியம் என்றும் அவர்களின் எண்ணிக்கையை இன்னும் அதிகரிக்க வேண்டுமே தவிர குறைக்கக் கூடாது என்றும் வடமாகாண முதலமைச்சர் மற்றும் அதிகாரிகளிடமும் மத்திய அமைச்சர் அதாஉல்லாவிடமும் வலியுறுத்தியுள்ளனர்.

தற்போதுள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்குப் பதிலீடு வழங்கப்படாத வரையில் அவர்களை விடுவிப்பது சாத்தியப்படாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் மருத்துவர்கள் - ஆளுநர் சந்திப்பை அடுத்து பிரதேச சபைகளுக்கு வந்த பொலிஸார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தினார்கள் என்றும் ஆனால் இதில் பொலிஸாரின் பங்கு பணி தேவையற்றது என்பதைத் தாம் அவர்களுக்குப் புரிய வைத்தார்கள் என்றும் பிரதேச சபைத் தலைவர்கள் தெரிவித்தனர்.

(உ-4-9)

# 20 பவுண் நகைகள் பட்டப் பகலில் திருட்டு

## கொக்குவில் மேற்கில் சம்பவம்

வீடொன்றில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 8 இலட்சம் பெறுமதியான 20 பவுண் தங்க நகைகள் மற்றும் 85ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் கொக்குவில் மேற்கு மணியர்பதி ஆலயத்துக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

ஆசிரியரான வீட்டு உரிமையாளர் மற்றும் அவரது மகள் ஆகியோர் காலையில் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். மணியர்பதி ஆலய சப்பரத் திருவிழா நேற்று நடைபெற்ற நிலையில் வீட்டிலிருந்த ஏனையோர் ஆலயத்துக்குச் சென்றிருந்தனர். அந்தச் சமயம் பார்த்து வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய பிள்ளை வீட்டு ஜன்னல்கள் பிரிக்கப்பட்டு பொருள்கள் சிதறிக்கிடப்பதைக் கண்டு தந்தைக்கு தொலைபேசியூடாக தகவல் தெரிவித்தார். அதையடுத்து அவர் இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்துக்கு மோப்ப நாய் சகிதம் சென்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், கைவிரல் மற்றும் பாத அடையாளங்களையும் பதிவு செய்தனர்.

சிறுவர்கள் நுழையக்கூடிய அளவிலேயே வீட்டு யன்னல் பிரிக்கப்பட்டிருந்தது. எனவே சிறுவர்களைப் பயன்படுத்தியே இந்தத் திருட்டு இடம்பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ற)

# புலிகளின் மீள் இணைவே புலம்பெயர் தமிழரின் தேவை

## யாழ். மாவட்ட இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், மார்ச் 15

புலிகளின் மீள் இணைவே புலம்பெயர் தமிழர்களின் தேவையாக உள்ளது என்று கனேடிய தூதுவரிடம் தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் திருமதி ஷெல்லி வைட்டிங் அம்மையார் நேற்று வியாழக்கிழமை பாதுகாப்புப் படைகளின் வடக்குக் கட்டளைத் தலைமையகத்தில் வைத்து கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவை சந்தித்தார். அந்தச் சந்தி ப்பின் போது யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து படைத் தளபதியிடம் இதன் போது தூதுவர் கேட்டறிந்தார். அதன் போதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்புக்குறித்து பலாலி பாதுகாப்பு தலைமையக ஊடகப்பரிவு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

"யாழ். குடாநாட்டில் நிலவும் சமாதானத்தை இல்லாமலாக்கச் சிலர் முயன்று வருகின்றனர். அதுதொடர்பில் பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் உள்ளனர். தேவையான சந்தர்ப்பங்களில் - சம்பந்தப்பட்டவர்களின் வேண்டுகோளுக்கமைய - பொதுமக்கள், சிவில் அமைப்புக்கள்மற்றும்அரசாங்க நிறுவனங்களுக்கு ஒத்தழைப்பு வழங்க இராணுவத்தினர் ஆயத்தமாகஇருக்கின்றனர் என்று தூதுவரிடம் சுட்டிக் காட்டப்பட்டது"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சிறுமிகள் துஷ்பிரயோகம் சிக்கினார் திருமண தரகர்

யாழ்ப்பாணம், மார்ச் 16

பாடசாலைச் சிறுமிகள் இருவரைத் தொடர்ச்சியாக பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்துவந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 60 வயது திருமணத் தரகர் ஒருவர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், நேற்று மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிவான் பஸீர் முகமட் உத்தரவிட்டார்.

10 மற்றும் 12 வயதுடைய இரு சிறுமிகளை குறித்த திருமண தரகர் தொடர்ச்சியாகப் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்துவந்தார் எனக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

அதனால் இரு சிறுமிகளும் பாடசாலை செல்லாமல் இருந்துள்ளனர். அவர்கள் பாடசாலை செல்லாமை குறித்து கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அதையடுத்து அவர் மேற்கொண்ட விசாரணைகளின்போதே இரு சிறுமிகளும் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டு வந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த தரகர் திருமணப் பொருத்தம் குறித்த விடயம் தொடர்பாக அடிக்கடி சிறுமிகளின் தந்தையை சந்திக்க வருவார் என்றும், அப்போதே அவர் சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்தார் எனவும் கூறப்படுகின்றது.

குறித்த இரு சிறுமிகளும் தற்போது மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை அச்சுவேலி குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

**தேவை** தரமான, சுத்தமான

**ஒடியல், புளுக்கொடியல் சிறுதொகையாகவும், மொத்தமாகவும் கொள்வனவு செய்யப்படும்.**

வாடிக்கையாளரின் வசதி கருதி அண்ணா கோப்பி மற்றும் எமது உற்பத்திகளை மொத்தமாகவோ சிறு தொகையாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

கிளை: அண்ணா பாம் சேர்மாதேரு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 021 222 2380

அண்ணா பாம் ஸ்ரேஷன் றோட், இணுவில். 021 720 0900

(சி/12400) (2.6)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் முழுநிலாநாள் கருத்தரங்கு**

| | |
|---|---|
| விடயம் | : காலநிலை மாற்றம் |
| வளவாளர் | : நா. பிரதீபராஜா<br>விரிவுரையாளர், புவியியற்றுறை,<br>யாழ் பல்கலைக்கழகம். |
| காலம் | : நாளை (16.03.2014)<br>ஞாயிற்றுக்கிழமை |
| நேரம் | : பி.ப 3.30 மணி |
| இடம் | : குமாரசுவாமி மண்டபம் |

அனைவரையும் கலந்துகொண்டு
பயன்பெறுமாறு
அன்புடன் அழைக்கின்றோம். (சி/12712) (10)

அனுசரணை:
நவகலா, 200, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி சங்கத்தானை இந்துக் கல் லூரிக்கு அண்மையில் சுற்றுமதில், கிணற் றுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(29786) (7.6.3) தொடர்பு : 078 896 7168

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சபாரத்தினம்



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சபாரத்தினம் (ஓய்வு பெற்ற கட்டட திணைக்கள இயந்திர இயக்குநர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை) நேற்று (14.03.2014) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் சறோயினி தேவியின் அன்புக்கணவரும் மோகனாம்பிகை, சுதர்ஸினி (பிரான்ஸ்), கரிகரன் (கொழும்பு), ரேவதி (ஜேர்மனி), சுதாகரன் (ஜேர்மனி), பாமினி (பிரான்ஸ்), ரோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பகீரதன் (அஸ்வினி இரும்பகம் மல்லாகம்), சிவரூபன் (பிரான்ஸ்), மனோகரதாஸ் (ஜேர்மனி), கேமகுமார் (பிரான்ஸ்), ராஜ்குமார் (கனடா), மேகலா (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருகோணமலை), தீபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், இரத்தினம், Dr.பொன்னம்பலம் மற்றும் புவனேஸ்வரி, பத்மாவதி, சிவசோதி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, பஞ்சாட்சரம் மற்றும் மாலினி காலஞ்சென்றவர்களான குணரத்தினம், பாலசுப்பிரமணியம் மற்றும் சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்லாகம் கிழக்கு, மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர். T. P : 077 1391534

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## மரண அறிவித்தல்

### அம்மையப்பிள்ளை சிவநாதன்



சுந்தரர்பெருமாள் கோயில் ஒழுங்கை ஊரிக்காடு வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட அம்மையப்பிள்ளை சிவநாதன் (சைக்கிள் கடை நாதன்) நேற்று (14.03.2014) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்மையப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் ஏகபுத்திரனும் ஆதிமூலம் - தங்கரெத்தினம் தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கமணி, புஸ்பவதி, திலகவதி மற்றும் வள்ளியம்மா, பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவனேஸ்வரி, சிவகுருநாதன், சிவகுமாரன், சிவரூபன் (ஆசிரியர் யாழ்.கெருடாவில் இ.த.க.பாடசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் தில்லைநாயகம், விக்னேஸ்வரி, பாமினி ஆகியோரின் மாமனாரும் கயலிசை, கதிர்ச்செல்வன், கேசினி, துளசிகா ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.03.2014) சனிக்கிழமை சோந்தம்பை (சிங்கம் கடை அருகில்) கம்பர்மலையில் உள்ள அவரது மகன் சிவரூபனின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மயிலிதனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு : சிவகுருநாதன் (077 5099111), சிவகுமாரன் (077 9265906), சிவனேஸ்வரி (077 8870749), சிவரூபன் (077 4530788)

தகவல்
குடும்பத்தினர்.

## புற்றுநோய் ஆண்கள் விடுதி தெல்லிப்பழைக்கு மாற்றம்

### விசேட போக்குவரத்துச் சேவை ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 15

புற்றுநோயாளர்களின் நலன் கருதி யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து தெல்லிப்பழை ட்ரெயில் புற்றுநோய் வைத்தியசாலைக்கு நாளை மறுதினம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விசேட போக்குவரத்துச் சேவை இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பருத்தித்துறை வீதி நுழைவாயில் அருகிலிருந்துதினமும்காலை7.30மணி முதல் மாலை 4 மணி வரை 2மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை இந்தப் போக்குவரத்துச்சேவை இடம்பெறவுள்ளது. அதேபோன்று தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்தும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ். போதனா வைத்தியசாலைக்கான போக்குவரத்துச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கிவந்த புற்றுநோய் ஆண்கள் விடுதி (26ஏ) தெல்லிப்பழை ட்ரெயில் புற்றுநோய் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு வருகிறது.

இதனால் நேற்று முதல் மூன்று தினங்கள் இந்த விடுதியின் அனைத்துச் செயற்பாடுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை பெண்களுக்கான விடுதி மறு அறிவித்தல் வரை யாழ்.போதனா வைத்தியசாலையிலேயே தொடர்ந்து இயங்கவுள்ளது. (ஒ-400)



குடாநாட்டுக்கு வருகை தந்த கனேடிய உயர் ஸ்தானிகர் ஷலி வைற் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெல்லிப்பழை பகுதிக்கும் சென்றிருந்தார். அவ்வேளை கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்துக்குச் சென்ற அவர் தனது வருகையின் நினைவாக மரக்கன்று ஒன்றை நட்டு வைத்தார். (ஒ-10)

### மஹா கும்பாபிஷேகம்

தெல்லிப்பழை, மார்ச் 15


தெல்லிப்பழை வீணாக்கடவை ஸ்ரீகாசி விநாயகர் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.42 மணி தொடக்கம் 10.49 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

கிரியைகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் வைபவம் இடம்பெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ ஜெகன் செந்தில்நாதக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியைகள் இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 24 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஒ)

## வண்ணை சிவன் ஆலய தேர்த் திருவிழா நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 15



யாழ்.வண்ணை வைத்தீஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. காலை 7.30 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு விநாயகர், முருகன், அம்பாள், சண்டேஸ்வரர் ஆகிய பரிவார மூர்த்திகளும், வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானும் அழகிய ஐந்து தேர்களில் ஆரோகணித்து வீதி வலம் வரவுள்ளனர்.

ஆலயத்தின் கிழக்கு வீதியான காங்கேசன்துறை வீதி வழி வந்து முட்டாஸ் கடைச் சந்தியை அடைந்து மானிப்பாய்வீதி வழியாக வைத்தீஸ்வர வித்தியாலயச் சந்தியை அடைந்து சிவன் வடக்கு வீதி வழியாக மீளவும் காங்கேசன்துறை வீதியை அடைந்து பிற்பகல் ஒரு மணிக்கு ஐந்து தேர்களும் ஆலயத்தைவந்தடையவுள்ளன.

கடந்தகால போர்ச் சூழலில் பாதிக்கப்பட்டிருந்ததும், ஆலய இரண்டாம் வீதியில் அமையப் பெற்றதுமான வெண் கற்களாலான வசந்த மண்டபம் இம்முறை புனரமைக்கப்பட்டு அந்த மண்டபத்திலே பெருந்திருவிழா வசந்த மண்டப் பூசைகள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (ஒ)

## தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி நந்திக் கடலில் மீன்பிடித்த இருவர் கைது

### தலா 5 ஆயிரம் ரூபா தண்டம்; வலைகள் பறிமுதல்

முல்லைத்தீவு, மார்ச் 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப் போரின்எண்ணிக்கைநாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது என்று முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் பரப்பில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் சிலர் மீன்பிடிப்பதாக முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்குக் கிடைத்தது. குறிப்பிட்ட தகவலைத் தொடர்ந்து பிரதிப் பணிப்பாளர் தலைமையில்விரைந்துசென்ற அதிகாரிகள் முக்கூட்டு வலைகளைப் பயன்படுத்தி இருவர் மீன்பிடிப்பதில்ஈடுபட்டுக்கொண்டிருப்பதை அவதானித்தனர்.

அவர்களிடமிருந்த வலைகளைக் கைப்பற்றிய அதிகாரிகள் இரு மீனவர்களையும் கைது செய்து முல்லைத்தீவு நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். சம்பவம் குறித்து விசாரணை செய்த நீதிவான் இரு மீனவர்களுக்கும் தலா5000ரூபாஅபராதம்விதித்ததுடன், கைப்பற்றப்பட்ட வலைகளை அரசுடைமையாக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து கொக்கிளாய் கடலேரியில் தேடுதல் நடத்திய அதிகாரிகள் அநாதரவான நிலையிலிருந்த 2 லட்சம்ரூபாபெறுமதியானகூட்டு வலைகளைக் கைப்பற்றி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பாரப்படுத்தினர். இது குறித்து விசாரணை செய்த நீதிவான் வலைகளை அழிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஒ-115)

## தனியார் கல்வி நிலையத்தில் புகுந்து அடிதடி; ஊழியர் காயம்

### கைதான நால்வருக்கு மறியல்

வலி. வடக்கு, மார்ச் 15

தனியார் கல்வி நிலையத்துள் புகுந்து அங்கு கடமையில் இருந்த ஊழியரை தடிகள் பொல்லுகளினால் தாக்கிப் படுகாயப்படுத்தியதுடன், சொத்துகளுக்கும் சேதம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் கைதாகி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நான்கு சந்தேக நபர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரைவிளக்கமறியலில்வைக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் இணுவில் கிழக்கில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்துக்குள் ஏழு பேர் முகத்தை மூடி மறைத்துக் கட்டிய வண்ணம் உட்புகுந்து அங்கு கடமையில் இருந்த கோண்டாவில் தில்லையம்பதியைச் சேர்ந்த எஸ்.இராதா (வயது - 52) என்ற ஊழியரைத் தாக்கியதுடன் தளபாடங்களையும் அடித்து உடைத்துள்ளார்கள்.

படுகாயமுற்ற ஊழியர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டது.

உடனடியாக விசாரணையில் இறங்கிய பொலிஸார் நான்கு சந்தேக நபர்களைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். சந்தேகநபர்களைஎதிர்வரும்21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஒ-86)

## வலி.கிழக்கில் முதல் முறையாக பம்பாய் வெங்காயச் செய்கை

அச்சுவேலி, மார்ச் 15

வலி. கிழக்குப் பிரிவில் முதல் தடவையாக பம்பாய் வெங்காய பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுப்பிட்டி உபதபால் அலுவலகத்துக்கு அருகில், பிரதான வீதியோரமாக உள்ள தோட்டத்தில் பம்பாய் வெங்காய நாற்றுக்கள் நடுகை செய்யப்பட்டு நல்ல விளைச்சல் தரும் நிலையில் வளர்ந்துள்ளன.



பம்பாய் வெங்காயம், இது வரை காலமும் அராலி, வட்டுக்கோட்டை, மூளாய், சுழிபுரம் போன்ற பகுதிகளிலேயே கணிசமான அளவு செய்கை பண்ணப்பட்டு வந்தது. இந்த வருடம், முதல் தடவையாக வலி. கிழக்குப் பிரிவில் சிறுப்பிட்டி வயல் வெளியில் உள்ள தோட்டத்தில் இது பயிரிடப்பட்டுள்ளது.

நாற்றுப்போட்டு நடுகை செய்யப்பட்ட பம்பாய் வெங்காய பயிர்கள் ஆரோக்கியமான நிலையில் வளர்ந்து வருகின்றன. இதனை வீதியால் போக்குவரத்துச் செய்யும் பயணிகள் மற்றும் விவசாயிகள் அக்கறையோடு அவதானித்து வருகின்றனர்.

அத்துடன் தாங்களும் குறிப்பிட்ட பயிர்ச் செய்கையில் ஈடுபடுவது தொடர்பாக பயிர்ச் செய்கை மேற் கொண்ட விவசாயியுடன் கருத்துக்களைக் கேட்டறிந்து வருகின்றனர்.

எதிர்பாராத நிலைமையில் பம்பாய் வெங்காயப் பயிர்ச் செய்கையில் தாம் ஈடு பட வேண்டி ஏற்பட்டதாகவும், எதிர்பார்த்ததிலும் பார்க்க பயிர்கள் வளர்ந்து நல்ல விளைச்சல் தரும் நிலையை அண்மித்துக் கொண்டிருப்பதாகவும் குறித்த பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தெரிவித்தனர். (ஒ-11)

### கட்டடத் திறப்புவிழா

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழன் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சங்கத்தலைவி திருமதி ஜெபமணி ஜோசெப் தலைமையில் அரசடிவீதி, கந்தர்மடத்தில் உள்ள சங்கத்தின் புதிய கட்டடத்தில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசஅதிபர்சுந்தரம்அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வின் அறிமுகவுரையை சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி ருக்மணி ஆனந்தவேலும், சிறப்புரைகளை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவி திருமதி சறோஜா சிவசந்திரன் , யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன், நல்லூர் பிர தேச செயலர் பா.செந்தில் நந்தனன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (ஒ-400)

## வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை இரண்டாம் தவணை முதல் இயங்கும்

### 20 வருடங்களின் பின்னர்

அச்சுவேலி, மார்ச் 15

மூடப்பட்டிருந்த வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை 20 வருடங்களின் பின்னர் மீண்டும் இரண்டாம் தவணையில் இருந்து அதே இடத்தில் செயற்படவுள்ளது. இதற்கான அனுமதியை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வழங்கியுள்ளார்.

1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் செயற்பட்டு வந்த வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை 1996 ஆம் ஆண்டுடன் மூடப்பட்டது. பாடசாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நீண்டகாலமாக பாடசாலைச் சமூகம் மேற்கொண்டு வந்த முயற்சி கைகூடியுள்ளது.

அமெரிக்கன் மிஷன் பாடசாலையைமீண்டும்திறப்பது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை வளலாய் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சு.சற்குணராசா உள்ளிட்ட உயர் அதிகாரிகள் குழு குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டது.

> பாடசாலையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நீண்ட காலமாக பாடசாலைச் சமூகம் மேற்கொண்டு வந்த முயற்சி கைகூடியுள்ளது.

அமைச்சர் களநிலையை நேரில் பார்வையிட்டு பாடசாலைச் சமூகத்தின் கருத்துக்களை செவிமடுத்ததோடு பாடசாலை இந்த வருடம் இரண்டாம் தவணையில் இருந்து ஆரம்பப் பாடசாலையாக செயற்படும் என்று அங்கு அறிவித்தார். பாடசாலை உரிய முறையில் செயற்பட வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். கலந்துரையாடலில் மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, அதிபர் எஸ்.திருச்செல்வம், ஓய்வுநிலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வ.கந்தசாமி, ஓய்வுநிலை திட்டமிடல் பணிப்பாளர் நா.மகேந்திரன், ஓய்வுநிலை அதிபர் எஸ். சிவசம்பு, ஆசிரியை தி.இராமசாமி ஆகியோர் பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி உரையாற்றினர். (ஒ-11)

## காங்கிரஸின் 2 ஆம் பட்டியலில் நாராயணசாமி உட்பட 71 பேர்

புதுடில்லி,மார்ச் 15

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு காங்கிரஸின் இரண்டாவது வேட்பாளர் பட்டியல் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. இதில் மத்திய இணை அமைச்சர் வி. நாராயணசாமி உட்பட 71 பேரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

மத்திய பெற்றோலியத் துறை அமைச்சர் வீரப்ப மொய்லி மீண்டும் சிக்பலாபூரிலும், தட்சிண கன்னடா தொகுதியில் முன்னாள் மத்திய அமைச்சர் ஜனார்த்தன பூஜாரியும் போட்டியிடுகின்றனர். மற்றொரு முன்னாள் அமைச்சரான சுபோத் காந்த் சஹாய், ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். கேரளாவின் திருவனந்தபுரத்தில் மத்திய அமைச்சர் சசிதரூர் மீண்டும் போட்டியிடுகிறார். ரயில்வேத்துறை அமைச்சராக இருந்தபோது ஊழல் புகாரால் பதவியை இழந்த பவன்குமார் பன்சலுக்குக் கடும் எதிர்ப்புகளுக்கு இடையே சண்டீகர் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அமைச்சர்கள் வி.நாராயணசாமி - புதுச்சேரி, முல்லப்பள்ளி ராமச்சந்திரன் -வடகரா, கே.வி.தாமஸ் - எர்ணாகுளம், கே.சி. வேணுகோபால்- ஆலப்புழா ஆகிய தொகுதிகளில் போட்டியிடுகின்றனர். நாடாளுமன்ற கூட்டுக் குழுத் தலைவர் பி.சி. சாக்கோ, சாலக்குடி தொகுதியில் போட்டியிடுகிறார்.

இந்தப் பட்டியலை அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவரான மதுசூதன் மிஸ்திரி வெளியிட்டார். தமிழகத்தில் கூட்டணி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக இப்போதும் கருதப்படுவதால், தமிழக வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படவில்லை. இன்னமும் சில நாள்களில் தமிழக வேட்பாளர் பட்டியலும் வெளியிடப்படும் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (து)

# மோடியை முன்னிலைப்படுத்தும் ஊடகவியலாளர்களுக்குச் சிறை


## கேஜ்ரிவால் எச்சரிக்கை

புதுடில்லி,மார்ச் 15

ஆம் ஆத்மி கட்சி ஆட்சிக்கு வந்தால் நரேந்திர மோடிக்கு ஆதரவாகச் செயற்படும் ஊடகவியலாளர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு அவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என அரவிந்த் கேஜரிவால் கூறியுள்ளார்.

அண்மையில் நாக்பூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசிய கேஜரிவால், பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியிடம் ஊடகங்கள் விலை போய்விட்டதாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

மோடியிடம் இந்திய ஊடகங்கள் விலை போய்விட்டன என கேஜரிவால் பேசிய காட்சி, தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பானது.



கேஜ்ரிவால்

ஏற்கெனவெ பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியுள்ள கேஜரிவாலின் இந்தப் பேச்சு அரசியல் வட்டாரத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

கேஜரிவால் தனது பேச்சில், கடந்த ஓராண்டாக ஊடகங்கள் மோடி புகழ்பாடுகின்றன. குஜராத்தில் ராம ராச்சியம் நடப்பதாகவும், ஊழல் அழிந்து விட்டதாகவும் கூறுகின்றன. ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் குஜராத்தில் 800 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். இது பற்றி எந்தத் தொலைக்காட்சியிலும் செய்தி வரவில்லை. மாறாக மோடி புகழ் பாடுவதற்குக் காரணம், நரேந்திர மோடியிடம் ஊடகங்கள் விலை போய்விட்டதே ஆகும்.

ஆம் ஆத்மி கட்சி அதிகாரத்துக்கு வந்தால், நரேந்திர மோடிக்கு ஆதரவாகச் செயற்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிராக விசாரணை குழு அமைத்து விசாரணை நடத்தப்படும். மோடி ஆதரவு ஊடகவியலாளர்கள் சிறையில் அடைக்கப்படுவர். மோடியை முன்னிலைப்படுத்துவதற்கு பா.ஜ.கவிடம் இருந்து தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு மிகப் பெரிய தொகை வழங்கப்பட்டுள்ளது என்று அவர் பேசியிருந்தார்.


இந்நிலையில், ஊடகவியலாளர்கள் குறித்த பேச்சு குறித்து கேஜரிவாலிடம் செய்தியாளர்கள் நேற்றுக் கேட்டபோது, தன் மீதான குற்றச்சாட்டை திட்ட வட்டமாக மறுத்ததோடு, ஊட கவியலாளர்களை எப்படி நான் பகைத்துக் கொள்வேன்? எனக் கேள்வி எழுப்பினார்.

கேஜரிவாலின் இந்தச் சர்ச்சையான கருத்துக்கு பா.ஜ.க. இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. (து)



பா.ஜ.க.வின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியின் சுவரொட்டிகளை தாங்கியவாறு ஆயத்தமாகவுள்ள வாகனங்கள் இவை. (து)

## நடிகர் ரஜினியை சந்தித்தார் அழகிரி



ரஜனியுடன் மு.க. அழகிரி, மகன்

சென்னை,மார்ச் 15

முன்னாள் மத்திய அமைச்சரும், தி.மு.க முன்னாள் தென் மண்டல அமைப்புச் செயலருமான மு.க.அழகிரி நேற்றுக் காலை நடிகர் ரஜினிகாந்தைச் சந்தித்தார்.

சென்னை போயஸ் கார்டனில் உள்ள ரஜினியின் இல்லத்துக்கு தனது மகன் தயாநிதியுடன் சென்றார் அழகிரி. பின்னர் இருவரும் நடிகர் ரஜினியைச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அழகிரி: ரஜினிகாந்த் எனது நீண்ட கால நண்பர்.

அவரைச் சந்தித்து நலம் விசாரித்து வாழ்த்துச் சொல்லவே வந்தேன். மற்றப்படி வேறு எந்த அரசியல் பேச்சும் அவரிடம் பேசவில்லை. மன ஆறுதலுக்காகவே சந்தித்தேன் என்றார். மேலும், இது மரியாதை நிமித்தமான சந்திப்பு என்றும் கோச்சடையான் பாடல் களைக் கேட்டு ரசித்ததாகவும், அதற்காக ரஜினியைப் பாராட்டியதாகவும் அழகிரி கூறினார்.

நேற்று முன் தினம் டில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை, அழகிரி சந்தித்தார். ஏற்கெனவே ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ, பா.ஜ.க தலைவர் ராஜ்நாத் சிங் ஆகியோரையும் அழகிரி அண்மையில் சந்தித்திருந்தார். தி.மு.கவில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட அழகிரி தொடர்ந்து அரசியல் தலைவர்களைச் சந்தித்து வருவது அரசியல் வட்டாரத்தில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (து)

## ஆம் ஆத்மி கட்சியில் பத்திரிகையாளர் ஞாநி


### தயாநிதி மாறனை எதிர்த்துப் போட்டி?

புதுடில்லி,மார்ச் 15

மூத்த பத்திரிகையாளரும், அரசியல் விமர்சகருமான ஞாநி, ஆம் ஆத்மி கட்சியில் நேற்று வெள்ளிக்கிழமை இணைந்து கொண்டுள்ளார். அவர் அக்கட்சி சார்பில் மக்களவைத் தேர்தலில் போட்டியிடுவார் எனத் தெரிகிறது.

கட்சியில் சேருவது குறித்து ஆரம்பத்தில் பிடிகொடுக்காமல் இருந்த ஞாநி, தற்போது மக்களவைத் தேர்தல் நெருங்கும் சூழலில் ஆம் ஆத்மி கட்சியில் இணையும் முடிவை எடுத்துள்ளார்.

ஞாநிக்கு அரசியல் புதிதல்ல.



ஞாநி

ஒரு முன்னணி ஆங்கிலப் பத்திரிகையில் பணியாற்றிய காலத்திலேயே தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் அவர். பின்னர், இடதுசாரி இயக்கம் சார்ந்த பல மேடைகளில் ஒரு விமர்சகராக, பேச்சாளராக முழங்கியவர்.

ஈழப் பிரச்சினை பெரும் தீயாகக் கொழுந்துவிட்டு எரிந்த 1980 களின் இறுதியில் ஈழத் தமிழர் நலன் சார்ந்த போராட்டங்களில் திராவிட இயக்கத்தினரோடு கைகோர்த்தார். போபர்ஸ் பீரங்கி ஊழல் எதிர்ப்புப் பிரசாரங்களில் தீவிரமாக ஈடுபட்ட அவர், அந்தக் கால கட்டத்தில் ராஜீவ் காந்தியை எதிர்த்துவி.பி.சிங்கின் ஜன் மோர்ச்சாவைத் தொடங்கியபோது தமிழகத்தில் அதன் தொடக்க விழாவில் வி.பி.சிங் கின் பேச்சை மொழிபெயர்த்தார்.

பிறகு தி.மு.க.வும் வி.பி.சிங்கின் ஜனதா தளமும் சேர்ந்து தேசிய முன்னணியை உருவாக்கியபோதும் மேடையில் தலைவர்களின் உரைகளுக்கு மொழிபெயர்ப்பாளராகச் செயற்பட்டார்.

அந்த நாள்களில் தி.மு.க.வோடு மிக நெருக்கமாக இருந்த ஞாநி, கூடிய விரைவிலேயே அந்த இயக்கம் தந்த ஏமாற்றத்தின் விளைவாக தி.மு.க. வை விட்டும், அரசியலை விட்டும் ஒதுங்கியே இருந்தார். இப்போது முதல்முறையாக ஆம் ஆத்மி கட்சியின் மூலம் நேரடி அரசியலில் கால் பதிக்கிறார். (து)

## ராகுலுக்கு எதிராக பரப்புரை இல்லை

### வருண் காந்தி கூறுகிறார்

புதுடில்லி,மார்ச் 15

வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்திக்கு எதிராகப் பரப்புரை செய்யப் போவதில்லை என அவரது சகோதரரும், பா.ஜ.க வேட்பாளருமான வருண் காந்தி தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்தி உத்தரப் பிரதேச மாநிலம் அமேதி தொகுதியில் இருந்து போட்டியிடுகிறார். அவரது சகோதரரும் பா.ஜ.கவைச் சேர்ந்தவருமான வருண் காந்தி உத்தரப் பிரதேச மாநிலம் சுல்தான் பூரில் இருந்து போட்டியிடுவார் எனத் தெரிகிறது. இவர் தற்போது பிலிபிட் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். பிலிபிட்டில் இம்முறை மேனகா காந்தி போட்டியிடுவார் என்பதால் அந்தத் தொகுதிக்குப் பதிலாக சுல்தான்பூர், வருணுக்கு ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய வருண் காந்தி, அரசியலில் சில கோட்பாடுகளைப் பின்பற்றுகிறேன். அவற்றை ஒருபோதும் மீற மாட்டேன். எனவே ராகுலுக்கு எதிராக நான் பிரசாரம் செய்யப் போவதில்லை - என்றார். (து)

## சிதம்பரம் போட்டியிடாவிடின் சிவகங்கையில் நாச்சியப்பன்

புதுடில்லி,மார்ச் 15

சிவகங்கைத் தொகுதியில் ப.சிதம்பரம் போட்டியிடவில்லை என்றால் நான் போட்டியிடத் தயார் என்று மத்திய தொழில் துறை இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்துள்ளார்.

வலுவான கூட்டணி அமையாததால், இந்த முறை சிவகங்கைத் தொகுதியில் தனக்குப் பதிலாக மாற்று வேட்பாளரை நிறுத்தத் திட்டமிடுகிறார் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம்.

இது குறித்துப் பேசிய சுதர்சன நாச்சியப்பனின் ஆதரவாளர்கள், 1999 இல் சிவகங்கைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட சுதர்சன நாச்சியப்பன் ப.சிதம்பரத்தை வீழ்த்தி நாடாளுமன்ற உறுப்பினரானார். ஆனால், 2004 தேர்தலில் மீண்டும் காங்கிரஸில் இணைந்த சிதம்பரத்துக்குச் சிவகங்கைத் தொகுதியை விட்டுத் தரவேண்டும் எனச் சோனியா கேட்டபோது, மறுக்காமல் விட்டுக் கொடுத்தார் நாச்சியப்பன். அதற்குப் பிரதிபலனாக அவரைத் தொடர்ந்து இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக்கிய சோனியா, அண்மையில் அமைச்சரவையிலும் இடமளித்தார்.



சுதர்சன நாச்சியப்பன்

2016 மே மாதம் வரை நாச்சியப்பனின் பதவிக் காலம் இருக்கிறது. இந்நிலையில், தோற்றுவிடுவோமோ என்ற பயத்தில் சிதம்பரம், வாசன், தங்கபாலு உள்ளிட்ட காங்கிரஸ் முக்கிய தலைவர்கள் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிவிட்டனர்.

மியன்மார் சென்றிருக்கும் நாச்சியப்பன் திரும்பி வந்த பின்னர் டில்லியில் சோனியாவைச் சந்தித்து இது குறித்துப் பேசவிருப்பதாகக் கூறினார்.

சுதர்சன நாச்சியப்பனைத் தொடர்பு கொண்டபோது, வெற்றி, தோல்வி என்பது யாருக்கும் நிரந்தரமில்லை. சிவகங்கைத் தொகுதியில் சிதம்பரம் போட்டியிடுவதாக இருந்தால் அதை வரவேற்று வழிவிடுவோம். அதில்லாமல், மாற்று வேட்பா ளரை நிறுத்துவதாக இருந்தால் அந்த வாய்ப்பை எனக்குத் தாருங்கள் என்று சோனியா காந்தியிடம் கேட்கப் போகிறேன் - என்றார். (து)

## ஏலத்துக்கு வருகின்றது சமாதான நோபல் பரிசு




நோபல் பரிசுப் பதக்கம்

நியூயோர்க்,மார்ச் 15
தென்னமெரிக்க நகைக் கடை ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்ட 1936 ஆம் ஆண்டின் சமாதானத்துக்கான நோபல் பரிசுப் பதக்கம் ஒன்று நியூயோர்க்கில் ஏலத்துக்கு வரவுள்ளது.

பரகுவேக்கும் பொலிவியாவுக்கும் இடையிலான போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான சமரச நடவடிக்கைகளை மேற்கொண்ட ஆர்ஜென்ரீனாவின் வெளியுறவு அமைச்சரான கார்லொஸ் சாவேந்திரா லமாஸுக்கு இந்தப் பதக்கம் வழங்கப்பட்டிருந்தது. நிறையக் காலம் காணாமல் போயிருந்த இது, பின்னர் அமெரிக்க அரும்பொருட் சேக ரிப்பாளர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டது.

23 கரட் தங்கத்தினாலான இந்தப்பதக்கம்ஒருலட்சம்பொலர்களுக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த)



தாய்லாந்தில் தேசிய யானைகள் தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி அங்கு பல இடங்களிலும் யானைகள் அலங்கரிக்கப்பட்டு வீதிகள் ஊடாக ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. ஊர்வலங்களின் முடிவில் யானைகளுக்கு பழங்கள், கரும்பு மற்றும் உணவுப் பண்டங்கள் படைக்கப்பட்டு பௌத்த பிக்குகள் விசேட வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.

## அரச குடும்பத்தின் தொலைபேசி விவரக் கொத்தை பத்திரிகைக்கு வழங்கினார் இளவரசி டயானா



டயானா - சார்ள்ஸ் தம்பதிகள் எலிசபெத் மகாராணியுடன்

லண்டன், மார்ச் 15
தனது கணவர், இளவரசர் சாள்ஸுடன் மோதுவதற்கு, அரச குடும்பத் தொலைபேசி விபரக்கொத்தை பிரிட்டிஷ் பத்திரிகைக்கு, இளவரசி டயானா வழங்கினார் என்று பிரிட்டனின் மூடப்பட்ட நியூஸ் ஒப் தெ வேல்ட் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர், கிளைவ் குட்மேன், கூறியிருக்கிறார்.

பொதுமக்களின் தொலைபேசி உரையாடல்களை அந்தப் பத்திரிக்கை ஒட்டுக்கேட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணையின்போது, நீதிமன்றத்தில் சாட்சியமளித்த கிளைவ் குட்மேன் , தனது கணவருடனான மோதலில் , தனக்குப் பத்திரிக்கை உலகில் கூட்டாளிகளைத் தேடும் முயற்சியிலேயே இளவரசி டயானா இந்த வேலையைச் செய்தார் என்று கூறினார்.

குட்மேன் இந்த அரச குடும்பத் தொலைபேசி விபரக் கொத்தை பொலிசாருக்குப் பணம் கொடுத்து சட்டவிரோதமாகப் பெற்றார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்படுகிறது. அதை அவர் மறுக்கும்போதே இந்தத் தகவலை வெளியிட்டார்.


தனது கணவர் இளவரசர் சாள்ஸிடமிருந்து 1992 இல், 11 ஆண்டு கால மணவாழ்வுக்குப் பின்னர் பிரிந்த இளவரசி டயானா, இந்தத் தொலைபேசி விபரக்கொத்தைத் தனது பத்திரிக்கை அலுவலகத்துக்கு அனுப்பினார் என்றும், அது தனது தபால் பெட்டியில் வந்து சேர்ந்தது என்றும் குட்மேன் கூறினார்.

இளவரசி டயானா அந்தக் காலகட்டத்தில் மிகவும் ஒரு சிரமமான மனோநிலையில் இருந்தார் என்று கூறிய குட்மேன், தன்னைச் சுற்றிலும், இளவரசர் சாள்ஸுக்கு நெருக்கமான ஆள்கள் குவித்து வைக்கப்பட்டிருந்ததாக அவர் கருதியதாகக் கூறினார்.

இந்தத் தொலைபேசி விபரக்கொத்தை அனுப்பிய பின்னர், தன்னைத் தொலைபேசியில் அழைத்து, இந்தப் புத்தகம் கிடைத்துவிட்டதா என்பதை அவர் சரி பார்த்துக்கொண்டார் என்றும் குட்மேன் கூறினார். (த)

## சீனாவில் மீண்டும் கத்திக் குத்து 3 பேர் கொலை; ஒருவர் காயம்

### நேற்றுக் காலை ஆயுததாரிகள் வெறியாட்டம்



சுட்டுக் கொல்லப்பட்ட தாக்குதலாளி ஒருவர்

பீஜிங்,மார்ச் 15
மத்திய சீனாவில் நேற்றுக் காலை நடந்த பங்கரவாதத் தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டனர். சீனாவின் ஹனான் மாகாணத்தில் உள்ள சங்ஷா பகுதியில் ஆயுததாரிகள் சிலர் பொது மக்கள் மீது கண்டபடி கத்திகளால் குத்தி இந்தக் கொலைவெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இதனால் மக்கள் சிதறி ஓடினர். அங்கு சிறிது நேரம் பரபரப்பான நிலை ஏற்பட்டது.

இந்தத் தாக்குதலில் மூன்று பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார்.

தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். அவர்களைத் தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டனர். இதன்போது தாக்குதலை நடத்திய ஒருவரைப் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டு கொன்றுள்ளனர்.

கடந்த 2 வாரங்களுக்கு முன்பு நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கிய இது போன்ற ஒரு தாக்குதலில் 29 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் இது பங்கர வாதத் தாக்குதல் அல்ல இது கோஷ்டி மோதலால் ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கான காரணம் என்னவென்று இது வரை தெரியவில்லை.

எனினும் சீனாவில் சிறுபான்மையினராக வாழ்கின்ற முஸ்லிம்களின் போராட்டக் குழுவே இந்த தாக்குதலை மேற்கொண்டிருப்பதாக சீன அரசு குற்றம் சுமத்தி இருக்கிறது. (த)

## அமெரிக்கா-ரஷ்யா மீண்டும் பேச்சு

லண்டன்,மார்ச் 15
உக்ரைன் விவகாரம் தொடர்பில் அமெரிக்காவும் ரஷ்யாவும் மீண்டும் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளன.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி மற்றும் ரஷ்யாவின் வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லவ்ரோவுக்கு இடையில் இந்தச் சந்திப்பு லண்டனில் இன்று இடம்பெறவுள்ளது.

இந்தப் பேச்சு நாளை ஞாயிற்றுக்கிழமை கிரைமியாவில் நடைபெற வுள்ள கருத்துக் கணிப்பை மையப்படுத்தியதாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவினால் நடத்தப்படும் இந்தக் கருத்துக் கணிப்பு மற்றும் கிரைமியாவில் நிலை கொள்ளச் செய்யப்பட்டுள்ள ரஷ்யப் படையினர் போன்றவை தொடர்பில் ஜோன் கெரி, ரஷ்யாவிடம் கண்டனம் தெரிவிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## உக்ரைனுடன் போரை விரும்பவில்லை


மொஸ்கோ,மார்ச் 15
யுக்ரேனுடன் யுத்தத்தை விரும்பவில்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை அவசரமாக கூட்டப்பட்ட வேளையில் யுக்ரேன் இடைக்கால பிரதமர் அர்செனி யெட்சன்யுக்கின் நேரடியான கேள்வியொன்றுக்குப் பதிலளித்த போதே ரஷ்யாவின் ஐ.நாவுக்கான தூதுவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்

கிரைமியாவுக்கு ரஷ்யாவுடன் இணைவது தொடர்பான பொது வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு உரிமை இருப்பதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது

இந்நிலையில் உக்ரைனின் எல்லைக்கு அருகே 8000 ரஷ்யப் படையினர் இராணுவப் பயிறசிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தப் பயிற்சிகளில் எறிகணைகள், ரொக்கட் ஏவுகணைகள் தொடர்பான பயிற்சிகளும் இடம்பெறுவதாக ரஷ்ய ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன. (த)

## இந்தியப் பெருங்கடல் பகுதியில் மலேசிய விமானம் தேடும் பணி



நியூயோர்க்,மார்ச் 15
கடந்த சனிக்கிழமை காணாமல் போன மலேசியன் எயார் லைன்ஸ் விமானத்தைத் தேடும் பணிகள் இந்தியப் பெருங்கடல் பகுதிக்குத் திரும்பியிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கோலாலம்பூரிலிருந்து பீஜிங் சென்று கொண்டிருந்த மலேசியன் எயார்லைன்ஸ் விமானம் 239 பயணிகளுடன் காணாமல் போனது.

விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என்று அஞ்சப்படும் அந்த விமானத்தின் பாகங்களைத் தேடும் பணியில் மலேசியா , சீனா, சிங்கப்பூர், வியட்நாம் ஆகிய நாடுகள் முதலில் ஈடுபட்டன.

பிறகு அந்தப் பணியில் அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்துள்ளன.

தேடும் முயற்சிகள் முதலில் மலேசியாவுக்கு கிழக்கே உள்ள தென் சீனக் கடல் பரப்பில் நடந்து வந்தன. அங்கு தான் காணாமற்போன விமானத்திலிருந்து கடைசியாக வான் போக்குவரத்துக் குழுவுடன் விமானிகள் தொடர்பில் இருந்தனர்.

ஆனால் இப்போது சில புதிய தகவல்கள் கிடைத்திருப்பதால் இந்த முயற்சி மலேசியாவுக்கு மேற்காக, இந்தியப் பெருங் கடல் பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த விமானம் ராடர்களின் பார்வையில் இருந்து மறைந்த பின்னர் பல மணி நேரங்கள் செய்கோள் ஒன்றுக்கு தரவுகளை அனுப்பிக்கொண்டிருந்திருக்கலாம்என்றுசில அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தி ருந்தன.

ஆனால் புதிதாகக் குறிப்பிடத்தக்க துப்பு எதுவும் கிடைக்கவில்லை. புதிய கோணத்தில் விசாரணை நடக்கிறது அவ்வளவுதான் என்று வெள்ளை மாளிகைக்காகப் பேசவல்ல அதிகாரி ஜே கார்னி தெரிவித்தார்.

அமெரிக்கக் கடற்படைக் கப்பலான யுஎஸ்.எஸ் கிட் தாய்லாந்து வளைகுடாவிலிருந்து மலேசியாவின் மேற்குக் கடற்கரைக்கு விரைகிறது என்று அமெரிக்கக் கடற்படை அறிவித்திருக்கிறது.

இதற்கிடையே, ஏற்கனவே, இந்தியக் கடற்படை, விமானப் படை மற்றும் கடலோரக் காவல்படைகளும் இந்த முயற்சியில் மலேசிய அரசின் வேண்டுகோளுக்கிணங்க இறங்கியிருக்கின்றன. (த)

## மூன்றாம் வார வெற்றியாளர்கள் (09.03.2014)

**வாரம் 50 பரிசுகள்**

உதயன் சூரியகாந்தி

# பரிசு மழையில் நனையுங்கள்

**வெல்லுங்கள் கொண்டாடுங்கள்**

**வெற்றி நிச்சயம்**

### 7,500/=
பெறுமதியான 1 பரிசு கூப்பன்

கிறீன் கிறாஸ் ஹோட்டல்
Green Grass

1. மரியதாஸ் டெனிஸ்ரா
3 ஆம் மைல்கல், சிலாவத்தை

### 5,500/=
பெறுமதியான 1 பரிசு கூப்பன்கள்

SAAMSON LANGUEGE SCHOOL

2. கைலாசநாதன் பிரணவன்
சரஸ்வதி வித். லேன்,
மயிலி ஓடை, கரவெட்டி

### 1,000/=
பெறுமதியான 10 பரிசு கூப்பன்கள்

லலிதா ஜுவலறி
யாழ்ப்பாணம்.

ராசி கலெக்சன்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**1.அஜந்தனா திரவியநாதன்**
மருதங்கேணி தெற்கு, தாளையடி
**2.வெற்றிவேலு எழிலரசி**
புலோலி வடமேற்கு தம்பசிட்டி பருத்தித்துறை
**3. சிறிதரன் புஸ்பகாந்தா**
8 ஆம் வட்டாரம், மண்டைதீவு மேற்கு, மண்டைதீவு.
**4. திருமதி சிவறஞ்சினி கருணாகரன்**
பிரதேச வைத்தியசாலை, அக்கராயன்குளம், கிளிநொச்சி.
**5. அப்துல் கபூர் முகமட் பசீல்**
324, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்
**06. செல்லத்துரை விஜித்தா**
கிராஞ்சி சிவபுரம், பூநகரி.
**07.திருமதி ஜெயரஞ்சினி கிறிஸ்ரி ஜோசப்**
இல 137/03, கனறா கொன்வென்ற் லேன்
உக்குளாங்குளம் , வவுனியா
**08. வசந்தராஜன் சாரங்கன்**
இல 307 பி, பாரதிநகர் ,மல்லாவி
**09. கணபதிப்பிள்ளை சரிதா**
2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு
**10. ஆர்.ரமேசன்**
வவுணில், அல்வாய் மேற்கு, அல்வாய்.

### 500/=
பெறுமதியான 21 பரிசுக் கூப்பன்

Abans காட்சியறை
கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

உதயா ஸ்ரோர்ஸ்
ஏ-35 வீதி, விசுவமடு

யுனிலங்காஸ் பப்ளிகேஷன்
கொழும்பு.

Nalin information Technology
பரமேஸ்வராச் சந்தி. யாழ்.

பொன்னம்பலம் ஸ்ரோர்ஸ்
ஏ-9 வீதி, கரடிப்
போக்குச் சந்தி, கிளிநொச்சி.

கணேசன் ஸ்ரோர்ஸ்
கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வணிகா சேர்ஜிகல்ஸ்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கோகில்ஸ் பேபி நீட்ஸ்
65, பிரதான வீதி,
நெல்லியடி.

**01. மதுமதி கணேசலிங்கம்**
271/3 நாவலர் லேன் ஆனைப்பந்தி
**02.இராஜேந்திரம் இராஜசந்திரன்**
42 கண்ணபுரம், நாவாந்துறை, முதலாம் தெரு யாழ்ப்பாணம்.
**03. வல்லிபுரம் விபுலன்**
பிள்ளையார் கோயில் வீதி, தும்பளை–பருத்தித்துறை.
**04. செல்வி சி.அசோக் கமாலா**
சந்தை வீதி, உடுப்பிட்டி
**05. யசீலன் ரேணுகா**
பரமேஸ்வரி பவனம், கொற்றாவத்தை.
**06.கிருஷ்ணபிள்ளை இந்திராணி**
55 மணல்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
**07. கணேசமூர்த்தி ஆதவன்**
காசிப்பிள்ளை கறாஜ், முல்லை வீதி, மாங்குளம்
**08. வசந்தராஜன் பிரியங்கா**
இல 307 பி பாரதிநகர் மல்லாவி.
**09. தேவராசா கனுஜன்**
பிரயோக விஞ்ஞானபீடம் வவுனியா வளாகம், குருமன்காடு.
**10. இராசரத்தினம் கோபாலகிருஷ்ணன்**
'அ' பகுதி, பாரதி வீதி, தேவிபுரம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
**11. நல்லையா பிரசாந்தன்**
டி–4 மருதநகர், கிளிநொச்சி.
**12. செல்வி நிலேக்கா விஜயகுமார்**
இல 39, 3 ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை.
**13. ஞானபிரகாசம் இம்மனுவல்**
85/4 கார்மல் வீதி, குருநகர்.
**14. ரத்னகுமார் பகிரநாதன்**
541, மாணிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
**15. உதயரட்ணம் கேதுஜா**
அம்மன் வீதி திருநெல்வேலி, கிழக்கு யாழ்ப்பாணம்.
**16. இராசையா பகீரதன்**
உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு.
**17. சுபாஸ்கரன் நிதுசிகா**
நெல்லை சில்க் நெல்லியடி, கரவெட்டி.
**18. சுபாஸ்கரன் சுபாசினி**
மீசாலை மேற்கு, கந்தசாமி வீதி.
**19. பகீரதன் வனிதா**
உடுப்பிட்டி வீதி, தொண்டமானாறு
**20. நாகரத்தினம் மனோரஞ்சிதம்**
2 ஆம் வட்டாரம், ஆத்திப்புலவு கைவேலி, புதுக்குடியிருப்பு
**21. திருமதி யோகராணி நாகரெட்ணம்**
பொன்னகர் மத்தி, பொன்னகர்–கிளிநொச்சி

### 200/=
பெறுமதியான 17 பரிசு கூப்பன்கள்

ஜெயா புத்தகசாலை
கந்தசாமி கோயில் வீதி,
புதுக்குடியிருப்பு.

மோகன் ஸ்ரோர்ஸ்
ஏ-9 வீதி, பளை

அருண் ரெக்ஸ்
நெல்லியடி.

அறிவொளி புத்தகசாலை
முல்லைத்தீவு

**01. கந்தசாமி உதயகுமார்**
சங்கானை கிழக்கு, சங்கானை.
**02. வேலுப்பிள்ளை சண்முகநாதன்**
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
**03. திருமதி ராஜ்குமார் லக்ஸ்சுயா**
உரும்பிராய் தெற்கு, சிவன் வீதி.
**04. திருமதி சோமசுந்தரம் பிரதீபன்**
மில்லேன், மல்லாகம்
**05. திருமதி சுதர்சினி உதயபாலா**
இல 50, ஜீ.பீ.எஸ். வீதி, கல்வியங்காடு.
**06. சி.ஜெரிமயா**
351/1 கோயில் வீதி, நல்லூர்.
**07. கோபாலசிங்கம் கிருபாகரன்**
865 நாவலர் வீதி, அரியாலை
**08. கலாதேவி புலேந்திரன்**
பொற்பதி பிள்ளையார் கோயில்
மேற்கு, கொக்குவில்
**09. வரதராசா தர்ஷனா**
கனகபுரம் கிளிநொச்சி.
**10. சுப்பிரமணியம் திருப்பரங்கிரிநாதன்**
இமையாணன் உடுப்பிட்டி
**11. இராசசிங்கம் ஶ்ரீதரன்**
துணுக்காய் வலயக் கல்வி அலுவலகம்.
**12. நா.இரத்தினராசா**
அளம்பில், முல்லைத்தீவு.
**13. புண்ணியமூர்த்தி பார்த்தீபன்**
கஸ்தூரி டெக்ஸ் டையில், முள்ளியவளை சந்தை
**14. செல்வி விதுஷனா வனகுலராஜா**
இல 307 பாரதிநகர் யோகபுரம் முல்லைத்தீவு
**15. வேலும்மயிலும் சுதன்**
வத்திராஜன் வடக்கு, தாளையடி.
**16. சச்சிதானந்தமூர்த்தி கஜன்**
பழைய கொலனி, மாங்குளம்.
**17. திருமதி தவக்குமார் சிவறஞ்சினி**
கலைமணி வீதி, கட்டப்பிராய்.

உதயனுடன் இணைந்திருக்க மறவாதீர்கள்

## வலிகாமம் மேற்கில் அழகுக் கலைக் கண்காட்சி

நவாலி, மார்ச் 15

வலிகாமம் மேற்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்ட தையல், மனையியல், அழகுக் கலைக் கண்காட்சியை நூற்றுக்கணக்கான மக்கள் பார்வையிட்டனர்.'

**தையல், மனையியல் மற்றும் அழகுக் கலைக் கண்காட்சி வலிகாமம் மேற்கு பொது மண்டபத்தில் நடைபெற்றது.**

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களமும், வலிகாமம் மேற்கு மாதர் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்தும் தையல், மனையியல் மற்றும் அழகுக் கலைக் கண்காட்சி வலிகாமம் மேற்கு பொது மண்டபத்தில் நடைபெற்றது.

வலிகாமம் மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சங்கானைப் பிரதேச செயலர் ஆ.சோதிநாதனும், வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் கே.கே. சி.பெல்சியனும் கலந்து கொண்டனர். (த-400-100)

## கண்ணகைபுரத்துக்கு தண்ணீர் வழங்க ஏற்பாடு

கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சி அக்கராயன் குளத்தில் இருந்து 15 நாள்களுக்கு ஒரு தடவை கண்ணகைபுரத்துக்கு தண்ணீர் திறந்து விடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கண்ணகை புரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளுக்கு தண்ணீர் விநியோகிக்கும் நோக்கிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அக்கராயன் குளத்தில் தற்போது 7 அடி தண்ணீரே உள்ளதாகவும் இந்தக் கொள்ளளவு வேகமாகக் குறைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் கோடை காலத்தில் முற்றாக தண்ணீர் வற்றும் நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-18)

## பாதீனியம் ஒழிப்பு

வவுனியா நகர்ப் பகுதியில் காணப்படும் பாதீனியம் மற்றும் களைகளை அகற்றும் நடவடிக்கைகளில் அப்பகுதி பாடசாலை மாணவர்களும் பொலிஸாரும் ஈடுபட்டனர். கடந்த 8 ஆம் திகதி இந்த விசேட பணி இடம்பெற்றது. வவுனியா மாவட்டத்தில் பரவி வரும் பாதீனியத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்களும் பொலிஸாரும் இணைந்து இந்தச் சிரமதானப் பணியை மேற்கொண்டனர். இதன் போது பாடசாலை வளாகம், கண்டி வீதியின் இருமருங்கு போன்ற இடங்களில் களைகள் அகற்றப்பட்டன. (ஐ-421)

## பஸ்ஸிலிருந்து இறங்கும்போது கால் தடுக்கி வீழ்ந்து காயம்

பளை, மார்ச் 15

பஸ்ஸை நிறுத்துவதற்கு முன்னர் பஸ்ஸிலிருந்து இறங்க முற்பட்ட அரச உத்தியோகத்தர் கால் தடுக்கி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை காலை பளை பிரதேச சபைக் கட்டடத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் துன்னாலை கரவெட்டியைச் சேர்ந்த கணேசவேள் (வயது-27) என்ற உத்தியோகத்தரே இவ்விதம் காயமடைந்தவராவார்.

காயமடைந்த உத்தியோகத்தர் பளை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை நகர சபையில் கடமையாற்றி வந்த அவர் இடமாற்றம் பெற்று கடந்த 10 ஆம் திகதியன்று தான் பளை பிரதேச சபையில் கடமைகளைப் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-9)



**வாடகைக்கு**
அச்சுவேலி, பத்தமேனியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
(45757)(12.3.6) தொடர்பு: 077 643 5270/021 300 7926

**வீடு விற்பனைக்குண்டு**
சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணியில் 3 அறையும், 2 ஹோல் உடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: S.S.நாதன் இல.16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் 077 614 6434 (45696)(3.6.4)


## ஜம்புகஸ் அம்பலம வனத்தில் திடீர் தீ

இரத்தினபுரி.மார்ச் 15
சிவனொளிபாதமலை செல்லும் ஏரத்ன வீதியில் ஜம்புகஸ் அம்பலம பகுதி வனத்தில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 9.40 மணிக்கு ஏற்பட்ட இந்தத் தீ விபத்தால் 6 ஏக்கர் நிலம் சாம்பலாகியுள்ளது.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.

தீ விபத்து ஏற்பட்டுள்ள பகுதிக்கு போக்குவரத்து வசதி இல்லாததால் தீயணைப்பு வாகனங்களை கொண்டு செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)



எரு ஏற்றிய பெட்டியுடன் வீதியைக் கடந்த டிராக்டர் வாகனத்தின் மீது ஏ-9 வீதியில் வந்த வாகனமொன்று மோதியது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி ரயில் நிலைய வீதிச் சந்தியில் இடம் பெற்றது. வாகனத்தின் பின் சில்லு டிராக்டர் முன் சில்லின் மீது மோதியதில் அதன் முன்பகுதி சேதமடைந்தது. தெய்வாதீனமாக எவருக்கும் சேதமேற்படவில்லை. (ஓ-9)

## கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா

நெல்லியடி.மார்ச் 15
கரவெட்டி பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி நிகழ்வுக்கு மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கு.ஸ்ரீபாஸ்கரன் பிரதம விருந்தினராகவும், வடமாகாண விளையாட்டு திணைக்களப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

பங்குபற்றும் அனைத்து விளையாட்டுக் கழக உறுப்பினர்களையும், விளையாட்டு ஆர்வலர்களையும் அன்றைய தினம் குறித்த நேரத்துக்கு வருகை தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஓ)

## சிறைச்சாலைக்குள் போதைப் பொருள் கொண்டு செல்ல முயன்றோர் கைது

கொழும்பு.மார்ச் 15
வெலிக்கடை சிறைச்சாலைக்குள் போதைப்பொருளைக் கொண்டு செல்ல முயன்ற இரு சந்தேகநபர்களும் அவர்களுக்கு உதவி செய்த சிறைக் காவலர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மிரிஹான பொலிஸ் பிரிவில் கங்கொடவில நீதிமன்ற வளாகத்தில் வைத்து மிரிஹான விசேட குற்றத் தடுப்பு பிரிவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் கூறினர். (ச)

**CEYLON THEATRES**
**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
(Opposite Jaffna Teaching Hospital)
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres
Web: www.ceylontheatres.com

இப்பொழுது திரையில் DAILY - 10.30am, 2.30pm, 6.30pm




Platinum | Silver | Bronze

**softlogic**
100 மில்லியன் பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்
20% வரை விலைக் கழிவுகள்
கவர்ச்சிகரமான வட்டியில்லா தவணைக் கொடுப்பனவு முறைகள்
நீங்கள் விரும்பியவாறு வெகுமதிகளை தெரிவு செய்யும் முறை

சித்திரை புதுவருட குதூகலிப்பில்
யாழ் கன்னாதிட்டி சந்தி
softlogic உடன் இணைந்திருங்கள்




**Dell Inspiron 3521 Core i3**
Intel Core i3 4th Generation Processor
- 4GB DDR3 | 500GB HDD
- 15.6" HD LED Display
Free BAG
விஷேட விலை 74.990/=மட்டுமே. மாதாந்த கட்டணம் 5,224/=
ரூபா4000 பெறுமதியான இலவசக் கூப்பன்
15 மாதம் வட்டியில்லாக் கொடுப்பனவு

தொடர்பு: 0777 397 734, 0777 399 929
இல.63, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**யாழ்.வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடி ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் கோயில் வருடாந்த பொதுக்கூட்டம்-2014**
இடம் : ஆலயமுன் மண்டபம்
நாள் : 30.03.2014 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 4.30 மணி
அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி இறையன்புடன் வேண்டுகிறோம்.
விசுவேசப்பிள்ளையார் கோயில் பரிபாலனசபை.
(45699)(3.6.4)

**பழைய மாணவர் சங்கம் யா/டிறிபேக் கல்லூரி - சாவகச்சேரி**
ஆண்டுப் பொதுக்கூட்டம்
காலம் : 2014.03.18 செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணி
இடம் : கல்லூரி நாகேந்திரராஜா மண்டபம்
உறுப்பினர் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அன்றைய தினமும் புதிய உறுப்பினர்கள் பதிவு இடம்பெறும்.
தொடர்புகளுக்கு: 021 227 0738/077 618 6554
க.அருந்தவபாலன், தலைவர்.
க.சண்முகலிங்கம், செயலாளர்.
(சி7660)(12.3.6)

**KINGS ELECTRONICS**
11A, Stanley Road, Jaffna,
T.P.- 021 222 3857



(45329)(2.6.3)

## இடர்களை தவிர்க்கும் வகையில் மன்னாரில் அபிவிருத்தித் திட்டம்

மன்னார், மார்ச் 15
மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் ஏற்படும் இயற்கை இடர்களைத் தவிர்க்கும் வகையில் அபிவிருத்தி திட்டங் களை முன்னெடுப்பது தொடர் பான செயற்றிட்டங்கள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.
மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானபிரகாசத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் மன்னார் நகர சபையுடன் இணைந்து ஐ.நா. வாழ்வக ஸ்தாபனம் இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தி வருகிறது.
இதன்படி இயற்கை இடர்களைத் தாக்குப் பிடிப்பதற்கான அபிவிருத்தி உபாயங்கள் என்ற கருத் திட்டத்தின் கீழ் உப்புக் குளம், மனோகரகுருக்கள் வீதி, பள்ளி முனை 50 வீட்டுத் திட்ட வீதி ஆகியவற்றை புனரமைப்புச் செய்தல், எமில் நகரில் கல் வெட்டு அமைத்தல் ஆகிய நடவடிக்கைகள் இப்போது இடம்பெறுவதாக மன்னார் நகர சபையின் உறுப்பினர் குமரேஸ் தெரிவித்தார். (ஐ)

## நெல் தவிர்ந்த ஏனைய பயிர்ச் செய்கைகள் வவுனியா பகுதிகளில் பெரியளவில் வெற்றி

### *விவசாய பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு*

வவுனியா, மார்ச் 15
வவுனியா மாவட்டத்திலுள்ள நெடுங்கேணி, நயினாமடு, ஒலுமடு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட உழுந்து, பயறு, உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கைகள் வெற்றியளித்திருப்பதாக வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி அ.சகிலாபானு தெரிவித்தார்.
வவுனியா மாவட்டத்தில் உழுந்து, பயறு பயிர்ச் செய்கையில் நாட்டம் செலுத்தாது நெற் பயிர்ச் செய்கையில் அதிக விவசாயிகள் ஈடுபட்டு வந்தனர்.
இந்த நிலையில் கடந்த 2012, 2013 ஆம் ஆண்டுகளில் பெரும் போகத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.
இந்த நிலையில் நெடுங்கேணி, நயினாமடு ஆகிய பகுதிகளில் உழுந்து, பயறு, உருளைக் கிழங்கு என்பன பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்டன.
இதில் பல விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். அதிக விளைச்சலும் கிடைத்தது.
ஒரு வரிசை ஒழுங்கில் பயிர்ச் செய்கை மேற்கொண்டதால் வழமையான பயிர்ச் செய்கை மூலமாகக் கிடைக்கும் அறுவடையை விட சுமார் நான்கு மடங்கு அதிகமாகக் கிடைத்தது.
அத்துடன் வவுனியா மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கையும் வெற்றியளித்துள்ளது. இனிவரும் காலங்களில் வவுனியா மாவட்ட விவசாயிகள் உழுந்து, பயறு, பப்பாசி, உருளைக் கிழங்கு ஆகியவற்றைப் பயிரிட முடியும். இதற்கு எங்களாலான உதவியை வழங்குவதற்குத் தயாராக உள்ளோம். நெற் செய்கையை மட்டுமே நம்பியிருந்த மக்களுக்கு இந்தப் பயிர்ச் செய்கை மூலம் இலாபம் ஈட்டக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## பாலைதீவு அந்தோனியாருக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி உற்சவம்

கிளிநொச்சி, மார்ச் 15
பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
உற்சவ கால ஏற்பாடுகள் அனைத்தும் பூநகரி பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த வருடம் அதிகளவான பக்தர்கள் உற்சவத்தில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதால் அதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
உற்சவ காலத்தில் விற்பனை நிலையங்களை அமைப்போரும், அமைக்க விரும்புபவர்களும் பூநகரி பிரதேச சபையின் அனுமதி பெற வேண்டுமெனவும், குறிப் பிடப்பட்டுள்ளது.
இதேவேளை பக்தர்க ளுக்கு சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் இந்த உற்சவம் தொடர்பான மேலதிக அறிவித்தல் ஒன்றை கிளிநொச்சி அரச அதிபர் விடுத்துள்ளார்- அதில்; பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளையொன்று மக்களின் தேவைக்காகத் திறந்திருக்கும், கடற்போக்குவரத்து நடைமுறைகளை உரிய பாதுகாப்புடன் மேற்கொள்ளல் வேண்டும், தங்களுக்குரிய போதுமான குடி தண்ணீரைக் கொண்டு வருதல் வேண்டும், பெறுமதி வாய்ந்த தங்க ஆபரணங்கள் மற்றும் ஏனைய பொருள்களைக் கொண்டு வருதலைத் தவிர்க்க வேண்டும், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் பூநகரி பிரதேச சபையின் நடைமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும், பொது சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் வேண்டும், ஆலய புனிதப் பிரதேசத்தில் ஒழுங்குநடைமுறை விதிகளைப் பின்பற்றி சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (க-ஐ-9)



*தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு அக்கராயன் பிரதேச மருத்துவ மனைப் பணியாளர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ஐ-18)*

## ரயில் தண்டவாளத்தை கடப்பதில் இடர்களை எதிர்கொள்ளும் மக்கள்


ரயில் தண்டவாளத்தைக் கடந்து செல்வதில் கிளிநொச்சியின் சில பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
கிளிநொச்சி நகரிலும், விவேகானந்தா நகர் கிழக்குப் பகுதியிலும் வசிக்கும் மக்கள் உட்பட வேறு கிராம மக்களும் இவ்வாறு இத்தகைய போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
நிலத்திலிருந்து ரயில் தண்டவாளம் மிகவும் உயரமாக அமைந்திருப்பதன் காரணமாகவே அதனைக் கடந்து செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.
விவேகானந்தா நகர் கிழக்குப் பகுதியில் சுமார் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்தக் குடும்பங்கள் தினமும் இத்தகைய போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருகின்றன.
குறிப்பாக முதியவர்கள், மாணவர்கள் மாற்றுவலுவுள்ளவர்கள் இவ்விடயத்தில் அதிக நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.
மேலும் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளும் பல இடங்களில் உள்ளதால் மக்கள் அச்சத்துடன் அவற்றைக் கடந்து செல்வதைக் காண முடிகின்றது.
உதயநகர், ஆனந்தபுரம், விநாயகபுரம், அம்பாள் குளம், திருமுறிகண்டி, கிளிநொச்சி நகரம், பரந்தன் பகுதி மக்களும் ரயில் தண்டவாளத் தைக் கடப்பதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். கிளிநொச்சி நகரிலிருந்து திருமுறிகண்டி வரையான பகுதிகளில் 21 ரயில் கடவைகள் உள்ள போதிலும் 7 கடவை களில் மட்டுமே பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டதாக மக்கள் தெரிவிக்கின்ற னர். (க-18)

## வெளி மாவட்ட வியாபாரிகளை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

### *முள்ளியவளை வர்த்தகர்கள் எதிர்ப்பு*


முல்லைத்தீவு, மார்ச் 15
முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகளைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது குறித்து முள்ளியவளை வர்த்தக சங்கத்தின் தலைவர் ப.சுஜந்தன் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் அனுமதி இன்றி எமது பிரதேசத்துக்குள் நுழைந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் இப்பகுதி வர்த்தகர்கள் பெரும் நட்டம் அடைய வேண்டியுள்ளது. குறிப்பாக வங்கிகளில் கடன் பெற்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தமது பொருள்களை குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனர். இதனால் எமது பிரதேச வியா பாரிகளுக்கு நெருக்கடி ஏற்படுகிறது. இவ்வாறான நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் வெளி மாவட்ட வியாபாரிகள் எமது பிரதேசத்துக்குள் நுழையும் போது கரைதுறைப் பற்று பிரதேச வர்த்தக சங் கங்களின் அனுமதியைப் பெற் றுக் கொள்வதற்கு உரிய தரப்பினர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு



*பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை கையளிக்கும் போது.*

முல்லைத்தீவு, மார்ச் 15
தையல் பயிற்சி பெற்ற 5 பெண்களுக்கு புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் தையல் இயந்திரங்கள் வழங் கப்பட்டுள்ளன. கிளிநொச்சி வன் னேரிக்குளம் கிராமத்தில் 30 பெண்கள் தையல் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர். இவர்களில் தெரிவு செய்யப் பட்ட 5 பேருக்கு முதற்கட்டமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வு கடந்த புதன் கிழமை நடைபெற்றது.
இதில் வடமாகாண சபை கல்வி அமைச்சர் த.குருகுல ராஜா, சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு இயந்திரங்களை வழங்கி வைத்தனர். (ஐ-18)



*முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயப் பகுதியில் பின்தங்கிய நிலையில் உள்ள மருத்து வமனையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் கடந்த 11 ஆம் திகதி நேரில் சென்று பார்வையிட்டார். (ஐ-18)*

## நடுவழியில் பயணிகளை இறக்கி விட்டு பஸ்ஸைக் கொண்டு சென்ற லீசிங் கம்பனி

முல்லைத்தீவு, மார்ச் 15
கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் பயணிகளுடன் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸொன்றை வழிமறித்த லீசிங் கம்பனியி னர் பயணிகளை இறக்கி விட்டு குறித்த பஸ்ஸை கைப்பற்றி எடுத்துச் சென்றுள்ளனர்.
பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸே நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் இவ் வாறு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.
இதனால் பஸ்ஸில் பயணித்த பயணிகள் நடுவழியில் அந்தரிக்க விடப்பட்டனர். நீண்ட நேரம் காத்திருந்து விட்டு வேறு பஸ்களில் தாம் பயணத்தைத் தொடர்ந்ததாக பயணிகள் தெரிவித்தனர்.
குறிப்பாக காலை வேளையில் அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளுக்குச் சென்ற அரச உத்தியோகத்தர்களே இவ்வாறு சிரமத்தை எதிர்கொண்டனர். குறித்த லீசிங் கம்பனிக்கு பஸ் உரிமையாளர்கள் தவணைப்பணம் செலுத்தத் தவறியதாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-55)

# தமிழர்களின் இருப்பு கிழக்கில் கேள்விக்குறி

## கூட்டமைப்பு கவலை தெரிவிப்பு

மட்டக்களப்பு,மார்ச் 15

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பு கேள்விக் குறியாக மாறியுள்ளது. காணி விடயத்தில் தமிழ் மக்கள் பலவீனம் அடைந்துள்ளனர். இந்தப் பலவீனத்தை நிவர்த்தி செய்ய அனைத்துத் தமிழ் மக்களும் தயாராக வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இரா.துரைரெட்னம்

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த மூன்று தசாப்த காலங்களில்எமது இனத்தின் விடுதலைக்காகப் போர்ச் சூழலை எதிர் கொண்ட எமது சமூகம், அரசியல், சமூக, பொருளாதாரம், காணி உட்பட பல விடயங்களில் மோசமான நிலையில் பாதிப்புக்களை எதிர்கொண்டு பின்னடைவுகளை சந்தித்துள்ளது.

இந்தப்பின்னடைவுகளும், பாதிப்புக்களும் எமது இனத்தின் இருப்பை இன்று கிழக்கில் கேள்விக்குறியாக்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமாக தமிழர்கள் வாழ்ந்த காணிப் பகுதிகளை தமிழர்களுக்கு தெரியாமல் ஒருசில முஸ்லிம் அரசியல் வாதிகளால் முஸ்லிம் மக்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

அவர்கள் பழைய எல்லைகளை மறுசீரமைத்து சுற்றறிக்கை, வாத்தமானிப் பத்திரங்கள் தயாரித்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பில் தமிழ் மக்கள் விரக்தியடைந்துள்ளனர்.

வாகரை, கிரான், செங்கலடி, வவுணதீவு, பட்டிப்பளை பிரதேச எல்லைகளில் உள்ள தமிழர்கள் வாழும்பகுதிகளில் உள்ள அரசகாணிகளை மகாவலித் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து அவற்றை வெளிமாவட்ட சிங்கள மக்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள் ளது.

காணி விடயங்களை சீரமைப்பதற்கு பல அதிகாரிகள் முயற்சிகள் எடுத்தும், அதிகாரமிக்க ஆளும் அரசியல் வாதிகள் சிலர் அந்த அதிகாரிகளில் சிலரை முறைகேடாக செயற்பட வைக்க முயல்வதாகத் தெரியவருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் மாவட்ட அரச அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளேன் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)




அமெரிக்காவால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படும் தீர்மானத்தை எதிர்த்து மட்டக்களப்பில் போராட்டம்.

# இலங்கைக்கு ஆதரவாக மட்டக்களப்பில் போராட்டம்

மட்டக்களப்பு,மார்ச் 15

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்காவால் கொண்டு வரப்படும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அரசுக்கு ஆதரவாகவும் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நகரிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் அருகில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் திருமதி சிவகீதா பிரபாகரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கறுப்புப்பட்டிகளை அணிந்திருந்ததுடன், ஆங்கில, சிங்கள, தமிழ் ஆகிய மும்மொழிகளில் எழுதப்பட்ட எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். (ச)

# குளத்தில் மூழ்கிச் சிறுவன் சாவு

மட்டக்களப்பு,மார்ச் 15

மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விவேகானந்தபுரத்தில் சிறுவன் ஒருவன் குளத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது.

பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றுக்காக தும்பங்கேணி குளத்தில் அல்லிப்பூ பறிக்கச்சென்றபோதே இந்த விபரீதம் ஏற்பட்டுள்ளது.

சடலம் மீட்கப்பட்டு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

# தமிழ்ப் பாடசாலைகளுக்கு சிங்களத்தில் சுற்றறிக்கை

## மாகாண சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,மார்ச் 15

கிழக்கில் இயங்கும் தமிழ்ப் பாடசாலைகளுக்கு தனிச் சிங்கள மொழியில் சுற்றறிக்கைகள் அனுப்பப்படுவதால் பாடசாலை அதிபர்கள் சிரமத்தை எதிர் நோக்கி வருகின்றனர். அதனால் அவர்கள் தங்களது கடமைகளைச் சரிவர செய்ய முடியாத நிலை ஏற்பட் டுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் கல்வி அமைச்சருக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மனுவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்ப்பாடசாலைகளுக்குதமிழ் மொழியில் சுற்றறிக்கைகளை அனுப்பி வைப்பதற்குரிய ஏற்பாடுகளை கல்வி அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

தமிழ், சிங்களம் ஆகிய மொழிகள் இலங்கையில் அரச கரும மொழிகளாக அங்கிகரீக்கப்பட்டுள்ளன. அத்தகைய நிலையில் சிங்கள மொழியில் தமிழ்ப் பாடசாலைகளுக்கு சுற்றறிக்கைகளை அனுப்புகின்ற செயற்பாட்டை பொருத்தமற்றதொன்றாகவே கருத வேண்டியுள்ளது.



பிரசன்னா இந்திரகுமார்

சிங்கள மொழிகளில் இவ்வாறு சுற்றறிக்கைகள், கடிதங்கள் அனுப்பப்படுகின்ற போது, தாங்கள் அவற்றினூடாக தெரிவிக்கும் விடயங்களைப் பாடசாலை அதிபர்கள் புரிந்து கொண்டு செயற்படுவதற்கு காலதாமதமாகும். அதனால் எதிர்காலத்தில் கல்வி யில் மாணவர்கள்பின்னடைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும்.

இவ்வாறு சிங்களத்தில் சுற்றறிக்கைகளை அனுப்பி வைக்கின்றபோது கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்கள் உரிய விதத்தில் நிறைவேற்றப்படாமல் போகும் நிலை உருவாகும்.

எனவே தமிழ் மொழியில் சுற்றறிக்கைகள், கடிதங்கள் ஆகியவற்றை அனுப்பி, தமிழ் பாடசாலைகளின் நிர்வாக வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Rotary
RI DISTRICT 3220
யாழ். ரோட்டறிக் கழக
ஏற்பாட்டில் இலங்கையின் முதல்தர
கேக் அலங்கார நிபுணர்
ஆர்.எல். கிளமன்ட்
மற்றும்
அவரது மாணவர்கள்
இணைந்து வழங்கும்
மலர் 2014
கேக் கண்காட்சியும்
பயிற்சிப் பட்டறையும்



காலம்: இன்று (15.03.2014) சனிக்கிழமை
நேரம்: காலை 9.00 - பி.ப 6.00 மணிவரை
பயிற்சிப்பட்டறை: அமர்வு 1 - மு.ப 10.00 - நண்பகல் 12.00 வரை
அமர்வு 2 - பி.ப 2.00- பி.ப 4.00 வரை
இடம்: இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி மண்டபம்
இல. 63, கல்லூரி வீதி, நீராவியடி. யாழ்ப்பாணம்.

சர்வதேசத் தராதரமிக்க ஆசிரியரால் நேரடியாக நடத்தப்படும்
பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றி சமையற்கலை பயிற்சிச் சான்றிதழைப்
பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு

முற்பதிவுகளுக்கும் விவரங்களுக்கும்: 078 284 5010

வருகையாளர்களுக்கான
பரிசுக் குலுக்கலில்
கவர்ச்சிகரமான பரிசில்கள்
காத்திருக்கின்றன.
(C/12618)(10.6.3)




திறப்பு விழா அழைப்பு
நிகழும் மங்கலகரமான விஜய வருடம் பங்குனித்திங்கள் 02ஆம் நாள்
(16.03.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணி முதல் 10.50 மணி
வரையுள்ள சுபவேளையில் இறையருள் துணையுடன் நாம்
அம்பிகை புத்தக நிலையம்
எனும் நிறுவனத்தை ஆரம்பித்து நடத்தவிருப்பதால் அத்தருணம்
தாங்களும் வருகை தந்து நிகழ்வை சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
திறப்பு விழாவை முன்னிட்டு 15% இற்கும், 20% இற்கும்
மேற்பட்ட விலைக் கழிவுகள்.
பழைய ஆனந்தவிகடன், குமுதம், குங்குமம்
சஞ்சிகைகள் 20/= இற்கு பெற்றுக்கொள்ளலாம்.
தங்கள் நல்வரவை நாடும்.
246, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தி.தியாகன் - 077 887 5357
வே.ஜெகன் - 077 834 9507

## தடம் புரண்டது அதிவேக ரயில்



மருதானையில் தடம் புரண்ட ரயில்

கொழும்பு,மார்ச் 15
கண்டியிலிருந்து கொழும்பை நோக்கிப் பயணித்த அதிவேக ரயில் மருதானை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று வெள்ளிக்கிழமை காலை தடம்புரண்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.
இந்த விபத்தினால் எவருக்கும் பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்றும், ரயில் எஞ்சினுக்கும் தண்டவாளங்களுக்கும் மட்டுமே சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## கொப்பறா ஆலையில் தீ

கொழும்பு,மார்ச் 15
சிலாபம் மைக்குளம் பகுதியிலுள்ள கொப்பறா ஆலையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் அந்த ஆலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.
இந்தத் தீ விபத்து நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. இந்தச்சம்பவத்தில் எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என்று பொலிஸார் கூறினர்.



கோப்புப்படம்

தீயால் ஆலையில் காய்ச்சுவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த பெருமளவு கொப்பறாக்கள் தீக்கிரையாகியுள்ளன.
தீயினால் ஏற்பட்ட சேத விவரங்கள் இதுவரை மதிப்பீடு செய்யப்படவில்லை என்று பொலிஸார் கூறினர். (ச)

## தேயிலையினுள் தங்கத்தூளை கலந்து சென்ற நபர் மாட்டினார்

கொழும்பு,மார்ச் 15
தேயிலையில் தங்கத்தூளை கலந்து கொண்டு சென்ற நபரொருவர் சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.
இலங்கையில் இருந்து சென்னைக்குச் சென்ற ஒருவரே நேற்றுமுன்தினம் இவ்விதம் கைது செய்யப்பட்டுள்ளார்.
இவர் வழமையாக அடிக்கடி இலங்கைக்குச்சென்று திரும்பும் பயணிஎனக் கூறப்படுகிறது.
500 கிராம்களைக் கொண்ட 6 பைக்கற்றுக்களில் தேயிலைத் தூளுடன் தங்கத் தூளையும் கலந்து எடுத்துச் சென்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
இந்த தங்கத்தூளின் நிறை 1.4 கிலோகிராம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## வெவ்வேறு விபத்துகளில் மூவர் சாவு

கொழும்பு,மார்ச் 15
வெவ்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துகளில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், ஐந்து மாணவர்கள் உட்பட அறுவர் காயமடைந்துள்ளனர்.
எம்பிலிபிட்டிய - இரத்தினபுரி பிரதான வீதியின் 99 ஆவது சந்திப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இதேவேளை கலேவலை - யடிகல் போத்த சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்றுடன் பஸ் மோதியதில் சாரதியும் மற்றும் ஐந்து மாணவர்களும் காயமடைந்துள்ளனர். கொழும்பு - காலி பிரதான வீதியின் களுத்துறை நகரில் இடம்பெற்ற விபத்தில் 88 வயது முதியவர் ஒருவர்உயிரிழந்துள்ளார். (ச)

## போர் வெற்றி கொண்டாட்டம் இந்த முறை மாத்தறையில்

கொழும்பு,மார்ச் 15
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வு இந்த முறை மாத்தறையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வு போர் வெற்றியீட்டப்பட்டு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் இராணுவம், கடற்படை, விமானப் படை மற்றும் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் ஆறாயிரம் பேர் கலந்து கொள்வர்.
இந்த நிகழ்வில் இராணுவத்தினர் வாகனத் தொடரணியாகவும், விமானப் படையினர் விமானங்கள் ஊடாகவும், கடற்படையினர் பேரணியாகவும் பங்களிப்பு வழங்க உள்ளனர். (ச)

## சுமுகமாக நடைபெற்றது தபால் மூல வாக்களிப்பு

### தேர்தல்கள் திணைக்களம் கூறுகிறது

கொழும்பு,மார்ச் 15
மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அமைதியான முறையில் நடைபெற்றது என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தால் தபால் மூல வாக்களிப்பு தொடர்பில் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய அரச அலுவலகங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றது என்று திணைக் களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.
தபால் மூல வாக்களிப்பின் முதல் நாளான நேற்றுமுன்தினம் அது தொடர்பான தேர்தல் வன்முறைகள், அசம்பாவிதங்கள் மற்றும் எவ்வித குற்றச் செயல்கள் குறித்தும் தேர்தல்கள் திணைக்களத்தின் முறைப்பாட்டுப் பிரிவுக்கு கிடைக்கவில்லை என்று அவர் கூறினார்.
இதேவேளை, நேற்றுமுன்தினம் அரச அலுவலகங்களில் தபால் மூல வாக்களிப்பு எவ்வித குளறுபடிகளுமின்றி அமைதியான முறையில் நடைபெற்றது என்று தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வரும் கபே அமைப்பு ஊர்ஜிதம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அரசு-மு.கா.வுக்கு இடையில் பிரச்சினை எதுவும் இல்லை

### அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 15
முஸ்லிம் காங்கிரஸுக்கும் அரசுக்குமிடையில் பிரச்சினைகள் எதுவும் கிடையாது என்று நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் ஜெனிவாவில் சமர்ப்பித்துள்ள அறிக்கை குறித்து வினவப்பட்டது.
இதற்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



தினேஷ் குணவர்தன

ஜெனிவாவில் முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ள அறிக்கையிலுள்ள அனைத்து விடயங்களும் உண்மையல்ல.
முஸ்லிம் காங்கிரஸ் அறிக்கையிலுள்ள ஒவ்வொருவிடயம்குறித்தும் அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் அங்கு விளக்கமளித்துள்ளார்.
ஏதும் முறைப்பாடு கிடைத்தால் அதனடிப்படையில் நாட்டின் சட்டம் முன்னெடுக்கப்படும்.
அந்த அறிக்கையிலுள்ள சகல குற்றச்சாட்டுகளும் உண்மையானவை அல்ல. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 16 கட்சிகள் உள்ளன.
கூட்டணிக் கட்சிகளிடையே சிறு சிறு பிரச்சினைகள் உள்ள போதும் சகலரதும் கருத்துக்களையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனத்தில் எடுத்து வருகிறார்-என்றார். (ச)

## சரத் பொன்சேகாவின் கட்சி பிரமுகர்கள் அரசுடன் இணைவு

கொழும்பு,மார்ச் 15
சரத் பொன்சேகாவின் ஏகாதிபத்திய கொள்கையால் விரக்தியடைந்த அவரது ஜனநாயகக் கட்சியைச்சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் பலர் நேற்று முன் தினம் மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொண்டனர்.
அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியைச் சந்தித்த அவர்கள் நாட்டை அபிவிருத்தியடையச் செய்வதற்காக ஜனாதிபதி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தாமும் ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்தனர்.
வலவாஹெங்குனவெவ தம்மரதன தேரர், கட்சியின் உதவிச் செயலர் மாலா விஜேதிலக்க, உபதலைவர் மேஜர் வில்ரத் நாயக்க உட்படப் பலர் இவ்வாறு அரசுடன் இணைந்துள்ளனர். (ச)



ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் பலர் அரசுடன் இணைந்து கொண்டனர். அவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

## வறட்சியால் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வுகாண விசேட வேலைத்திட்டம்

### நடைமுறைப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு

கொழும்பு,மார்ச் 15
நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் நிலவும் வறட்சியால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீர்ப்பாசன மற்றும் நீரியல் வள முகாமைத்துவ அமைச்சின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
நீர்ப்பாசனத்துறை அபிவிருத்தி தொடர்பாக நீர்ப்பாசன மற்றும் நீரியல் வள முகாமைத்துவ அமைச்சின் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையேயான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அலரிமாளிகையில் நடைபெற்றுள்ளது.



நீர்ப்பாசனத்துறை அபிவிருத்தி தொடர்பாக நீர்ப்பாசன மற்றும் நீரியல் வள முகாமைத்துவ அமைச்சின் அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடல்.

இந்த கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வறட்சியை முகாமைத்துவம் செய்யும்வகையில் முறையான திட்டமொன்றை தயாரிக்க வேண்டியது அவசியம். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் முதன்மைத் தேவையான குடி தண்ணீரை வழங்குவதற்கு திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டும்.
சில பிரதேசங்களில் முறையான திட்டங்களின்றி மேற்கொள்ளப்படும் அபிவிருத்தியால் அந்தப் பகுதிகளில் சுற்றாடல் பிரச்சினைகள் எழுந்துள்ளன.
அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சுற்றாடலை பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் -என்றார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உக்ரைன் விவகாரம்: பேச்சுக்கள் நல்ல முடிவைத் தருமா?

1979 இல் சோவியத் யூனியனுக்கு ஆதரவான பராக் கர்மால் அரசைப் பாதுகாப்பதற்காக ஆப்கானிஸ்தானுக்குள் பிரேஸ்னேவ் படைகளை அனுப்பினார். அதே போன்ற நிலைமை இன்று உக்ரைனின் கிரிமியா மாகாணத்திலும் ஏற்பட்டுள்ளது. ரஷ்ய இனத்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் கிரிமியா தொடர்பாக, ரஷ்யா வகுத்துவரும் வியூகங்கள் ரஷ்யா கிரிமியாவைத் தன்னுடன் மீண்டும் இணைத்துக் கொள்வதற்கான சாத்தியங்களை அதிகரிக்க வைத்துள்ளன.

உக்ரைனின் மாகாணங்களில் ஒன்றான, ரஷ்ய எல்லையில் அமைந்துள்ள கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் மீண்டும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அது கிரெம்ளினுக்கும் மேற்கு நாடுகளுக்குமிடையில் மிகவும் மோசமான நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது.

19ஆம் 20 ஆம் நூற்றாண்டு காலத்தை ஒத்த ஆதிக்கப் போட்டியில் அமெரிக்காவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் எதிராக ரஷ்யா இறங்கியிருப்பதை பிரேஷ்னேவ் காலத்து மிகவும் மோசமான பனிப்போருக்கான ஆரம்பமாகக் கருத முடியும்.

1990 களின் முற்பகுதியில் சோவியத் யூனியன் பதினைந்து குடியரசுகளாகத் துண்டாடப்பட்டு ரஷ்யா தனித்து விடப்பட்டது எனினும் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் தலைமையில் அது இராணுவ ரீதியில் பலம் பெற்று வருவதை எவரும் மறுக்க முடியாது. இந்தப் பலமே சர்வதேச நெருக்கடிகளில் அமெரிக்காவுடன் முரண்படுவதற்கு அதற்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

தட்டிக்கேட்க ஆளில்லாவிடில் தம்பி சண்டப்பிரசண்டன் என்பதுபோல், எதேச்சையாக ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் தலையிட்ட அமெரிக்கா, ஜனாதிபதி விளாடிமிர் புடினின் தலைமையில் ரஷ்யா அடைந்துவரும் வளர்ச்சி காரணமாக பல சவால்களை எதிர்நோக்கி வருகிறது. சிரியாவில் அஸாத்தின் ஆட்சியை அமெரிக்காவால் கவிழ்க்க முடியாது போனமை இதற்கு ஓர் உதாரணம்.

நாளை ஞாயிற்றுக்கிழமை கிரிமியாவில் நடத்தப்படவுள்ள வாக்குக் கணிப்பில் பெரும்பாலான மக்கள் உக்ரைனிலிருந்து கிரிமியா தனிநாடாவதற்கு ஆதரவாக வாக்களிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யாவுடனான உக்ரைனின் கிழக்கு எல்லையில் உள்ள கிரிமியாவின் மூன்று பிராந்தியங்களில் ரஷ்யா படைகளையும் கவச வாகனங்களையும் குவித்து வைத்துள்ளது.

உக்ரைன் விவகாரத்தால் அமரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் உருவாகிவரும் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக லண்டனில் நேற்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோன் கெர்ரியும், ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்கி வி.லால்ரோவும் பேச்சுகளை நடத்த இருந்தனர். ரஷ்யா தனது நோக்கங்களிலிருந்து பின் வாங்குவதற்கான அறிகுறிகள் குறைவாகவே உள்ளன என்று தகவல்கள் கசிந்துள்ளன.

ரஷ்யா கிரிமியாவுடன் மட்டும் நின்றுவிடாது முழு உக்ரைனையும் கைப்பற்ற முயற்சிக்கலாம் என்ற அச்சம் நிலவுவதால், உக்ரைனின் இடைக் கால நிர்வாக அரசு அமெரிக்காவிடம் ஆயுத மற்றும் வெடிமருந்து உதவிகளைக் கோரியுள்ளது. ஒபாமா நிர்வாகத்திடமிருந்து இதற்கு உடனடியாக சாதகமான பதில் கிடைக்காதமை இந்த நெருக்கடியைக் குறைப்பதற்கான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது எனலாம்.

2008இல் சோவியத் யூனியனின் முன்னாள் குடியரசுகளில் ஒன்றான ஜோர்ஜியாவில் பிரிவினை கோரி இரு பிராந்தியங்களில் கிளர்ச்சி ஏற்பட்டபோது, பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாக ரஷ்யா இராணுவ ரீதியில் தலையிட்டது. அப்பொழுது இந்த விவகாரம் சர்வதேச அரங்கில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தவில்லை.


அதனாலேயே உக்ரைன் விவகாரத்தையும் அதே வழியில் கையாண்டுவிடலாம் என்று ரஷ்யா கருதுகிறது.

ஆனால் இத்தகைய நெருக்கடிகளுக்கும், ரஷ்ய ஆதரவுப் பிரிவினைக் கோரிக்கைகளுக்கும் கிரிமியா பிரச்சினை ஒரு தூண்டுதலாக அமையலாம் என்று அமெரிக்கா அஞ்சுவதால், விட்டுக்கொடுக்கும் நிலையில் அது இல்லை.

ரஷ்யாவும் அமெரிக்காவும் பேச்சுகளை நடத்தி இப்பிரச்சினைக்கு சுமுகமான, நல்லதான, நட்புறவுடனான வகையில் தீர்வு காண்பதே பொருத்தமாக அமையும்.

கட்டுரை

# பயங்கரவாதம்



சேரலாதன்

காணாமற்போன மலேசிய எயார் லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இதை எழுதும் வரையில் விமானம் தொடர்பான மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. இந்த விமானம் காணாமற்போனமைக்கான காரணமும் இதுவரை தெரியவரவில்லை. சிலவேளை பயங்கரவாதிகளின் செயற்பாடுகளும் விமானம் காணாமற்போனதன் பின்னணியில் தொடர்புபட்டிருக்கலாம் என்ற சந்தேகங்களும் எழுந்துள்ளன.

இன்று உலகையே ஆட்டிப் படைக்கும் பெருந்தொல்லையாக பயங்கரவாதம் உருவெடுத்துள்ளது. இதன் தணல் நாக்குகள் எங்கும் சுழன்றாடிப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. ஆனானப்பட்ட அமெரிக்காவே பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து தப்பமுடியவில்லை.

2001 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பாதுகாப்புத் துறைக்கே சவால் விடுக்கும் வகையில் பயங்கரமான தாக்குதல்கள் இடம்பெற்று பெரும் அழிவுகளும் ஏற்பட்டன. அதிலும் அமெரிக்க நாட்டின் பாதுகாப்புத் தலைமையகமான பென்டகன் மீதான தாக்குதல் சம்பவம் முழு உலகையும் ஒருகணம் நடுநடுங்க வைத்தது. இதன் பின்னர் அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் ஆட்சி புரிந்த தலிபான்களின் ஆட்சிக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுத்ததும், தலிபான்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதும், பல வருடங்களுக்குப் பின்னர் அமெரிக்கத் தாக்குதலின் சூத்திரதாரியான ஒசாமா பின்லேடன் அமெரிக்க விசேட படையினரால் கொல்லப்பட்டதும் பழைய கதைகள். ஆனால் பயங்கரவாதத்தின் வேர்கள் உலகமெங்கும் பரவிப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் இந்தப் பயங்கரவாதம் முறைகொண்டதற்கான காரணத்தைக் கண்டறிவதில் எவரும் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. இன்று மக்கள் தமது உரிமைகளை பெறவேண்டி நடத்தும் ஜனநாயக முறை யிலான போராட்டங்கள்கூட பயங் கரவாத முலாம் பூசப்பட்டு அடக்கி ஒடுக்கப்படுகின்றன.

எமது நாட்டில்கூட உரிமைகள் பறிக்கப்பட்ட தமிழர்கள் அவற்றைப் பெறுவதற்கு சாத்வீகமான முறையில் போராட்டங்களை முன்னெடுத்தனர். ஆனால் அவை பயன் தராததால் அடுத்த சந்ததியினர் ஆயுதங்களைத் தூக்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதுவும் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு பூண்டோடு அழிக்கப்பட்டது. பயங்கரவாதிகளான புலிகளை ஒழித்து விட்டோம் என மார் தட்டுபவர்கள் புலிகள் ஏன் ஆயுதங்களை ஏந்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதை இதுவரை சிந்தித்துக்கூடப் பார்க்கவில்லை. இந்த நிலைதான் உலகின் பல நாடுகளிலும் காணப்படுகின்றது.

மேற்குலக நாடுகளின் நிர்ப்பந்தத்தால் இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்ட பின்னர் மத்திய கிழக்கின் அமைதி கேள்விக்குறியாக மாறியது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளால் செல்லமாகப் போசிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட இஸ்ரேல் நாடு ஆயுத பலத்தில் தன்னையொரு சண்டியனாக உருவாக்கிக் கொண்டது. இதனால் தனக்கு அயலில் உள்ள அரபு நாடுகளை கிள்ளுக் கீரையாக அது துச்சமாக மதித்தது.

இதன் விளைவாக அறுபதுகளில் இஸ்ரேலுக்கும் சில அரபு நாடுகளுக்குமிடையில் போர் மூண்டது. இதுவே மத்திய கிழக்கின் அமைதிக்கு பங்கத்தை ஏற்படுத்துவதற்கான காரணமாகவும் அமைந்துவிட்டது. அதிலும் பலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் அத்துமீறிய செயற்பாடுகள் முஸ்லிம் தீவிரவாதத்தைத் தூண்டி விட்டன.

இதன் பயனாக இஸ்ரேலில் பல தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. தனது இன மக்கள் கொல்லப்பட்டதால் வெஞ்சினம் அடைந்த இஸ்ரேலிய அரசுத் தலைவர்கள் பதில் தாக்குதல்களில் தமது படையினரை ஈடுபடுத்தினர். ஆனால் போரின்போது தன்னால் ஆக்கிரமிக்கப்பட்ட வேறு நாடுகளின் நிலப் பகுதிகளை இஸ்ரேல் சொந்தம் கொண்டாடி வருவது முஸ்லிம்கள் மத்தியில் பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இதனால் இஸ்ரேல் என்ற நாட்டை உலக வரைபடத்திலிருந்து அகற்றுவோம் என்ற கோசத்துடன் பல தீவிரவாதக் குழுக்கள் தூக்கமும், நிம்மதியுமின்றி அலைந்து திரிவதற்குக் காரணமாக அமைந்து விட்டது. ஆனால் இன்று சில முஸ்லிம் நாடுகள் தமக்குள் தாமே மோதிக் கொள்வதுதான் வேதனையைத் தரு கின்றது.

காஷ்மீர் பிரச்சினையை முன்வைத்து இந்தியாவும், பாகிஸ்தானும் அடிக்கடி மோதிக்கொள்கின்றன. இதனால் இந்தியா பயங்கரவாத நடவடிக்கைகளை எப்போதுமே எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

மேலும் நக்ஸலைட், மாவோ இயக்கம் எனப் பல குழுக்களின் தொல்லைகளுக்கும் இந்தியா முகம் கொடுத்து வருகின்றது. மிகவும் நலிவடைந்த மக்கள் மத்தியில் இருந்து இந்தக் குழுக்கள் உருவானதாகக் கூறப்பட்டாலும். இவற்றையெல்லாம் பயங்கரவாதக் குழுக்கள் என்றே இந்திய அரசு கருதிச் செயற்படுகின்றது. அவற்றை அழிக்க முற்படுகின்றது. ஆனால் இந்தக் குழுக்கள் ஏன் தோற்றம் பெற்றன? இவற்றுக்கான காரணம் என்ன? என்பதையெல்லாம் இந்திய அரசு ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. இதனால் தொடர்ந்து பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

அண்மையில்கூட சீனாவின் ரயில் நிலையமொன்றில் காத்திருந்த மக்கள் மீது மிலேச்சத்தனமான வகையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மேலும் ரஷ்யாவால் கூட இதிலிருந்து விடுபட முடியவில்லை. ஆகவே தீவிரவாதமும், பயங்க ரவாதமும் உலகம் முழுவதற்கும் பொதுவான ஒன்றாகவே மாறிவிட்டது.

எனவே இனிமேலும் பயங்கரவாதத்தை ஒழிக்கின்றோம் எனக் கூறிக்கொண்டு ஆயுதங்களை உற்பத்தி செய்து பயன்படுத்துவதால் பயன் எதுவுமே கிடைக்கப் போவதில்லை. மாறாக அதற்கான காரணங்கள் ஆராயப்பட்டு உரிய தீர்வுகள் காணப்பட வேண்டும். இதற்கு பயங்கரவாதம் நிலவும் நாடுகளின் தலைவர்கள் ஆறஅமர ஓர் இடத்தில் இருந்து முதலில் தமக்குள் விவாதிக்க வேண்டும். பின்னர் படிப்படியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பிக்கலாம்.

இதைவிடுத்து தற்போதைய நிலையே தொடருமானால் உலகின் எந்தப் பாகத்திலும் மனிதர்கள் நிம்மதியாக வாழ முடியாத நிலையே உருவாகும்.

> நக்ஸலைட், மாவோ இயக்கம் எனப் பல தீவிரவாதக் குழுக்களின் தொல்லைகளுக்கு இந்தியா முகம் கொடுத்து வருகின்றது. மிகவும் நலிவடைந்த மக்கள் மத்தியில் இருந்து இந்தக் குழுக்கள் உருவானதாகக் கூறப்பட்டாலும் இவற்றையெல்லாம் பயங்கரவாதக் குழுக்கள் என்றே இந்திய அரசு கருதிச் செயற்படுகின்றது. அவற்றை அழிக்க முற்படுகின்றது. ஆனால் இந்தக் குழுக்கள் ஏன் தோற்றம் பெற்றன? இவற்றுக்கான காரணம் என்ன? என்பதையெல்லாம் இந்திய அரசு ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. இதனால் தொடர்ந்து பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.






# வீட்டுத்தோட்டச் செய்கையில் சிறுவர்களையும் ஈடுபடுத்துவோம்

ப. அருந்தவம், ஆசிரிய ஆலோசகர் (விவசாயம்)

2014 ஆம் ஆண்டை சர்வதேச குடும்ப வேளாண்மை ஆண்டாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரகடனப் படுத்தியுள்ளது. இதன் மூலம் 2015 ஆம் ஆண்டில் பஞ்சம், பசி போக்கி போசாக் குள்ள ஓர் உலகைப் படைக்க எத்த னிக் கப்படுகிறது. இத்துடன் சுதேச உணவு உற்பத்தியை மேம்படுத்தல், பாரம் பரிய மற்றும் சமச்சீர் உணவை உண் பதை ஊக்கப்படுத்தல், பயன் தரு இயற்கை வளப் பயன்பாடு ஆகியவற்றை இது நோக்கமாகவும் கொண்டுள்ளது.

இந்தச் சர்வதேச குடும்ப வேளாண்மை ஆண்டை மனங்கொண்டு குடும்ப அங்கத்தவர்களான சிறுவர்களையும் வீட்டுத் தோட்ட முயற்சியில் ஈடுபடுத்தல் சாலச் சிறந்தது.

**எத்தனை பெற்றோர் அறிவார்கள்?**

சிறுவர்களிடத்தே விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் உடலளவில் நல்ல முன்னேற்றம் ஏற்படுவது போன்று வீட்டுத்தோட்ட முயற்சிகள் மூலமும் உடலளவில் மட்டுமல்லாது மனதளவிலும் பெரும் முன்னேற்றம் ஏற்படுவதாக ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீட்டுத் தோட்டத்தை திட்டமிட்டு அமைத்துப் பராமரிக்கும் சிறுவர்கள் வாழ்க்கையின் பல்வேறு செயற்பாடுகளையும் திட்டமிட்டு மேற்கொள்வதற்கான ஆற்றலைக் கற்றுக் கொள்கின்றனர்.

செக் குடியரசு நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலமாக, சிறுபராயத்தில் வீட்டுத்தோட்டம் அமைத்துப் பராமரிக்கும் குழந்தைகள், பெற்றோரின் வயோதிப காலத்தில் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. தாவரங்களை இளம்பராயம் முதலே நேசிக்கப் பழகும் குழந்தைகள், பிற்காலத்தில் பெற்றோர், உற்றார், உறவினரையும் நேசிக்கக் கற்றுக் கொள்கின்றனர்.

இந்திய ஆய்வொன்றில், விதைபோட்டு மரங்களை வளர்க்கும்போது அதனுடன் கூடவே தன்னம்பிக்கையும் வளர்வதாகவும், அந்த மரங்களைப் பேணி வளர்க்கும்போது 'சாந்த குணம், நன்றியுணர்வு போன்றனவும் வளர்ச்சியடைவதாகவும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

வீட்டுத்தோட்டத்தில் பிள்ளைகளை வேலைசெய்யத் தூண்டுவதால் உழைப்பின் மகிமையை உணரச் செய்ய முடிவதோடு, அது வீட்டின் பொருளாதாரத்துக்கு உதவக் கூடிய ஆற்றலையும் வளர்த்துவிடு கிறது.

எனவே பிள்ளைகளிடத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையின்பால் ஆர்வத்தைத் தூண்டி விடுதல் அவர்களது எதிர்கால ஆளுமைக்கு வித்திடுவதாகவே அமையும்.

**வீட்டுத்தோட்டச் செய்கையும் ஒரு கலையே**

மனதைக் கவரும் எந்தத் தொழிலும் ஒரு கலையாகும். வீட்டை அலங்கரித்தல் முதல் நாட்டியம், இசை, ஓவியம், சிற்பம், மாலை கட்டுதல் முதலிய செயற்பாடுகள் எல்லாம் கலைகளே. அந்த வகையில் வீட்டுத் தோட்டம் அமைப்பதும் ஒரு கலையே.

உடல் உழைப்பாலும், மூளை உழைப்பாலும், களைத்து வருபவருக்கு வீட்டுத் தோட்டம் கண்ணுக்கு இனிமையான காட்சியை வழங்குவதோடு, மனத்தையும், குளிர்ச்சியடையச் செய்கிறது. செடிகளூடே மெல்ல வீசும் தென்றல், புதிய உற்சாகத்தைக் கொடுக்கும். வீட்டுத்தோட்டத்துக்கு விருந்தினராக வரும் பறவைகளின் கீதம், செவிக்கு இனிமையைத் தரும்.

**சிறந்த ஓய்வு நேரச் செயற்பாடு:-**

இன்றைய சிறார்கள் தமது ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியை இலத்திரனியல் ஊடகங்களான கணினி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டியின் முன் செலவிடுகின்றனர். உலகப் புகழ்பெற்ற மிச்சிங்ஹாம் பல் கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று அதிர்ச்சியான தகவல்களைத் தந்துள்ளது. அதாவது ஒரு பிள்ளை சராசரி ஒரு வாரத்தில் 20 மணி நேரம் வரை தொலைக்காட்சி மற்றும் கணினியின் முன் செலவிடுகின்றது.

இது தூங்குவதை விட பிள்ளையால் மேற்கொள்ளப்படும் சகல செயல்களை விடவும் அதிகமாகவுள்ளது. இதன் அடிப்படையில் நோக்கும் போது சராசரி 70 வயது நிரம்பிய மனிதன், தனது 7 முதல் 10 ஆண்டுகளை இவற்றிலேயே செலவிட்டு விடுகிறான். இதனை விட, தொலைக்காட்சி மற்றும் இணையங்களில் வரும் விளம்பரங்கள் குழந்தைகளை இலக்கு வைத்தே தயாரிக்கப்படுகின்றன. இது மட்டுமன்றி இன்றைய சமூகச் சீரழிவுகளுக்கும் இவையே மூல காரணம் எனவும் கூறப்படுகின்றது.

எனவே இன்றைய சிறுவர்களை இத்தகைய செயற்பாட்டிலிருந்து விடுவிப்பதற்கு வீட்டுத் தோட்டச் செய்கையின் மீது ஆர்வத்தைத் தூண்டுவது சாலச் சிறந்ததாகும்.

இதேபோன்று தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தில் தகாத சகபாடி சகவாசத்தால் மதுபாவனை, சமூகத்துக்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்ற பல்வேறு தீய பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு பெற்றோரின் முன்னிலையிலேயே தமது பொழுதைக் கழிப்பதற்கான களமாகவும் இது அமையும். எனவே வளமான எதிர்காலச் சந்ததியை உருவாக்கலில் வீட்டுத்தோட்ட முயற்சிகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தலாமல்லவா?




> வீட்டுத்தோட்டத்தில் பிள்ளையை வேலை செய்யத் தூண்டுவதால் உழைப்பின் மகிமையை உணரச் செய்வதோடு, வீட்டின் பொருளாதாரத்துக்கு உதவக் கூடிய ஆற்றலையும் வளர்த்துவிடு கிறது. எனவே பிள்ளைகளிடத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையின் பால் ஆர்வத்தைத் தூண்டி விடுதல் அவர்களின் எதிர்கால ஆளுமைக்கு வித்திடுவதாகவே அமையும்.

## தவக்காலச் சிந்தனை

# பாவத்தைக் கைவிடு

சாக்கு உடை தரிப்பதும் சாம்பலில் அமர்வதும், சாம்பலைப் பூசிக்கொள்வதும் கிறிஸ்துவுக்கு முந்திய பழைய ஏற்பாட்டுக்கான ஒறுத்தல் முறைகளில் வழக்கில் இருந்திருக்கிறது.

இவை யாவும் மனிதனின் அழிவையே வலியுறுத்திச் சுட்டிக் காட்டுகின்றன.

"மனிதன் வெறும் மூச்சேயன்றோ?" என்றும் கேட்கிறது பழைய ஏற்பாடு. ஆக.,

இந்த மூச்சுப் போய் விட்டால்...? மூச்...! மனிதன் அடியற்ற மரம் தான். மல்லாந்து கிடப்பான்! அது 'சவம்' என்றும் 'பிரேதம்' என்றும் அழைக்கப்படும். மண் தின்றாலும், புழுத்தின்றாலும், தீ தின்றாலும் அற்றே போய் விடுகிறான்.

இதை ஆழமாகச் சிந்திக்கும் நாற்பது நாள் பயணம்தான் திருச்சபையின் தவக்காலம்.

இந்தத் தவக்காலம் நமக்குக் கற்றுத்தரும் படிப்பினை என்ன? அதாவது தவக்காலம் நமக்குத் தரும் விளைச்சல் என்ன?

அழிவுக்குத் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றால் மனிதனுக்கு அழிவைத் தந்த, தந்துகொண்டிருக்கிற பாவத்தைக் கைவிடுவதற்கான சிந்தனையையும், செயற்பாடுகளையும் இறையருளினாற் பெற்று, பாவத்தையும், அதன் காரண கர்த்தாவான சாத்தானின் செயற்பாடுகளையும் கைவிட்டு அழிவை வெல்வது தான் இந்தத் தவக்கால வெற்றியும் விளைச்சலுமாகும்.

பாலையும் குடித்து விசத்தையும் குடித்தால் மனிதன் உயிர்வாழ்வானா? முதலில் விசத்தைக் கைவிடு!

*சகோ.விமல், செ.தா*

## வாசகர் திருமுகம்

# வைத்தியசாலையின் அளப்பரிய சேவை

மன்னார் தாழ்வுபாட்டில் அமைந்துள்ள ஆயுள்வேத வைத்தியசாலையின் சேவைகள் அளப்பரியதாகக் காணப்படுகின்றன.

முன்னர் ஆயுள்வேத வைத்தியம்செய்ய வேண்டுமானால், வவுனியா நான்காம் கட்டைப் பகுதி, கைதடி ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையில் இங்குள்ள மக்கள் காணப்பட்டனர். இதனால் அதிக பணத்தைச் செலவுழிக்க வேண்டியிருந்ததுடன், நேர விரயமும் ஏற்பட்டது.

தற்போது இந்த நிலை மாறிவிட்டது.

தாழ்வுபாடு வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர்கள் அளப்பரிய சேவை புரிந்து வருகின்றனர். அத்துடன் வைத்தியசாலையில் பணி புரியும் ஊழியர்களும் பொறுப்புடன் சேவையாற்றி வருகின்றனர் இந்த வைத்தியசாலையில் விடுதி வசதி, கிளினிக் சேவை, வைத்தியர்களுக்கான விடுதி என்பன அமைக்கப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

புதிய வடமாகாண சபையும், சுகாதார அமைச்சரும், மாகாண சபை உறுப்பினர்களும் இவ்விடயத்தில் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும் என்பதே இங்குள்ளவர்களின் எதிர்ப்பார்ப்பாகக் காணப்படுகின்றது.

*தொ.கிறிஸ்ரியன்,*
*பேசாலை.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். புண்ணிய தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**இடபம்**: நீண்ட நாள்களாக பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். பணப் பற்றாக்குறை நீடித்தாலும் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**மிதுனம்**: குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிட்டும். புது வாகனம் வாங்குவீர்கள்.

**கடகம்**: கணவன், மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**சிங்கம்**: மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். வீட்டிலும், வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போக வேண்டும். சிலரது தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள்.

**கன்னி**: எதிர்காலம் பற்றிய கவலைகளும், மறைமுக விமர்சனங்களும் வந்து நீங்கும். பிள்ளைகளால் கவலை அதிகரிக்கும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். எதிர்மறை எண்ணங்கள் வந்துச் செல்லும். வியாபாரத்தில் அவசர முடிவுகள் வேண்டாம்.

**துலாம்**: தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். காணாமற்போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள்.

**விருச்சிகம்**: உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிலர் உங்களை நம்பிப் பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் புது இடத்துக்குக் கடையை மாற்றுவீர்கள்.

**தனுசு**: உணர்ச்சி வசப்படாமல் இருப்பது நல்லது. பிற்பகல் முதல் குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும். உடல் நலம் சீராகும். புதியவரின் நட்பால் பயன் அடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்**: அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்குள்ளாவீர்கள். குடும்பத்தில் யாரும் உங்களை மதிக்கவில்லையென்று நினைத்துக் கொள்வீர்கள். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதி மொழியும் கொடுக்க வேண்டாம்.

**கும்பம்**: கடினமான வேலைகளையும் மாறுபட்ட அணுகு முறையால் முடித்துக் காட்டுவீர்கள். சகோதரங்களால் நன்மை உண்டு. திருமணப் பேச்சு சாதகமாக அமையும். தாயாரின் உடல் நிலை சீராகும்.

**மீனம்**: பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்புக் கிடைக்கும். வழக்கு சாதகமாகும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

## நாளை

**பங்குனி-02 ஞாயிற்றுக்கிழமை | 16.03.2014**

திதி: பூரணை மு.இ.11.32 வரை
நட்சத்திரம்: பூரம்
பி.ப.01.13 வரை

சுபநேரம்: 09.20-10.50 வரை
இராகுகாலம்:.04.50-06.20 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



மனிதன் ஒவ்வொரு சமயத்திலும் இளக் கடவுள் நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்து உயர்ந்து, இறுதியில் கடவுளர்களுள் பெருங் கடவுளை அடைகிறான்.

ஒழுக்கத்தைப் பற்றிய எக்காலத்தும் பயன்படக்கூடிய கொள்கை ஒன்றை வெளியிட்டவர் கன் பூசியஸ் ஒருவரே. "மனுதேவர்" என்பதே "அஹ்ரிமான்" என மாற்றப்பட்டிருக்கிறது. இந்தியாவில் புராண விளக்கம் மறைக்கப்பட்டாலும் அதன் கருத்து மட்டும் நிலைத்திருந்தது. "உயிர் வாழ்கிற அனைத்துக்கும் நான் மகாராணியாகவும், ஒவ்வொரு பொருளிலும் உள்ள சக்தியாகவும் இருக்கிறேன்" என்ற மந்திரம் ஒரு பழைய வேதத்தில் இருக்கிறது.

### தேவி வழிபாடு

அன்னை வழிபாடு என்பதே ஒரு தனித்தத்துவம். நமது கருத்துக்களுள் முதன்மையாக இருப்பது சக்தியே. அது ஒவ்வொரு படியிலும் மனிதனை ஊடுருவி நிற்கிறது. நமது உடலின் உள்ளே நாம் உணர்கிற சக்தியே நமது ஆன்மா. நமது உடலின் வெளியே நாம் உணர்கிற சக்தியே இயற்கையாகும். இந்த இரண்டு சக்திகளுக்குமிடையே நிகழ்ந்து கொண்டிருக்கிற போராட்டமே மனிதனது வாழ்க்கை. நாம் அறிகிற அல்லது உணர்கிற யாவுமே இந்த இரண்டு சக்திகளால் விளையும் பயனேயாகும். சூரியன் தனது வெளிச்சத்தை நல்லோர் மேலும் தீயோர் மேலும் ஒரே விதமாகவே பரப்பி வருவதை மனிதன் கண்டான். கடவுளே சகலவற்றையும் கடந்து நிற்கிற, எங்கும் பரவியுள்ள ஒரு பெருஞ் சக்தி என்பது இறைவனைப் பற்றிய புதிய கருத்து. இறைவன் தாய் என்ற கொள்கை இதிலிருந்துதான் தோன்றிற்று.

# உலகின் பெரிய பனிக்குகை



எஸ்ரிசென்வெல்ட் பனிக்குகை 1879ஆம் ஆண்டு சால்ஷ் பெர்க் நகரத்தைச் சேர்ந்த ஆண்டோன் லாசெட் என்ற ஆய்வாளரால் கண்டு பிடிக்கப்பட்டது.

ஆஸ்திரியா நாட்டின் சால்ஷ் பெர்க் நகரின் பக்கத்தில் வெர்பென் என்ற பகுதியில் கோச்கோகெல் மலைகளுக்கு அருகே உள்ளது உலகின் மிகப் பெரிய பனிக் குகை.

இந்தப் பனிக்குகை 42 கிலோ மீற்றர் நீளத்தை உடையது. முதல் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு பனிக் கட்டிகளும் மீதமுள்ள பகுதி முழுவதும் சுண்ணாம்புக் கற்களும் சூழ்ந்துள்ளது. எனினும், அவை முழுவதும் பனியால் சூழப்பட்டுள்ளதே அதன் சிறப்பம்சமாகும்.

எஸ்ரிசென்வெல்ட் பனிக்குகை 1879ஆம் ஆண்டு சால்ஷ் பெர்க் நகரத்தைச் சேர்ந்த ஆண்டோன் லாசெட் என்ற ஆய்வாளரால் கண்டுபிடிக்கப் பட்டது. 1912ஆம் ஆண்டு அலெக்சாண்டர் வான் மார்க் என்பவர் ஆராய்ச்சி நோக்கில் குகைக்கு வந்தார். தொடர்ந்து பல ஆய்வாளர்கள் வருகை தந்ததால் 1920ஆம் ஆண்டு குகையில் தனி அறைகள் ஆராய்ச்சி செய்பவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரியாவின் பிரபலமான சுற்றுலாத் தலமாகத் திகழும் இந்தக் குகையைப் பார்வையிட ஆண்டுக்கு 2 லட்சம் பேர் வந்து செல்கின்றனர்.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | | 1 | | 5 | | |
| 6 | 5 | | 9 | | 8 | 1 | | 3 |
| | 1 | 7 | | | 3 | 2 | | |
| | | | | 9 | | 8 | | 7 |
| | | | | | | | | |
| 4 | | 8 | | 3 | | | | |
| | | 6 | 1 | | | 3 | 8 | |
| 5 | | 9 | 3 | | 7 | | 4 | 1 |
| | | | | 6 | | | | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 2 | 7 | 9 | 5 | 3 | 1 | 8 |
| 5 | 9 | 1 | 3 | 8 | 4 | 7 | 2 | 6 |
| 8 | 3 | 7 | 1 | 6 | 2 | 9 | 5 | 4 |
| 6 | 7 | 3 | 5 | 4 | 1 | 2 | 8 | 9 |
| 1 | 8 | 4 | 9 | 2 | 7 | 5 | 6 | 3 |
| 9 | 2 | 5 | 6 | 3 | 8 | 1 | 4 | 7 |
| 7 | 4 | 9 | 2 | 5 | 6 | 8 | 3 | 1 |
| 3 | 5 | 6 | 8 | 1 | 9 | 4 | 7 | 2 |
| 2 | 1 | 8 | 4 | 7 | 3 | 6 | 9 | 5 |



# மாட்டின் முதுகில் தும்பிக்கையுடன் விநாயகர் உருவம்

மகாராஷ்டிரா மாநிலம், மும்பையில் ஒரு சிறிய கிராமத்தில் உள்ள விநாயகர் கோயிலில் உள்ள மாட்டின் முதுகில் திடீரென தோன்றிய விநாயகர் உருவத்தால் பரபரப்பு ஏற்பட்டது. முதலில் பயந்து ஒதுங்கிய மக்கள் பின்னர் இந்த அற்புதமான விநாயகரால் பல நன்மைகளை அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# இரட்டையர்கள் அதிகம் வாழும் கிராமம்



உலகிலேயே அதிக எண்ணிக்கையில் இரட்டையர்கள் வசிக்கும் கிராமம் என்ற பெருமையை, கேரள மாநிலத்தில் உள்ள கிராமம் ஒன்று பெறுகிறது.

இரட்டையர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பது, நைஜீரியா மற்றும் பிரேஸில் நாடுகளில்தான். இரட்டையர்கள் பிறப்புக்கு, பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. இந்தியாவில் 1,000 பேருக்கு நான்கு பேர் இரட்டையர்களாக உள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால், கேரள மாநிலத்தில் உள்ள கொடினி என்ற கிராமத்தில், 250 இரட்டையர்கள் வாழ்ந்து வருகின்றனர். இது இந்திய சராசரியைவிட 10 மடங்கு அதிகமாக உள்ளது.

உலகத்தில் அதிக எண்ணிக்கையில் இரட்டையர்கள் வசிக்கும் கிராமம் என்ற பெருமையை இது பெறுகிறது. இந்தக் கிராமத்தில் அதிக எண்ணிக்கையில் இரட்டையர்கள் இருப்பதற்கான காரணங்கள் குறித்து, ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு நிலவும் சுற்றுப் புறச் சூழல், தண்ணீர் போன்ற பல விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.



# பூசணிக்காய் சாப்பிட்டால் ஆரோக்கியத்துக்கு நல்லது

பூசணிக்காய் பல்வேறு மருத்துவ குணங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

பூசணிக்காயைச் சமைத்துச் சாப்பிட்டால் நரம்பு குறித்த நோய்கள், நரம்புத் தளர்ச்சி, வயிற்றுப்புண் ஆகிய நோய்களை குணப்படுத்த முடியும்.


உடல் வலி இருப்பவர்கள் பூசணிக்காயை தினமும் சமைத்துச் சாப்பிட்டால் உடல்வலி நீங்கும்.

மருத்துவத்தில் பூசணிக்காயின் விதை பயன்படுத்தப்படுகின்றது. பூசணிக்காய் சாப்பிட்டால் நுரையீரல் நோய், நீரிழிவு, தலைசுற்றல் நீங்கும்.

பூசணிக்காய்ச் சாற்றைத் தினமும் சாப்பிட்டு வந்தால் இருமல், நெஞ்சுச்சளி குணமாகும்.

பூசணிக்காயின் விதைகளைச் சேகரித்து நன்கு காய வைத்துப் பொடியாகச் செய்து அதனை ஒரு தேக்கரண்டியளவு பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் உடல் ஆரோக்கியம் பெறும்.

**மருத்துவத்தில் பூசணிக்காயின் விதை பயன் படுத்தப்படுகின்றது. பூசணிக் காய் சாப்பிட்டால் நுரையீரல் நோய், நீரிழிவு, தலைசுற்றல் நீங்கும்.**





இந்த வீட்டை அதிகளவானோர் வாடகைக்குக் கேட்கின்றனர். அநேகமான நிறுவனங்களும் இந்த வீட்டைத் தமக்குத் தரும்படி கேட்கின்றனர் என்று அவர் கூறினார். இந்த வீடு எதிர்வரும் 5 ஆம் திகதி உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

# மலசலகூடத்தை அழகிய வீடாக்கி இல்லாளுக்கு திருமண பரிசளித்த கணவன்

கடற்கரைக்கு வருபவர்களுக்காக அமைத்துக் கொடுக்கப்பட்ட மலசலகூடத்தை நபரொருவர் விலைக்கு வாங்கி அதனை அழகிய வீடாக மாற்றி தனது மனைவிக்கு திருமண நாள் பரிசாக வழங்கியுள்ளார். பிரிட்டனைச் சேர்ந்த நிக் வில்லான் என்ற நபரே இத்தகைய வீட்டை தனது மனைவிக்கு பரிசாக்கியுள்ளார்.

இந்த வீடு பிரிட்டனின் சிரெங்கம் பகுதியிலுள்ள கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டை அமைப்பதற்காக அவர் 85,000 ஸ்ரேலிங் பவுண்களை செலவிட்டுள்ளார். இதனை வடிவமைப்பதற்காக அவர் 3 வருடங்களைச் செலவிட்டுள்ளார்.

இந்த வீட்டினுள் இரண்டு படுக்கையறைகள், ஒரு சமயலறை, தனிக் குளியலறை, கடற்கரைக் காட்சிகள் தெரியக்கூடிய வகையிலான ஜன்னல்கள் ஆகியன மிகவும் அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீடு கடலுக்கு அண்மையில் அமையப்பெற்றிருப்பது எனக்கு மிகவும் பிடித்துள்ளது. ஆரம்பத்தில் இது ஓர் மலசலகூடமாகவே இருந்தது. இதனை வைத்து நாம் என்ன செய்யபோகிறோம் என்று நான் அப்போது நினைத்தேன் என்று வில்லானின் மனைவி தெரிவித்துள்ளார்.

இந்த வீடு தற்போதுதான் பார்ப்பதற்கு மிகவும் அழகாக உள்ளது. வீட்டிலிருந்து பார்க்கும்போது இயற்கையை மிகவும் இரசிக்கக்கூடியதாக உள்ளது. இது உண்மையில் மிகச் சிறந்த திருமண பரிசென்றே கூற வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வீட்டை அதிகளவானோர் வாடகைக்குக் கேட்கின்றனர். அநேகமான நிறுவனங்களும் இந்த வீட்டைத் தமக்கு வாடகைக்குத் தரும்படி கேட்கின்றனர் என்று அவர் கூறினார்.

இந்த வீடு எதிர்வரும் 5 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

# குடிதண்ணீர் நெருக்கடி தொடர்பாக கல்வி அமைச்சர் நேரில் ஆராய்வு

*வன்னேரிக்குளம் கிராமத்தில்*

கிளிநொச்சி, மார்ச் 15
கிளிநொச்சி வன்னேரிக் குளத்தில் நிலவிவரும் குடிதண்ணீர் நெருக்கடியை வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நேரில் சென்று பார்வையிட்டார்.

வன்னேரிக்குளம் சென்ற கல்வி அமைச்சர் அங்குள்ள மக்களிடம் குடிதண்ணீர் நெருக்கடி தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டார்.

**வன்னேரிக்குளம் சென்ற கல்வி அமைச்சர் அங்குள்ள மக்களிடம் குடிதண்ணீர் நெருக்கடி தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டார்.**

வன்னேரிக்குளத்தில் 450 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ள போதிலும் போதுமான குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தப்படவில்லை. இதனால் தாம் தினமும் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்கு அப் பால் சென்று குடிதண்ணீரை பெற்று வருவதாக இங்குள்ள மக்கள் கல்வி அமைச்சரிடம் தெரிவித்தனர்.

வன்னேரிக்குளமும் உவர் ஆபத்தை எதிர்கொண்ட தொரு கிராமமாகும். இந்தக் கிராமத்தை மையப்படுத்தி குடிதண்ணீர்த் திட்டமொன்றை ஏற்படுத்துமாறு நீண்ட காலமாகவே இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)



5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**புவேந்திரன் நிஜந்தன்**
(கானகன்)

பிறப்பு 30.11.1989
இறப்பு 10.03.2009

முதற்குரலே....
எங்கள் முழுநிலவே...
ஆராரோ கேட்டு அமுதுண்ட செல்வமே!
தத்தி நடைபயின்ற தவக் கொழுந்தே!
வித்துவச் செருக்கே.... வீர உருக்கே....
கரவை மண்ணின் மரபே....
இரவை கிழித்த கானக ஒளிச்சுடரே....
எங்கே சென்று விட்டீர்.....?
ஓ!
கூற்றுவன் வென்று விட்டான்!
தோற்றுவிட்டோம் நாமெல்லாம்!!
வரம் வாங்கி வந்தவனே....
உனைக் காணுமோர் வரம்வாங்க,
விழி சொரியும் நீரோடு - நீர்
வரும் வழிநோக்கி பழியாய்க் கிடக்கின்றோம்.
நித்தமும் தவம் தான் செய்கின்றோம்
ஆண்டுகள் ஐந்தென்ன - அதிகம்
நீண்டு தான் சென்றாலும்
ஆறாது உம் நினைவு....!

(43408)(12.3.6)

ஆத்மசாந்திக்காக ஆண்டவனைப்பிரார்த்திக்கும்:
புத்துவெட்டுவான். அப்பா, அம்மா, உடன்பிறப்புக்கள்.



**40 ஆவது பிறந்ததின நினைவு நாள்**

மலர்வு 15.03.1974
உதிர்வு 17.12.2012

**செல்வி ஜெயக்குமாரி சங்கரப்பிள்ளை**

எங்கள் இதயக் கோயிலே - உன்
ஒளி முகம் எங்கேயம்மா
பாசத்தின் திருவுருவே பண்பின் சிகரமே
கருணைக் கடலே காவியத்தின் ஓவியமே
உன் 40 ஆவது பிறந்தநாளை நினைவு
கூர்ந்து வாடித் துடிக்கும் அன்பு உள்ளங்கள்

ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!

(45591)(2.6.3)

"லிங்க பவனம்"
கரணவாய் மத்தி, கரவெட்டி.

உன் பிரிவில் குடும்பத்தினர்.

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம். மார்ச் 15
வட மாகாண நூலக பணியாளர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் மேற்கு வேத பாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றுகூடலின் போது ஒன்றியத்தின் சேவை மேம்பாடு மற்றும் நூலகர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தீர்மானிக்கப்படவுள்ளது.

வட மாகாணத்தைச் சேர்ந்த சகல நூலகர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை இதில் கலந்து கொள்ளுமாறு ஒன்றியத் தலைவர் ப.விஜயகுமார் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-14)

## முழுநிலா கருத்தாடல்

சமூக விஞ்ஞான வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு முழுநிலா கருத்தாடல் நிகழ்வொன்று ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தாடல் சாதியம், பெண்கள் ஒடுக்கு முறையின் சமகால நிலைமை என்ற தொனிப் பொருளில் அமையவுள்ளது.

நிகழ்வின் தொடக்க வுரையை எஸ்.மோகன் ராஜ் வழங்கவுள்ளதுடன் கருத்துரையை எவ். அகல்யா வழங்கவுள்ளனர். இக்கலந்துரையாடலில் சமூக விஞ்ஞான அறிவியல் ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஒ-10)

## மெய்வன்மைப் போட்டிகள்

திருநெல்வேலி சிமார்ட் கிட்ஸ் முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 2 மணியளவில் பலாலி வீதியில் அமைந்துள்ள முன்பள்ளி மைதானத்தில் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. இதில் முதன்மை விருந்தினராக பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் கலந்து கொள்வார்.

# யானைகளின் தொல்லையால் அவலப்படும் கிராம மக்கள்

*வனஜீவராசிகள் திணைக்களம் இயங்காமையும் காரணம்*

கிளிநொச்சி, மார்ச் 15
வனஜீவராசிகள் திணைக்களம் இயங்காததால் கிளிநொச்சி மாவட்டத்தில் யானைகளின் தொல்லையால் மக்கள் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்கு நீண்ட காலத்துக்குப் பின்னர் யானைகளின் தொல்லை காணப்படுகின்றது.

தருமபுரம் கிராமத்தில் யானைகள் புகுந்தபோது கிளிநொச்சி அரச செயலகத்தின் இடர் முகாமைத்துவப் பிரிவினர் மக்களுடன் இணைந்து வெடிகளைக் கொளுத்தி அவற்றைக் கலைத்துள்ளனர்.

மேலும் இங்குள்ள பாடசாலைகளில் குரங்குகளின் தொல்லையால் கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்பட்டு வருகின்றது.

இந்த மாவட்டத்தில் வனஜீவராசிகள் திணைக்களம் இயங்குமானால் இத்தகைய சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியுமெனப் பலரும் தெரிவித்துள்ளனர். (க-18)

# அஞ்சலி நிகழ்வுகள்

அண்மையில் மறைந்த நாடக, திரைப்படக் கலைஞர் கே.எஸ். பாலச்சந்திரனுக்கு வவுனியாவில் நினைவு அஞ்சலி நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது.


வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாடகக் கலைஞர் கந்தையா ஸ்ரீகந்தவேள் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நினைவுரைகளை எஸ்.எஸ். வாசன், அ.சத்தியானந்தம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மறைந்த எழுத்தாளர்கள் அன்புமணி, ந.பாலேஸ்வரி ஆகியோருக்கான நினைவுரைகளும் இங்கு இடம்பெறவுள்ளன.

மேலும் மறைந்த திரைப்பட இயக்குநர் பாலு மகேந்திராவின் அஞ்சலி நிகழ்வும் இங்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-421)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர் **சுப்பையா சபாரட்ணம்**

பிறப்பு 22.02.1948
இறப்பு 13.02.2014

"கெட்டாலும் மேன்
மக்கள் மேன் மக்கள்"
என்று அறை கூவி அவனிதனில்
அவதியுற்றோர்க்கும் அன்பனாய்
வாழ்ந்த எம்அருமை மாமாவின்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்....

(43209)(3.6.4) சொந்தமருமகன் கு.கதிரவேற்பிள்ளை (மருமகன்),
ச.சாந்தரூபன் (மகன்) - 077 890 6669

**9ஆம் ஆண்டு நினைவுகள்**




அமரர் **இளையவி கிருஷ்ணபிள்ளை**

மலர்வு 10.07.1936
உதிர்வு 15.03.2005

உங்கள் அசைவுகள்
மௌனமாகிப் போனாலும்
உங்கள் நினைவுகள்
என்றும் மரணமாகிப் போவதில்லை.

குளமங்கால்,
மல்லாகம்.
குடும்பத்தினர்.

**ஓராண்டு நினைவலைகள்**




செல்வி
**சுதாஜினி (யசோ) கோவிந்தன்**

மலர்வு 02*08*1986
உதிர்வு 26*03*2013

திதி: பூர்வபக்க சதுர்த்தசி 15.03.2014

ஓராண்டென்ன ஈராண்டென்ன எத்தனை
ஆண்டுகள் போனாலும் எங்கள் உயிர் உள்ள வரை
உன் நினைவாகவே இருப்போம்
மீண்டும் ஒருமுறை இவ்வுலகில் நீ வருவாயென
விழிகளில் நீரோடு காத்திருக்கின்றோம் செல்வமே!!
எங்களின் கண்ணீர்க் காணிக்கையை உன் பாதத்தில் வைத்து
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
எப்பொழுதும் உன் பிரிவை நினைத்து வருந்தும்



(45735)(2.6.3)

மந்துவில் வடக்கு,
கொடிகாமம்.
குடும்பத்தினர்.

# பொதுக் கூட்டங்கள்

வரணி, மார்ச் 15
வரணி இடைக்குறிச்சி சண்முகானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தலைவராக - வீ.சிவராசசிங்கம், செயலாளராக - வீ.குமாரவேற்பிள்ளை மற்றும் தனாதிகாரியாக சி.சிற்றம்பலம், ஆகியோரும் - நிர்வாக சபை உறுப்பினர்களாக 7 பேரும் தெரிவு செய்யப் பட்டனர்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா, மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-122)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 15
மக்கள் வங்கியின் பொதுச் சபைக்கு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளில் இருந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை, 4 ஆம் மாடியில் இடம்பெற உள்ளது என்று யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் யாழ்ப்பாணம் கிழக்குப் பிரிவினுள் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஒவ்வொரு அதிகாரப் பிரிவுக்கும் 5 பிரதிநிதிகள் வீதம் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் பங்கு கொள்வதற்கு வசதியாக சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத் தலைவரினால் ஒப்பமிடப்பட்ட கடித மாதிரி ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியை பூரணப்படுத்தி கூட்டத்தில் கலந்து கொள்ள வரும்போது எடுத்துவருமாறும் சம்பந்தப்பட்டவர்கள் கேட்கப் பட்டுள்ளனர். (ச-122)

# நூல் வெளியீட்டு விழா

அச்சுவேலி, மார்ச் 15
நீர்வேலி பகுதியின் வளமும் வரலாறும் கூறும் "புகழ்பூத்த நீர்வேலி" நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

மூத்த எழுத்தாளர் த.பரராசசிங்கத்தால் எழுதப்பட்ட இந்த நூல் புதிய தகவல்களோடு இரண்டாவது பதிப்பாக வெளியிடப்படுகின்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவில் வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் தொடக்க உரையாற்றவுள்ளார்.

வெளியீட்டுரையை பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பியும், மதிப்பீட்டுரையை விரிவுரையாளர் ச.லலீசனும் ஆற்றவுள்ளனர். பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா வாழ்த்துரை வழங்கவுள்ளார். (ஒ-11)

# உடுப்பிட்டியில் புராண நாடகம்

வரணி, மார்ச் 15
'மாலைக்கு வாதாடிய மாரியின் மைந்தன்' என்னும் புராண நாடகம் எதிர்வரும் திங்கட்கிழமை உடுப்பிட்டியில் மேடை ஏற்றப்படவுள்ளது.

இந்த நிகழ்வு உடுப்பிட்டி இமையாணன் மேற்கு விஸ்வகுல பத்திரகாளி அம்பாள் ஆலய முன்றிலில் இரவு 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ச-122)

# குருபூசை தினம் இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 15
மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் குரு பூசை தினம் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிலையச் செயலாளர் சி.தவச்செல்வம் அறிவித்துள்ளார். (ச)

# விண்ணப்பியுங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 15
ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்காக உதவி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நேற்று வெள்ளிக்கிழமை வெளியாகிய வர்த்தமானியில் இதனைப் பார்வையிட முடியும். இதற்கு மூன்று மாத கால அரச ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## வாழ்த்துகின்றோம்
சேவை தொடர....




மாவிட்டபுரம்,சாயுடையைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற
கூட்டுறவு அபிவிருத்தி உதவியாணையாளரும்,
மாவிட்டபுரம் கிராம முன்னேற்றச் சங்கம்,
வலி.வடக்கு கி.மு.சங்கங்களின் சமாசம்,
மாவைக் கந்தன் சி.க.கூ.சங்கம், மாவிட்டபுரம்
சாயுடை ஞானவைரவர் ஆலயம் ஆகியவற்றின்
தலைவரும், வலி.வடக்கு ஓய்வூதியர் நலன்புரி
கூட்டுறவுச் சங்கத்தின் பொருளாளருமான
**எல்லுப்போலை சின்னத்தம்பி**
BA (Cey) ,J.P
அவர்கள் நேற்று(14.03.2014) வெள்ளிக்கிழமை
மல்லாகம் நீதிமன்ற நீதிவான் S.சசிதரன் அவர்கள்
முன்னிலையில் சமாதான நீதிவானாக
சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டமையைப்
பாராட்டுவதுடன், அவர் சீரும் சிறப்புடனும்
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
சாயுடை சமூகத்தினர்,
மனைவி, பிள்ளைகள்.
(சி/12699)(5.6.2)



## வேலையாள்கள் தேவை
வேம்படிப் பாடசாலைக்கு அருகில்
அமைந்துள்ள Yaal KFC
உணவகத்திலும் விருந்தினர்
விடுதியிலும் வேலை செய்யக்கூடிய
ஆண்/பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு:021 222 1111, 077 191 5528
(45749)(3.6.4)



## வீடுவளவு விற்பனைக்கு
சாவகச்சேரி வீதி, அல்லாரை தெற்கு,
கொடிகாமத்தில் 6 பரப்பு 3 குழியுடன்
கூடிய காணியில் சகல வசதிகளுடன்
கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 285 5860
(29762)(7.6.3)


# அநாதரவாகக் கிடந்த 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகள் மீட்பு

பூநகரி, மார்ச் 15
கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பள்ளிக்குடா கடற்பரப்பில் அநாதரவான நிலையிலிருந்த சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான தங்கூசி வலைகளைக் கைப்பற்றிய கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அவற்றை கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர்.

பள்ளிக்குடா கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அங்கு விரைந்துசென்று மேற்படி கடற்பரப்பில் தேடுதல் நடத்திய போது அநாதரவான நிலையில் இருந்த இந்தத் தங்கூசி வலைகளைக் கண்டுபிடித்தனர்.

சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான வலைகளைக் கைப்பற்றிய அதிகாரிகள் அவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளனர். (ஒ-115)


## வீடு வாடகைக்கு
கொக்குவில் கிழக்கில் மூன்று அறை
வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:077 918 4553
(45745)(3.6.4)



## வன்னி மலர்க்காடு
திறப்பு விழா இன்று 15.03.2014
VANNI MALARKKADU
மீண்டும் கிளிநொச்சி மண்ணில்!
மனைகளை, பாடசாலைகளை, செயலகங்களை
அழகுபடுத்திக் களிப்படைய வாருங்கள்
வன்னி மலர்க் காட்டுக்கு.



உங்கள் நிறைவே எங்கள் தேவை





அனைத்து விதமான நுண் நீர்ப்பாசனத்
தொகுதிகள், பூங்கன்றுகள், பயன்தரு
மரங்கள், பூச்சாடிகள், கொங்கிறீற் தூண்கள்,
பசளை வகைகள், தோட்ட உபகரணங்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.





வேலவன் குடும்பத்தினர்.
077 944 6165
A9 நெடுஞ்சாலை,
கரடிப்போக்கு (பள்ளிவாசல் அருகில்)
கிளிநொச்சி.
(43407)(10.6.3)



## வேலைவாய்ப்பு
காப்புறுதியின் முன்னோடியாகிய இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனம் தனது 52ஆவது ஆண்டு நிறைவில் துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து காப்புறுதி ஆலோசகருக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

* நீங்கள் விற்பனைத் துறையில் ஆர்வமுள்ளவரா?
* பகுதிநேர வேலைவாய்ப்பினைத் தேடி நிற்பவரா?
* துடிப்பும் ஆர்வமும் உள்ளவரா?
* 18 வயதினைக் கடந்தவரா?
* குறுகிய காலத்திலேயே அதிக வருவாயை உழைப்பதில் ஆர்வமுள்ளவரா?
* ஒரு குழுவுடன் இணைந்து செயற்படுவதில் ஆர்வமுள்ளவரா?
* சிறந்த தொடர்பாடல் திறன் உடையவரா?
* ஓய்வூதியரா?

இன்றே காப்புறுதியின் முன்னோடியும் அரச நிறுவனமுமான எம்முடன் இணையுங்கள்!

தகைமை
G.C.E. O/L 6 பாடங்களில் சித்தி கணிதம், தமிழ் அடங்கலாக.
நீங்கள் எம்முடன் இணைந்தால்.

* அரச காப்புறுதியில் இணைவதன் மூலம் காப்புறுதி உலகில் ஓர் அங்கீகாரம்.
* வெளிநாட்டுச் சுற்றுலா
* ஆரோக்கியமான போட்டிகளும் அதற்கேற்ற பரிசில்களும்
* இலங்கையின் மாபெரும் நட்சத்திர விடுதிகளில் பயிற்சிகள் மற்றும் விருந்துபசாரங்கள்
* வாகன கடனுதவி
* போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு வருடாந்த கௌரவிப்புகள்
* தகைமை காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களுக்கு BANK ASSURANCE சந்தைப்படுத்தல் அதிகாரி போன்ற நிரந்தர வேலைவாய்ப்பு மற்றும் EPF, ETF, வைத்தியசாலைக் கொடுப்பனவுகள்.

காப்புறுதியில் முன்அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட மேலதிக சலுகைகள். இவற்றில் ஆர்வமுள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 25.03.2014 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**விற்பனை முகாமையாளர்**
**இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**
**இல. 571, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(45748)(7.6.3)



## காணி தேவை
இயக்கச்சி பிரதான வீதியில்
அல்லது அதனை அண்டிய
பகுதியில் தோட்டக் காணி/
வெறுங்காணி தேவை.
தொடர்பு:071 419 6515
(45740)(3.6.4)



## மணமக்கள் தேவை
* 83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 86 இல் பிறந்த 2 இல் செவ்வாய் 28½ பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு கனடாவில் அல்லது உள்நாட்டில் பட்டதாரி மணமகன் தேவை.
* 81 இல் பிறந்த 10 இல் சூரியனும் செவ்வாயும் 39½ பாவமுடைய MSc அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 78 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 24½ பாவமுடைய BBA அரச நிறுவனத்தில் பணி புரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 85 இல் பிறந்த 9 இல் சூரியனும் செவ்வாயும் 11 பாவமுடைய BA Hons அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு அரச நிறு வனத்தில் பணிபுரியும் மணமகள் தேவை.
* 73 இல் பிறந்த 22¼ பாவமுடைய லண்டன் பிராஜாவுரிமை பெற்று விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.)

(45737)(4.6.3) தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.077 607 0862



## ஏலவிற்பனை-ஒட்டுசுட்டான் மரக்காலை
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்
மாங்குளம் வீதி, ஒட்டுசுட்டான்
இடம்: அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்
மாங்குளம் வீதி, ஒட்டுசுட்டான்
காலம்:17.03.2014 மு.ப.10.00 மணி
தேக்கு, முதிரை, பாலை, மருது, வேம்பு,
விண்ணாங்கு போன்ற குற்றி மரங்கள் பகிரங்க
ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.
பிராந்திய முகாமையாளர், உதவிப்பிராந்திய முகாமையாளர்,
யாழ்ப்பாணம். ஒட்டுசுட்டான்.
T.P:021 222 0278 (சி/12697)(3.6.4) T.P:021 320 2701



## வாடகைக்கு
மீசாலை புகையிரத
நிலையத்துக்கு அருகில்
கடை வாடகைக்குண்டு.
தொடர்பு:021 790 2113
(29785)(3.6.4)



## காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு
பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு
அருகில் ஒரு பரப்பு 15.50 குளி
விஸ்தீரணம் கொண்ட 5 அறைகள்
உள்ள வீட்டுடன் கூடிய காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 711 1400
(45738)(3.6.4)



## தவறிவிட்டது
சிவன் வீதி, ஆவரங்காலைச் சேர்ந்த சிவஸ்ரீ ந. யோகானந்தேஸ்வரக் குருக்களுடைய வாகன வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், குருமார் அடையாள அட்டை, வங்கிப்புத்தகம்(மகன்) மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன கடந்த ([illegible].03.2014) யாழ்ப்பாணத்திற்கும் ஆவரங்காலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:077 711 0971
(45746)(3.6.4)

## மோசடிகளைத் தடுக்க சிசிடிவி கமெராக்கள்

### ஆராய்கிறது பதிவாளர் திணைக்களம்

கொழும்பு, மார்ச் 15
நில விற்பனையின் போது இடம்பெறும் மோசடிகளைத் தவிர்க்க பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் அலுவலகங்களில் சிசிடிவி கமெராக்களைப் பொருத்த அந்தத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

ஆய்வுத் தளங்களில் உள்ள அலுவலர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பதிவாளர் நாயகம் ஈ.எம்.குணசேகர தெரிவித்தார்.

நில விற்பனை நடவடிக்கைகளைப் பார்வையிடும் நோக்கில் அதிகளவானவர்கள் உள்நுழைவதைத் தவிர்க்க, பார்வையாளர் கட்டணம் 5 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

நில விற்பனை நடவடிக்கைகளின் போது இடம்பெறும் மோசடிகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)


## ராணுவம் வெளியேறின் மட்டுமே இங்கு விவசாயம் முழுமை பெறும்

### வட மாகாண அமைச்சர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 15
வடக்கு மாகாணத்தில் விவசாய நிலங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவம் வெளியேறினால் மட்டுமே இங்கு விவசாய நடவடிக்கைகள் முழுமை பெறும்.

இவ்வாறு வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கனடா நாட்டின் ஆசிய பசுபிக் பிராந்திய அபிவிருத்திக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் ஜெவ்நன்கிவெல்தலைமையிலான குழுவினர், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனை அவரது அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.



கனடர் நாட்டின் ஆசிய பசுபிக் பிராந்திய அபிவிருத்திக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் ஜெவ் நன்கிவெல் தலைமையிலான குழுவினர் வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனை அவரது அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந் துரையாடினார்.

இந்தக் குழுவினர் வட மாகாணத்தின் விவசாயப் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக கேட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வட மாகாணத்தில் பல்வேறு இடங்களில் விவசாய நிலங்களை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். இதன்காரணமாக விவசாய நடவடிக்கைகள் முழுமையாக நடைபெறவில்லை. குறிப்பாக வலி.வடக்கில் பெரும் பகுதி விவசாயக் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளனர்.

அந்தக் காணிகளில் இராணுவத்தினர் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் காரணமாக விவசாயிகள் தமது சொந்தக் காணிகளிலேயே விவசாயத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். எனவே பொது மக்களது விவசாய நிலங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் - என்றார்.

வடமாகாணத்தில் கடந்த ஆண்டில் கனடா நாட்டின் நிதியுதவியுடன் விவசாயத் துறையிலும், கால்நடை அபிவிருத்தித் துறையிலும் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பாகவும், இனி மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் ஆராய்வதே இந்தச் சந்திப்பின் நோக்கமாக அமைந்திருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகத் திணைக்களங்களின் பணிப்பாளர்கள் விளக்கமளித்தனர்.

வடக்கின் அபிவிருத்தியில் தாங்கள் கூடுதல் அக்கறை காட்டி வருவதாகத் தெரிவித்த கனடா குழுவினர், தொடர்ந்தும் அதற்குத் தாம் உதவத் தயாராக இருப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யு.எல்.எம். ஹால்தீன், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், வட மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சி.வசீகரன் உட்படத் திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். (ச-14)

## மரண அறிவித்தல்

### இராசையா லோகநாதன் (ரஞ்சன்)

(இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்-சுதுமலை வடக்கு)



சுதுமலை வடக்கைச் சேர்ந்த இராசையா லோகநாதன்(ரஞ்சன்-இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்-சுதுமலை வடக்கு) 13.03.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-சௌபாக்கியம் தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை-பாக்கியம் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் (ஆசிரியர், சுதுமலை வடக்கு அ.த. க பாடசாலை), பாசமிகு கணவரும், ரஜீவன், சஞ்ஜீவன் ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சறோஜினிதேவி, கோபாலகிருஸ்ணன், சிதம்பரநாதன், குணமணிதேவி, கார்த்திகேசு ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் புவனேஸ்வரி, சிவலிங்கராசா, ஞானலிங்கராசா, விக்கிரமராசா, இரத்தினேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.03.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி ஒழுங்கை,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.
021 225 6042 (45750) (3.6.4)

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி குமாரசாமி



சுதுமலை வடக்கு,மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி குமாரசாமி நேற்று முன்தினம் (13.03.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - கனகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பரிமளதேவியின் அன்புக் கணவரும் முரளிதரன், கிரிதரன் (கனடா), வினோதரன் (லண்டன்), உதயதரன்(லண்டன்),பஞ்சகேதரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தினி, சுதர்சனா(கனடா), அனுசியா (லண்டன்), சபிதா (லண்டன்), யமுனா (லண்டன்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான துரைராஜா, நடராஜா மற்றும் அம்பிகாநிதி (கொழும்பு) இரத்தினபூபதி, இராசலட்சுமி (இந்தியா), இராஜேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கலையறிவன், சுடரோவியன், கோநிலா, துனசிதன், தனவின், றிந்தியா, தனிசியா, கவிசியா, துவாரகா, அஷ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.03.2014) ஞாயிற்றுக் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்
முரளிதரன் - 077 8157287,
கிரிதரன் - 0014054245969,
வினோதரன் - 4402086955236,
உதயதரன் - 4407832187890
பஞ்சகேதரன் - 00442036320234

இல. 207, சுகந்நிலா,
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

(C/12700)(2.6.3)




யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவர்கள் தமது கல்விச் சுற்றுலாவின் ஒரு அங்கமாக நேற்றுமுன்தினம் உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு வந்திருந்தனர். அவர்கள் பத்திரிகை அலுவலகத்தின் நாளாந்த செயற்பாடு, அச்சிடும் முறை, பக்க வடிவமைப்பு என பல்வேறு விடயங்களையும் நேரில் பார்த்தும் கேட்டும் அறிந்து கொண்டனர். (ஓ-21)

# குற்றங்களை தடுக்கும் ஆண்டாக இந்த ஆண்டை மாற்ற வேண்டும்

## பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்து



இலங்கக்கோன்

கொழும்பு,மார்ச் 15

இந்த ஆண்டை குற்றங்களை முற்றாகத் தடுக்கும் ஆண்டாக மாத்திரமன்றி, போதைப் பொருள்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் ஆண்டாகவும் மாற்றிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பொலிஸ் மா அதிபர் என். கே. இலங்கக்கோன் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப் பொருள்கள் என்னும் விஷக்கிருமிகள் கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு பரவிச் செல்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அதற்கு கிராமங்களையும் நகரங்களையும் பாதுகாப்பதற்கு அனைத்துப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் சிறப்பான சேவைகளை வழங்க வேண்டும்.

நாட்டிலிருந்தும் போதைப் பொருள்களை முற்றாக நீக்குவதற்கு ஜனாதிபதியால் அமைச்சரவை உப செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பாக செயலணிப் படையொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்த செயலணிப் படையின் பிரதானமான பங்காளியாக பொலிஸ்துறையே செயற்படவுள்ளது எனத் தெரிவித்துள்ளார் (ச-22)

## இலத்திரனியல் அடையாள அட்டை குறித்து பயிற்சி

கொழும்பு,மார்ச்15

புதிய இலத்திரனியல் அடையாள அட்டை தொடர்பில் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. நவீன இலத்திரனியல் ஆள் அடையாள அட்டைகளை இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்திகள் அமைச்சால், ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் ஊடாக இலங்கையிலுள்ள அனைத்து கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

இந்த இலத்திரனியல் அடையாள அட்டையில் உள்ளடக்கப்படவுள்ள தரவுகள் மூலம் எந்தவொரு நிறுவனமும் தேவைப்படும் தனி நபர் ஒருவர் பற்றிய தகவல் களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-22)

# சர்வதேச விசாரணை நிச்சயம் நடந்தே தீரும்

## அந்த நாள் எப்போது என்று தான் தெரியவில்லை என்கிறார் யோகேஸ்வரன் எம்.பி.

கொழும்பு,மார்ச் 15

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான நடவடிக்கை மேற்கொள்ளாமை போன்ற பல குற்றங்களுக்காக அரசின் மீது சர்வதேச விசாரணை என்றோ ஓர் நாள் நடைபெற்றேயாகும் அந்த நாள் எப்போது என்றுதான் தெரியவில்லை.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு பகுதியில் நடைபெற்ற உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் 25 ஆவது கூட்டத் தொடரில் இலங்கையில் கடந்த கால போரால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இலங்கை



யோகேஸ்வரன்


அரசின் மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான நடவடிக்கை பேணாமை சார்பாக ஆராய்கின்ற ஒரு நிகழ்ச்சி நிரல் உள்ளது.

அரசு தங்களது குற்றச் செயல்களை மறைப்பதற்காக பல விதமாக நடவடிக்கைகளை தமிழ் மக்கள் வாழும் பகுதியிலே மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

சர்வதேச விசாரணை ஒன்று வேண்டும். இலங்கையில் நடைபெற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்துக்கு நீதி வழங்கப்பட வேண்டும். இந்த நிலையில் அமெரிக்காவால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ஆரம்பக் கட்ட தீர்மானத்தில் சர்வதேச விசாரணை என்பது குறிப்பிடப்படாமல் வேறு சில விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்த வரை இன்னும் நாங்கள் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் பற்றி எங்களது உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிடவில்லை. அதற்கு காரணம் அமெரிக்காவின் இறுதித் தீர்மானம் ஜெனிவா அமர்வு முடியும் வேளையில் தான் தெரிய வரும்.

இந்தியா இதுவரை தனது தீர்மானத்தை முன்வைக்கவில்லை. இந்தியாவின் தீர்மானம் வந்ததும் அமெரிக்கா ஒரு முழுமையான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையிலே சமர்ப்பிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின் றோம் - என்றார். (ச)



தமிழ் நூலின் முதல் பிரதியை பிரதமரின் செயலர் எஸ்.அமர சேகர பிரதமர் தி.மு.ஜயரத்னவுக்கு வழங்கி வைத்தார்.

# இரண்டு தமிழ் நூல்கள் பிரதமரிடம் கையளிப்பு

கொழும்பு,மார்ச் 15

பிரதமர் அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நல்லெண்ண மனப்பாங்கை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட இரு சிங்கள மொழி நூல்களின் தமி ழாக்கம் நல்லதோர் உள்ளம், பலமிக்கதோர் நாடு ஆகிய தலைப்புகளில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்த நூலின் முதல் பிரதியை பிரதமரின் செயலர் எஸ்.அமர சேகர பிரதமர் தி.மு.ஜயரத்னவுக்கு வழங்கி வைத்தார்.

பிரதமர் அலுவலகத்தின் சிங்கள - தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஏ.எஸ்.எம்.ஜிப்ரியினால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட, 22 அத்தியாயங்களைக் கொண்ட இந்த நூல்களின் பிரதிகளை எதிர்வரும் காலத்தில் நாட்டின் அனைத்து தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கும் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலர் ஐ.எச்.கே.மஹானாம, சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி அத்தநாயக்க, உதவிச் செயலர் திருமதி கௌஷல்யா ஜயசிங்க, மொழிபெயர்ப்பாளர் ஏ.எஸ்.எம்.ஜிப்ரி ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# சங்கிலியை அபகரித்த நபர் கைது



கோப்புப்படம்

கொழும்பு,மார்ச் 15

வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெம்டன் வீதி பிரதேசத்தில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு ஓடிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெமட்டகொடையைச் சேர்ந்த இந்த நபரை நேற்றுமுன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச)

# சர்வதேச விசாரணை அவசியம்: லண்டன் விடாப்பிடி

லண்டன், மார்ச் 15

ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் தலைமையில் இலங்கை மீது சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பிரிட்டன் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மான வரைவு தொடர்பில், பிரிட்டன் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக, நாடாளுமன்றத்துக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதியில் வாக்கெடுப்புக்கு விடப்படும் தீர்மான வரைவை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளை ஆதரிக்கச் செய்வதில் பிரிட்டன் பிரதமர், பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியக அமைச்சர்கள் பரந்தளவில் ஈடுபடுவர் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போரின் போது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறிவதற்கு

> “ ஐ.நா. மனித உரி மைகள் சபையின் உறுப்பு நாடுகளை ஆதரிக்கச் செய்வதில் பிரிட்டன் பிரதமர், பிரிட் டன் வெளி விவகார மற்றும் பொதுநலவாய பணியக அமைச்சர்கள் பரந்தளவில் ஈடுபடுவர்

ஆரோக்கியமான நடவடிக்கையாக, இலங்கை மீதான சர்வதேச விசாரணையே அமையும். ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை அரசு மேற்கொண்டுவரும் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் அபிவிருத்திச் செயற்பாடுகள், சிறுவர் போராளிகளுக்கான மறுவாழ்வு தொடர்பிலும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆனாலும் எல்லாவற்றுக்கும் முக்கியமாக மனித உரிமைகள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கும், நல் லிணக்கத்துக்கும் நிலையான முன்னேற்றம் ஏற்பட வேண்டும். பொறுப்புக் கூறல் பொறி முறையானது நல்லிணக்கத்துக்கு முக்கியமானது. நல்லி ணக்கத்தினூடாகவே நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற் படுத்த முடியும் என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

## கண்ணீர் அஞ்சலி



யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையின் ஆசிரியரான திருமதி மோகனராணி குருபரஞ்சோதிநாதன் அவர்களின் அன்புக்கணவர்

**கந்தையா குருபரஞ்சோதிநாதன்**

அவர்கள் 07.03.2014 அன்று காலமானார்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். (45754) (3.6.4)

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**நீக்லஸ் ஞானராசா றொகாந்தன்**



மலர்வு 12 . 06 . 1985

உதிர்வு 15 . 03 . 2013

"என் ஊழியன் நீ
உனக்கு நான்
ஆதரவளிக்கிறேன் அஞ்சாதே!
நான் உன்னை மீட்டுக்கொள்வேன்"


பெற்றோர், சகோதரர்கள்,
அத்தான்மார், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

18, மீராப்பள்ளி வீதி,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
(45758) (3.6.4)

## கண்ணீர் அஞ்சலி

**அ.ஸ்ரனிஸ்லோஸ் (அச்சா)**

(இளைப்பாறிய உபஅஞ்சல் அதிபர்,
முன்னாள் பணிப்பாளர்,
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை)



அ.ஸ்ரனிஸ்லோஸ் அவர்கள் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களிலும் பதவி வகித்தவர். யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பணிப்பாளராக இருந்த காலத்தில் சபையின் வளர்ச்சிக்காக பெரிதும் சேவையாற்றியவர். சிறந்த பண்புகள் பலவற்றை இயல்பாகவே கொண்ட கூட்டுறவாளர் ஒருவரை கூட்டுறவுச் சமூகம் இழந்து நிற்கின்றது. அன்னாரின் குடும்ப துயரத்தில் நாமும் பங்கு கொள்வதோடு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். (சி/12705) (7.6.3)

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை

## காணி விற்பனைக்கு

மூளாய் வீதியில் தபால் பெட்டிக்கு முன்பாக உள்ள புதிய வீதியில் இடது புறமாக உள்ள வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 075 041 0307 (45755) (7.6.3)

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்ய பெண் ஒருவர் தேவை.

தொடர்பு : 077 3510064

## விற்பனைக்கு

ஜேமன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும் பொமேரியன் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும், J.C இன பசுக்கன்றும், வண்ரம், வெள்ளடியன், மனிதாரா நல்ல இன புறாக்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : லிங்கமூர்த்தி மயூரன் 072 6997331
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக,
பூதராயர் கோயிலடி டயலொக் ரவர் அருகில்

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/=(Attached Bathroom)

Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222 (சி/12214)(3.6.4)

## கட்டார் நாட்டில் வேலை வாய்ப்பு

1. Former - 20 பேர் (900 + Food + O.T)
   விசா கட்டணம் - 4800/= மட்டும்
2. PAITING HELPERS - 20 பேர் (1200+O.T)
3. Office Boy (பல்கலைக்கழகங்களில்) 50பேர் (1000 + Food + O.T) 17.03.2014 திங்கட் கிழமை கொழும்பில் நேர் முகத் தேர்வு இடம் பெறும்.

தொடர்பு : 077 3957291

## வைத்தியம்

கழுத்து, தோள், இடுப்பு, முள்ளந்தண்டு, முழங்கால், பாதம், வலி, குத்து உளைவு, நோ, வாதம், அஸ்த்துமா, அலர்ஜி, குழந்தை பாக்கியமின்மை அனைத்து நோய்களுக்கும்.

சித்த வைத்தியர்
Dr.R.Sivagurunathan 077 7301669
சனி (15/3), ஞாயிறு (16/3),
திங்கள் (17/3) தினங்களில் வைத்தியரை நல்லூரில் சந்திக்கலாம். சந்திப்பு இலவசம்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## 35ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் **தம்பையா கனகரத்தினம்**
(காலிங்கர்)


பிறப்பு: 28.01.1943

இறப்பு: 06.02.2014

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளராகக் கடமைபுரியும் கனகரத்தினம் கமலஹாசன் என்பவரின் அன்புத் தந்தை காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமுர்த்தி முகாமையாளர்கள்,
யாழ். மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கம்,
யாழ்ப்பாணம். (C/12709)(10)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16.10.1945

மறைவு 15.03.2010

அமரர் **நாகமுத்து இராசா**

ஆண்டு நான்கு ஆனதப்பா
ஆறவில்லை உம் நினைவு
நீங்கள் இல்லா எம் வாழ்வு
நீர்க்குமிழி ஆனதப்பா
வாடுகின்றோம் உனை நினைத்து
வாராயோ எமை எண்ணி எம்மிடத்தில்

மாலியாவத்தை,
சங்கானை.

என்றும் துயருறும்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**பொன்னம்பலம் சுந்தரேசன்**

(Former Manufacturing Director, Pfizer Pharmaceuticals, Sri Lanka.)

பொன்னம்பலம் சுந்தரேசன் 13.03.2014 வியாழக்கிழமை Sydney Australia இல் காலமாகிவிட்டார்.

அன்னார் குமுதினியின் அன்புக் கணவரும், Dr. பூர்ணிமா, அருணன் (Chartered Acct-Aus.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேசிகா, அஞ்சலா ஆகியோரின் அன்பு மாமனும், டிலன், கிரன், றோவன் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சாரதாதேவி (SL), சிவானந்தி (SL), Dr. குமரநாயகன் (UK), வரதராஜன் (Aus), Dr. திருவுடையான் (UK) ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.03.2014) சனிக்கிழமை காலை 9.30 - 11.45 வரை Camellia Chapel, Macquarie Park Crematorium, Sydney இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Tel: +94 117 539 825 (SL)
+61 416 248 266 (AUS)
(C/12449)(10)

## மரண அறிவித்தல்



**யேசுதாசன் யூட்ஸ் நிமால்** (நெதர்லாண்ட்)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், நெதர்லான்டை வதிவிடமாகவும் கொண்ட யேசுதாசன் யூட்ஸ் நிமால் நேற்று முன்தினம் (13.03.2014) வியாழக்கிழமை நெதர்லாந்தில் காலமானார்.

அன்னார் யேசுதாசன் காலஞ்சென்ற மேரிபிறின்சி - இன்பராணி தம்பதியரின் மகனும் சாந்தியின் அன்புக்கணவரும் தனுஷன், தனுஷின் அவர்களின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பேரின்பரட்ணம் - மேரிஜோசப்பின் ஆகியோரின் பேரனும் ஜோன்கெனத் (நிகால்- கனடா), நிக்ஸன் டொறின்டன் (லண்டன்), யொயஸ் நியூற்றன், அலெக்ஸ் திரோசன், யூடித்நிசான், அலெக்ஸ் சஜீவன், அமலினி, விஜித்தா(லண்டன்), நிரோமி, டிலோசிகா ஆகியோரின் அன்புச்சகோதரனும் சித்திரா, கார்டினி, சுதர்சினி (ஆசிரியர் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), சர்மிளா, இந்து ஆகியோரின் மைத்துனரும் இரட்ணராஜா, ராணி, சண்முகதேவன், வசந்தராணி (ஆசிரியர் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), பற்பநாதர், அன்ரனிற்றா, வத்சலா, செல்வகுமார், கலைஅரசி ஆகியோரின் பெறாமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நெதர்லாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 8 விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
077 1313049, 021 3007081, 0031 570600011

தகவல்:
J.J. நியூற்றன் ( சகோதரன்)

## வடக்கு மாகாண சபை
## சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு
## பெறுகைக்கான அழைப்பு

**பண்ணை சுகாதாரக் கிராமத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை நடத்துதல் 2014/15**

வட மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைகள் குழு தகுதியான, தகைமைவாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடத்துநர்களிடமிருந்து பண்ணை சுகாதாரக் கிராமத்தில் அமைந்துள்ள அலுவலக சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1.நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ் அமைச்சில் கிடைக்கும் Application For Bid Documents என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 100/= காசாக செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 17.03.2014 தொடக்கம் 22.3.2014 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

2.விலைக்கேள்விகள் 24.03.2014 திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்பதாக இவ் அமைச்சின் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

3.தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் இவ் (021-222-0801)அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4.கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

இ.இரவீந்திரன்,
தலைவர் மாகாண அமைச்சின் பெறுகைகள் குழு
வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,
சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**திருமதி இரத்தினம் நடராஜா (பேபி)**



யாழ்ப்பாணம், சங்கானையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவருமான திருமதி இரத்தினம் நடராஜா (பேபி) நேற்று (14.03.2014) வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பி.நடராஜாவின் மனைவியும், கமலவதனா (திருகோணமலை), கருணவதனா (சுவிஸ்), சுகுணவதனா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், எஸ்.சிவநேசசுந்தரம் (சிவன்-இணுவில்), எஸ்.கிருஷ்ணநாதன் (கண்ணன்-சுவிஸ்) ஆகியோரின் ஆசை அம்மாவும், நல்லம்மா சோமசுந்தரம், இராசம்மா சண்முகநாதன், கனகசபை இராசையா, கனகசபை தட்சிணாமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கே.எஸ். அருளானந்தர் (ஓய்வுபெற்ற கூட்டுறவு பரிசோதகர்), எஸ். சிவகுமார் (சுவிஸ்), எஸ். இராஜ்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், அஜாந்தினி, காந்தரூபன், அஜந்தன், துஷாந்தினி, சிவலக்ஷி, கஜாந்தினி, அக்ஷியா, அபிராம் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 42, கஸ்கிசன் வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளின் பின்னர் நேற்று (14.03.2014) வெள்ளிக்கிழமை திருகோணமலை இந்து மயானத்தில் மாலை 5 மணிக்கு தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: அ. அஜந்தன் - 077 272 1197 (45762)(10)

# ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து கிழக்கு முஸ்லிம்கள் பேரணி

கொழும்பு, மார்ச் 15
ஐ. நா. மனித உரிமைகள் சபை இலங்கைக்கு எதிராக கொண்டுவரவுள்ள தீர்மானத்திற்கு எதிராகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் நேற்று கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் கலந்துகொண்ட பேரணியொன்று நடைபெற்றுள்ளது.

கல்முனை பிரதேசத்திலுள்ள சில பள்ளிவாசல்களினதும், முஸ்லிம் சமூக அமைப்புகளினதும் ஏற்பாட்டில் கல்முனை நகரில் நடைபெற்ற இந்த கவனவீர்ப்பு பேரணியில் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் கலந்து கொண்டு ஜனாதிபதிக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

பேரணியின் நிறைவில் கல்முனை பிரதேச செயலாளர் ஐ. எம். ஹனிபாவிடம் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் மனுவொன்றை கையளித்தனர்.

அதேவேளை மட்டக்களப்பு நகரிள்ள காந்தி சதுக்கத்தில் முன்னாள் மாநகர முதல்வர் சிவகீர்த்தா பிரபாகரன் தலைமையில் கவனவீர்ப்பு போராட்டமொன்று நடைபெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பூஸாவில்

துவ அறிக்கை பெறப்பட்டது.

அதன் பின்னர் நேற்றிரவு 9.00 மணியளவில் அவர்கள் கிளிநொச்சிக்கு மீண்டும் அழைத்து வரப்பட்டனர். கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றுக்கு நேற்று பி.ப. 3 மணியளவில் தாயையும், மகளையும் முற்படுத்தப்போவதாக பயங்கரவாத தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்திருந்த போதும் இரவே அவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

நீதிவான் முன்னலையில் ஜெயக்குமாரி அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்ததாவது:

சம்பவம் இடம்பெற்ற அன்று பி.ப 3.30 மணியளவில், எனது பிள்ளைக்கு உணவூட்டிக் கொண்டிருந்தேன். அப்போது உயரமான ஒருவர் கறுப்பு நிற ஜக்கெட்டுடன் வீட்டுச் சுவருக்கு மேலாக ஏறிப் பாய்ந்து உள்ளே வந்தார்.

உடனேயே நான் எனது மகளைக் கூட்டிக் கொண்டு வீட்டுக் கேற்றுக்கு வெளியில் வந்தேன். அப்போது பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் வாகனத்துடன் வெளியில் நின்றிருந்தனர். அவர்கள் எனது பெயரைச் சொல்லாமல் எனது பெயர் போன்ற வேறு ஒரு பெயர் சொல்லி அவரின் வீடு இதுவா என்று கேட்டனர்.

அதற்கு நான் பதில் சொல்வதற்கிடையில், எனது பெயரைச் சொல்லி அவரது வீடு இதுவா என்று கேட்க, குறித்த பெயருக்கு உரியவர் நான் தான் என்று அறிமுகப்படுத்திக் கொண்டேன். உடனேயே வாகனத்துக்கு அருகில் எங்களை இருத்தி விட்டு, அவர்கள் வீட்டினுள் சென்றனர்.

அவர்கள் உள்ளே சென்ற சிறிது நேரத்தில் இரண்டு துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டது. அதன் பின்னர் பெருமளவான பொலிஸாரும், இராணுவத்தினரும் வந்து எங்களை விசாரித்தனர். மதிலேறிக் குதித்து வந்த நபரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது - என்றார்.

அதேபோன்று மகளும், மதில் ஏறிக் குறித்த நபரைத் தனக்குத் தெரியாதென்று பதில் நீதிவான் முன்பாகத் தெரிவித்தார்.

ஜெயகுமாரிக்கு எதிராகப் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தாக்கல் செய்துள்ள 'பி' அறிக்கையில், குறித்த வீட்டில் வெடிபொருள்களை இனங்காணும் கருவி, துண்டுபிரசுரங்கள் காணப்பட்டன என்றும் அங்கேயே துப்பாக்கிச்சூடு நடந்தது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

பூஸா தடுப்புக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ள ஜெயகுமாரி யின் மூன்றாவது மகன் போரின் போது காணாமற் போயிருந்தார். இதனால் காணாமற்போனோர் தொடர்பில் நடத்தப்படும் எல்லாப் போராட்டங்களிலும், எஞ்சியிருக்கும் தனது ஒரே மகளுடன் கலந்துகொள்வார். போராட்டங்களில் பிஞ்சுக் குழந்தை கதறி அழுவதால் ஊடகங்களின் பார்வை அவர்களின் மீது குவிந்தது. சனல் - 4 உள்ளிட்ட பல சர்வதேச ஊடகங்களுக்கு. காணாமற்போனவர்களின் உறவினர்களது துயரங்களை அவர்கள் வெளிப்படுத்தி வந்தனர்.

சிறுமி விபூசிகா அண்மையிலேயே பூப்பெய்தியிருந்தார். பொலிஸாரின் அறிக்கையில் இந்த விடயமும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5-55-18)

### நேற்றைய

தனர் என்று அங்கிருக்கும் எமது செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் மீது இனந்தெரியாதோரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது. அதையடுத்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் போர்க்காலச் சூழல் போன்று இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு, வீடு வீடாக சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. வீதிகள் தோறும் சோதனை நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டிருந்தன.

சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் குறித்த வீட்டுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா மற்றும் ஈ.சரவணபவன் ஆகியோர் நேற்றுச் சென்றிருந்தனர். அவர்கள் அங்குள்ள நிலைமை குறித்து அந்தப் பகுதி மக்களிடமும் கலந்துரையாடினர்.

இந்த நிலைமை குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், "குறித்த பகுதியில் இன்னமும் பதற்ற நிலைமை தணியவில்லை. அங்குள்ள மக்கள் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சத்துடனேயே காணப்படுகின்றனர்"- என்று கூறுகின்றனர்.

அதேவேளை வன்னியின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒருசில இடங்களில் வீதித் தடைகள் போடப்பட்டு நேற்றைய தினமும் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும்பலான பிரதேசங்களின் வீதிகள் வழமைக்கு மாறான அமைதியுடன் காணப்பட்டன என்று கூறப்படுகின்றது.

(ற-5-426-18)

### துப்பாக்கிச்

லம்பட்டியில், சந்தேக நபர் ஒருவரை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை தேடிச் சென்றுள்ளனர். அப்போது குறித்த நபர் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற குறித்த நபரைக் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர். தேவைப்பட்டால் இராணுவத்தினரும் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவர். இதேவேளை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தப்பிச் சென்ற நபர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்று தெரியவந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (ற-5)

### கைதானோர்

அமைப்புக்கள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அதேவேளை, கைதுசெய்யப்பட்டுள்ள தாய், மகள் இருவரதும் விடுதலையை வலியுறுத்தி பிரிட்டனிலும் இன்று மாலை போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது.

(ற-5-422)

### இன்று

பாடு செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் இருந்து செல்லும் பக்தர்களுக்காக குறிகாட்டுவானில் விசேட படகுச் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. குறிகாட்டுவானில் இருந்து காலை 6 மணி தொடக்கம் ஆரம்பமாகும் படகுச் சேவைகள், 2 மணித்தியாலத்துக்கு ஒருதடவை என்ற அடிப்படையில் தொடர்ந்து இடம்பெறும்.

திருவிழாவை முன்னிட்டு ஆலயத்தின் சுற்றுப்புறச் சூழலில் சகாதார வசதிகள் மற்றும் பாதுகாப்பும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-14)

### அமெரிக்க

இருதரப்பினரும் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் தற்போது உறுப்பு நாடுகளாக உள்ள 47 நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து ஆதரவு தேடும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளனர். பிரேரணைக்கு ஆதரவான மற்றும் எதிரான பன்னாட்டு தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பரப்புரைப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**பரப்புரைகள் தீவிரம்**

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் ஏற்கனவே ஜெனிவா சென்றுள்ள நிலையில், அவரோடு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறிதரன் இன்று இணைந்து கொள்வார் என்று கூறப்படுகின்றது. மற்றொரு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ஜெனிவா செல்லவுள்ள நிலையில், அதன் பின்னர் எம்.ஏ. சுமந்திரன் நாடு திரும்புவார் என்றும் கூறப்படுகின்றது.

கடந்த ஒரு வாரமாக ஜெனிவாவில் தங்கியிருந்து பரப்புரைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் வட மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் திட்டமிட்டபடி இன்று நாடு திரும்பமாட்டார் என்று தெரிகின்றது. அவர் மேலும் ஒரு வாரகாலம் அங்கே தங்கியிருந்து பரப்புரைகளில் ஈடுபடவுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இவை இவ்வாறிருக்க, எதிர்வரும் 27 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படும் இலங்கை குறித்து அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மானம் தொடர்பான மூன்றாவது ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ள பிரேரணை தொடர்பிலான இறுதி வரைவு முடிவு செய்யப்படலாம் என்றும் எதிரபார்க்கப்படுகின்றது. அது மாத்திரமன்றி, பிரேரணைக்கு எத்தனை நாடுகள் ஆதரவை வழங்கும் என்று உத்தேசமாக அன்றைய கூட்டத்தில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**நவிப்பிள்ளை அறிக்கை**

அதேவேளை, எதிர்வரும் 26 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பிலான விசேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க உள்ளார் என்று தெரிகின்றது. எதிர்வரும் ஜூலை மாதம் அவரின் இரண்டாவது பதவிக் காலம் முடிவடைய உள்ள நிலையில் இலங்கை தொடர்பாகத் தான் எடுத்துள்ள நடவடிக்கைகள், எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தனது பதவிக்கு புதிதாக வரும் அடுத்த ஆணையாளர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்பவை தொடர்பில் அதில் குறிப்பிடுவார் என்று எதிரபார்க்கப்படுகின்றது. (ற)

### கைது

மேலாக, காணாமற்போனோரின் குடும்ப உறுப்பினர்களைக் கைது செய்யும் நடவடிக்கையைத் தற்போது பாதுகாப்புத் தரப்பு முன்னெடுத்து வருகின்றது. இதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளது காணாமற்போனோரைத் தேடிக் கண்டறியும் குழு.

இது தொடர்பில் அந்தக் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

"கொடூரப் போரால் தமது உறவுகளைத் தொலைத்தவர்கள் எங்கே எமது உறவுகள் என்று தேடி அலைகின்றனர். அவர்களைக் கைது செய்வதானது பெரும் மனித உரிமை மீறலாகும்.

ஜெனிவாவில் மனித உரிமைகள் தொடர்பான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இத்தகைய பழிவாங்கும் செயற்பாடுகளில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். அதற்கு மேலாக காணாமற்போனவர்களின் குடும்பத்துக்கு தொலைபேசி மூலமாக மிரட்டல் விடுத்தும், போராட்டங்களில் கலந்துகொண்டால் உயிருடன் வீடு திரும்பமாட்டீர்கள் என்றும் அச்சுறுத்தல் விடுக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள சிறுமியான விபூசிகா, கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்புதான் பருவமடைந்துள்ளார். தமிழ்ப் பண்பாடு, கலாசாரத்தையும் மீறி இந்தச் சிறுமியை கைது செய்திருப்பது கவலைக்குரிய விடயமாகும். இந்த விடயத்தை பெரிதுபடுத்த வேண்டாம் என்று, காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இவையாவற்றுக்கும் மேலாக குடும்ப உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருப்பது கண்டனத்துக்குரிய விடயமாகும்". - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-5)

### இராணுவ

சம்பவத்தில் மூன்று சைக்கிள்களுடனும், எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடனும் இராணுவ அம்புலன்ஸ் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

விபத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் ஒன்று கூடிய பொது மக்கள் அம்புலன்ஸ வண்டியைச் சுற்றி வளைத்ததுடன், அதனைச் நகர விடாது தடைகளையும் ஏற்படுத்தினர். அதனால் இராணுவத்தினருக்கும் அந்தப் பகுதி இளைஞர்களுக்கு இடையே கடும் முறுகல் நிலை ஏற்பட்டது.

அதையடுத்து சம்பவ இடத்துக்கு அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டதுடன், அங்கு நின்றிருந்த இளைஞர்கள் சிலரை வீதியோரமாகத் தடுத்து வைத்தனர். அதனால் அங்கு மேலும் பதற்றநிலை ஏற்பட்டது.

விபத்தில் உரும்பிராயைச் சேர்ந்த எ.உதீசன் (வயது - 16), ஏ.நிலோசன் (வயது -30) படுகாயம் அடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளனர். இதில் படுகாயமடைந்த மற்றொரு நபர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு படைத்தரப்பைச் சேர்ந்த நோயாளியை ஏற்றி வந்த இராணுவத்திற்கு சொந்தமான அந்த கண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(உ-4 -400)

### நீதிமன்றத்திடம்

மதிப்பு வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதியரசர் பீ.டபிள்யூ.டீ.சீ.ஜெயதிலக முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது அமைச்சர் ரிஷாத் பதியூதின் தனது பதிலில் தன்னுடைய பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த தொலைபேசி மன்னார் நீதிவானுக்கு அழைப்பு ஏற்படுத்தப் பயன் பட்டுள்ளது என்று கூறியதுடன், அதனுடைய அனுமதியற்ற பாவனைக்காக தனது வருத்தத்தையும் வெளியிட்டார்.

நீதித்துறை உறுப்பினர்கள் மீது தான் மதிப்பு வைத்திருக்கின்றார் என்றும் நீதித்துறையின் மதிப்பையும், சுயாதீனத்தையும் களங்கப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் கண்டிக்கின்றார் என்றும் அவர் நீதிமன்றில் கூறியுள்ளார்.

மன்னார் நீதிவான் யூட்சனுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய எந்தவொரு மன உளைச்சலுக்கும் தான் வருந்துவதாகவும் அவர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

அவரது மன்னிப்பு மற்றும் உறுதி மொழியை அடுத்து இரு தரப்பினரதும் இணக்கத்துடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்தது மேன்முறையீட்டு நீதிமன்றம். (த)

### தாயையும்

விடுதலை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

"கைது செய்யப்பட்டுள்ள தாயார் எந்தவொரு வன்முறைச் சம்பவத்திலும் ஈடுபடவில்லை. இவ்வாறானதொரு நிலையில் பெரும் படையெடுப்பு நடத்தி அவர்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். இது மிகக் கொடூரமான செயல்.

குறித்த 13 வயதுச் சிறுமி, கடந்த இரு வாரங்களுக்கு முன்னரே பூப்படைந்திருக்கின்றார். எனவே மனிதாபிமான அடிப்படையில் கைது செய்யப்பட்ட இருவரையும் எதுவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்ய வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-5)

### இலங்கைக்கு


இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்தேச விசாரணையைக் கோரவில்லை.

இந்த நிலையில், போர்க் குற்றங்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணையையும், தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பையும் உள்ளடக்கியதாக இந்தியா தனித் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி தமிழகத்தில் மாணவர்களால் பல்வேறு போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாலச்சந்திரன் மாணவர் இயக்கத்தினாலேயே குறித்த போராட்டங்கள் தமிழகம் முழுவதும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் ஓர் அங்கமாகவே திருச்சி சட்டக் கல்லூரியைச் சேர்ந்த 12 சட்டக் கல்லூரி மாணவர்கள், திருச்சி அரச சட்டக் கல்லூரி முன்பாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர். (ற-5)


# சுழல்பந்து வீச்சாளர்கள் அபாரம் இரண்டு அணிகளும் தடுமாற்றம்

## வடக்கின் பெரும்போர் விறுவிறுப்பாகியது


துடுப்பெடுத்தாடும் மத்திய கல்லூரி அணி வீரர்


சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ஆதரவாளர்கள்


எதிரணியின் இலக்கு வீழ்த்தப்பட்டதை தொடர்ந்து மத்தய கல்லூரி மாணவர்கள் கொண்டாட்டம்


தடுத்தாடும் வீரர்

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டத்தில் சுழல் பந்து வீச்சாளர்களின் ஆதிக்கத்தால் இரு அணியின் துடுப்பாட்ட வீரர்களும் ஓட்டங்களைப் பெறுவதற்குத் திணறுகின்றனர்.

108 ஆவது வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கும் இடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி தனதுமுதல்இன்னிங்ஸில்சகல இலக்குகளையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

தனதுமுதலாவதுஇன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 6 இலக்குகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. களத்தில் ஜெனி பிளமிங் 4 ஓட்டங்களுடனும், கஜீபன்ஓர்ஒட்டத் துடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணியினர் நிரூபனின் சுழலில் சிக்கி ஓட்டங்களைப் பெறமுடியாது திணறினர். கஜீபன் மேலும் 2 ஓட்டங்களும்ஜெனி பிளமிங் மேலும்12 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நிருபனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினர்.

9 இலக்குகளை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்று தடுமாறிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு இறுதி இலக்குக்கு ஜோடி சேர்ந்த லோகதீஸ்வர், நிலோசன் ஆகியோர் நிதானமான இணைப்பாட்டமாக 54 ஓட்டங்களைப் பெற்று தமது அணியை தூக்கி நிறுத்தினர்.

இறுதியில் 56 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லோகதீஸ்வர் 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். நிலோசன் ஆட்டமிழக்காது 22 ஓட்டங்களைப் பெற்றார்.

மத்திய கல்லூரி பந்துவீச்சில் நிரூபன் 17 பந்து பரிமாற்றங்கள் பந்துவீசி 6 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்கள் அடங்கலாக 25 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், மதுஷன் 20 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்கள் அடங்கலாக 40 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் அலன்ராஜ் 2.4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்ட்மற்ற பந்துப் பரிமாற்றங்கள் அடங்கலாக 4 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 40 ஓட்டங்களால் முன்னிலையில் தன்னுடைய இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் லோகதீஸ்வரரின் சுழலில் சிக்கிச் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.


நேற்றைய ஆட்ட நேர முடிவில் 9 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது யாழ். மத்திய கல்லூரி. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சன்சயன் 24 ஓட்டங்களையும், அலன்ராஜ் 12 ஓட்டங்களையும், யுனிஸ் கலிஸ்ரன் 15 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

ஏனையோர் ஒற்றை இலக்கங்களைத் தாண்டவில்லை. மதுஷன் 6 ஓட்டங்களுடனும், பிரியந்தன் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர்.

சென்ஜோன்ஸ் கல்லூரி பந்து வீச்சில் லோகதீஸ்வர் 27 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்கள் அடங்கலாக 38 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், துவாரகசீலன், காணாமிர்தன் ஆகியோர் 2 இலக்கினையும் வீழ்த்தினர்.


மூன்றாம் நாள் ஆட்டம் இன்று ஆகும். (த-400-23)

# பொன் அணிகளின் 1 நாள் மோதல் இன்று


வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

இருப்பவர்களில் இடமிருந்து வலம் : பி.எல்.மோகனக்குமார் (விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்), ஆர். நிலக்சன், எஸ்.விபீஸ் (அணித் தலைவர்) அருட்கலாநிதி டி.எஸ்.சொலமன் (அதிபர்), எல். மாதவறூபன் (உப அணித் தலைவர்), ரி. நிர்மலேந்திரா, ஆர். குகன் (பயிற்றுநர்)

நிற்பவர்களில் இடமிருந்து வலம்: எம்.ஜெயகாந், ஜி.கஜனன், எஸ்.கீர்த்தனன், பி.ரவிவர்மன், ஆர்.சரென்றிசிகரன், எஸ். விதுரன், வை.ஜிந்துஷண், பிஸ் யலின்சன், கே.வசந்த கெட்பிறி, எஸ். மிதுஷன், எஸ். டிலந்தன், கே. நிலக்சன்


சென்பற்றிக்ஸ் கல்லூரி

இருப்பவர்களில் இடமிருந்து வலம்: எஸ். சகயராஜ் (விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர்), எ.எஸ். நிஷாந்தன் (பயிற்றுநர்), எ.சுபநேசன் (அணித் தலைவர்), அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் (அதிபர்), வி.தனுஸ் (உப அணித் தலைவர்), அருட் சகோதரர் அன்ரனி பிரான்சிஸ் (கிரிக்கெட் இணைப்பாளர்), பி.ஜெயக்குமார் (அணிப் பொறுப்பாளர்)

நிற்பவர் வரிசை 1 இடமிருந்து வலம்: எவ் பிறங்கிளிங்ரன், ஈ.ஜெ. திஷானந், பி.பி. நிலோசன், எ.ஜெரிக்சன், சி.கரன்சன், எஸ். கபிலன், ஜே.கொலின்ஸ், எஸ். சிந்துஷன், கே.வினுஸ்ஷாந்.

நிற்பவர் வரிசை 2 இடமிருந்து வலம்: டி.சிஷாந், சி.டானியல், சாள்ஸ் ஜெகான், ஜீ. நிலக்ஷன்

யாழ்ப்பாணம், மார்ச் 15

பொன் அணிகளின் மோதல் என வர்ணிக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 26 வருடமாக இடம் பெறும் ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதுவரை இடம் பெற்ற 25 போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 18 போட்டியிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 6 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளன. இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் அதிகூடிய ஓட்டங்களாக 2002 ஆம் இடம்பெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 7 இலக்குகளை இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அதேபோல் - 1992 ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 8 இலக்குகளை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

2002 ஆம் ஆண்டு இடம் பெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 5 ஆவது இலக்குக்காக 139 ஓட்டங்கள் பெறப்பட்டமை சிறந்த இணைப்பாட்டமாகப் பெற்ற ஓட்டங்களாகும்.

அதேபோல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற போட்டியில் 3 ஆவேது இலக்குக்காக 114 ஓட்டங்கள் பெறப்பட்டமையே சிறந்த இணைப்பாட்டமாக பெறப்பட்ட ஓட்டங்களாகும்.

(த-23)



# சல்லிக் காசு கூடப் பெறாத ஒஸிலுக்கு 431 கோடி ரூபாவா?

பேயர்ன் முனிச்சுக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்சனல் அணியின் மெசட் ஒஸில் சிறப்பாக விளையாடவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஏலத்தில் ஆர்சனல் அணி ஒஸிலை ரூபா 431 கோடிக்கு ஒப்பந்தம் செய்தது. இது ஆர்சனல் அணி வரலாற்றிலேயே இல்லாத புதுமை என்றும், ஜேர்மனியைச் சேர்ந்த நடுகள வீரரான ஒஸிலை இவ்வளவு விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை எனவும் அப்போதே விமர்சனம் எழுந்தது. அவ்வப்போது கோல் அடித்து தன் மீதான விர்சனங்களுக்கு விடை கொடுத்து வந்தார் ரியல் மட்ரிட் அணியின் முன்னாள் வீரரான ஒஸில்.

ஆனால், ஜேர்மனியைச் சேர்ந்த பேயர்ன் முனிச் அணிக்கு எதிரான ஆட்டத்தில் அவர் ஜொலிக்கவில்லை என இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் ஊடகங்கள் வரிந்து கட்டி எழுதியுள்ளன.

இத்தனைக்கும் அவர் பிற்பாதி ஆட்டத்தில் பங்கேற்கவில்லை.

எவர்டன் அணிக்கு எதிரான ·லீக் ஆட்டத்தில் ஒஸில் 4 கோல்கள் அடித்திருந்தார் தான். ஆனால், அது மட்டும் போதுமா? முக்கியமான ஆட்டத்தில் சோம்பேறித்தனமாக இருந்தது நியாயமா? எனக் கேள்வி எழுப்பியுள்ளது டெய்லி மெய்ல் பத்திரிகை.

நடுகள வீரரான ஒஸில் முதல் 45 நிமிடத்தில் 21 முறை மட்டுமே பந்தை உதைத்துள்ளார். சுறுசுறுப்பு, ஆர்வம் இல்லாத அவருக்குப் பிற்பாதியில் ஓய்வு அளித்தது சரிதான் என்றாலும், ஆர்சனல் அணியின் மேலாளர் இந்த முடிவை எடுக்க 45 நிமிடங்கள் வரை காத்திருந்திருக்கக் கூடாது. முன்னதாகவே அவரை களத்தில் இருந்து வெளியேற்றியிருக்க வேண்டும்' என்றும் அந்தப் பத்திரிகை விளாசியுள்ளது.

இவற்றையெல்லாம் விட ஒருபடி மேலே சென்று, இனிமேல் ஒஸிலுக்கு சல்லிக் காசு கூடக் கொடுக்கக் கூடாது என அந்தப் பத்திரிகை சாடியுள்ளது. இதற்கிடையே, தசைப் பிடிப்புக் காரணமாக ஒஸிலுக்கு அடுத்த ஆட்டத்தில் ஓய்வு அளிக்கப் பட்டிருப்பதாக ஆர்சனல் நிர்வாகம் தெரிவித்துள்ளது. (கு)

# ஐ.பி.எல் அணிகளுக்கு 50 வீத வருமான இழப்பு




இந்தியாவுக்கு வெளியே ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் போட்டி நடைபெறுவதால் ஐ.பி.எல். அணிகளுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. 50 சதவீதம் வரை வருமான இழப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் ஒவ்வொரு அணியும் உள்ளூர் மைதானத்தில் 7 ஆட்டங்களில் விளையாடும். இதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கும்.

தேர்தல் வேளையில் பாதுகாப்புப் பிரச்சினை உள்ளதால் ஐ.பி.எல் போட்டிகளுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என உள்துறை அமைச்சு கூறியுள்ளது. இதனால் முதல் போட்டிகள் வெளிநாடுகளில் இடம்பெறுகின்றன.

தற்போது ஒவ்வொரு அணிக்கும் 2 முதல் 5 ஆட்டங்களே நடத்த வாய்ப்பு கிடைக்கலாம். அரைவாசிக்கும் மேற்பட்ட ஆட்டங்கள் வெளிநாட்டில் நடைபெறுவதால் ஒவ்வொரு அணிக்கு தலா ரூபா 50 கோடி வரை வருமான இழப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது. கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் 66 ஆயிரம் பேர் அமரலாம். இதனால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு அதிக பாதிப்பு ஏற்படலாம். (கு)



# இங்கிலாந்துக்கு ஆறுதல் வெற்றி


மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது 20/20 போட்டியில் இங்கிலாந்து அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள இங்கிலாந்து அணி மூன்று 20/20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி ஏற்கனவே தொடரைக் கைப்பற்றியுள்ள நிலையில், மூன்றாவது மற்றும் கடைசிப் போட்டி பிரிட்ஜ்டவுனில் நடந்தது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் அணித் தலைவர் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

இதனையடுத்து களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு லம்ப், ஹேல்ஸ் ஜோடி நல்ல ஆரம்பம் அளித்தது. அரைச் சதம் கடந்த லம்ப் 63 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார், ஹேல்ஸ் 38 ஓட்டங்கள் எடுத்தார்.

மோர்கன்(18), பட்லர்(3) உள்ளிட்டோர் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். கடைசிப் பந்துப்பரிமாற்றத்தில் களமிறங்கிய ஜோர்டன் 4 சிக்சர்கள் அடித்து மிரட்டினார். இங்கிலாந்து அணி 20 பந்துப்பரி மாற்றங்களில், 6 இலக்குக்கு 165 ஓட்டங்கள் எடுத்தது. இதனை தொடர்ந்து களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் டுவைன் ஸ்மித் டக்அவுட் ஆனார். ஜோர்டன் வேகத்தில் சாலஸ்(4), சாமு வேல்ஸ்(15) வெளியேறினார். மற்றவர்கள் சொதப்ப, மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில், 7 இலக்குக்கு 160 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. (கு)





# ஷாருக்கான்-கங்குலி இடையே மோதல்

பிரிமியர் லீக் உதைபந்துத் தொடரில் கொல்கத்தா அணியை வாங்குவது தொடர்பாகக் கிரிக்கெட் வீரர் கங்குலி-நடிகர் ஷாருக்கான் இடையே கடும் போட்டி உருவாகியுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலி(வயது 41). கடந்த 2008ஆம் ஆண்டில் ஐ.பி.எல் தொடரின்போது, பொலிவூட் நடிகர் ஷாருக்கானின் கொல்கத்தா அணியில் இடம் பெற்றார். இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகக் கொல்கத்தா அணியிலிருந்து நீக்கப்பட்டவர், 2011ஆம் ஆண்டில் புனே அணியில் இடம் பெற்றார்.

இந்நிலையில் பிரிமியர் கிரிக்கெட் போல, இந்தியாவில் பிரிமியர் உதைபந்து தொடர் எதிர்வரும் செப்ரெம்பரில் நடக்கவுள்ளது. மும்பை, கொல்கத்தா, டில்லி, பெங்களூர், சென்னை, கவுகாத்தி, கோவா, கொச்சி உட்பட 9 நகரங்களை அடிப்படையாக கொண்டு உதைபந்து அணிகள் இடம் பெறவுள்ளன். இந்த அணிகள் 10 ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் விற்கப்படும். ஒவ்வொரு அணிக்கும் அடிப்படை விலை ரூபா 120 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் கொல்கத்தா அணியை வாங்குவதில் கங்குலி ஆர்வம் காட்டுகிறார். இதற்காக அகில இந்திய உதைபந்துக் கூட்டமைப்பின் தலைவர் பிரபுல் பட்டேலைச் சந்தித்து தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். இதேநேரம், கொல்கத்தா உதைபந்து அணியை வாங்க ஷாருக்கானும் திட்டமிட்டுள்ளார். இந்தத் தகவலை இந்திய உதைபந்துக் கூட்டமைப்பின் துணைத்தலைவர் சுப்ரட்டோ தத்தா உறுதி செய்துள்ளார். ஏற்கனவே பிரச்சினை உள்ள நிலையில், இருவரும் உதைபந்து அணியை வாங்க மோதுவது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (கு)

# 8 வருடங்களுக்கு ஐ.பி.எல் போட்டி விஸ்தரிப்பில்லை

இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளை எதிர்வரும் எட்டு வருடாங்களுக்கு மேலும் விஸ்தரிக்கப் போவதில்லை என்று இந்தியக் கிரிக் கெட்கட்டுப்பாட்டுச் சபை சர்வதேச கிரிக்கெட் சபையிடம் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபையின் தலைவர் வெலி எட்வர்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஐ.பி.எல் தொடரின் கட்டமைப்பு எதிர்வரும் எட்டு வரு டங்களுக்கு தற்போது இருப்பதைப் போன்றே இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

எனினும் இது தொடர்பிலான உடன்படிக்கையில் இதுவரையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கைச்சாத்திடவில்லை.

ஆயினும் இவ்வாறு உறுதிமொழியை வழங்கியிருப்பதன் மூலம், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை முக்கிய அர்ப்பணிப்பை மேற்கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட்டின் முன்னேற்றமானது, சர்வதேசக் கிரிக்கெட்டின் வளர்ச்சியைப் பின்தள்ளி விடும் என்ற அச்சம் நிலவி வந்தது.

இந்த நிலையில் எதிர் வரும் வருடங்களுக்கு ஐ.பி.எல். போட்டிகளின் தற் போதைய கட்டமைப் பில் மாற்றம் ஏற் படுத்தப்படாது என்பதால், ஏனைய நாடுகளின் கிரிக்கெட் நிறுவனங்களின் கிரிக்கெட் வர்த்தகம் பாதிப்படை யாது என்று கருதப்படுகிறது. (த)



மகிழ்ச்சியில் இலங்கை அணி வீரர்கள்

# பண மழையில் இலங்கை அணி

ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றிய இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு விசேட கொடுப்பனவை வழங்க இலங்கைக் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. இதன்படி 100,000 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ண 20/20 போட்டிகளில் கலந்துகொள்ளும் இலங்கை அணிக்கு 500,000 டொலர்கள் வழங்கப்படவுள்ளன.

இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றால் 250,000 டொலர்களும், கிண்ணத்தைக் கைப்பற்றினால் மேலதிகமாக 250,000 டொலர்க்ளும் வழங்கப்பட வுள்ளன.

அதேவேளை, 2015ஆம் ஆண்டு நடை பெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள இலங்கை அணிக்கு 750,000 டொலர்களும், இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றால் 250,000 டொலர்களும், இறு திப் போட்டியில் வெற்றி பெற்றால் 750,000 டொலர் களும் வழங்கப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (த)

# மைக்கல் வோகனின் கணிப்பு இது

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணியே 20/20 உலகக் கிண்ணத்தை வெல் லும் என முன்னாள் இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோகன் கணித்துள்ளார்.

பங்களாதேஷில் ஐ.சி.சி சார்பில் 5 ஆவது 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நாளை ஆரம்பமாகின்றன.

இதில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன. இந்நிலையில் கிண்ணத்தை கைப்பற்றப் போகும் அணி எது என இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோகன் கணித்துள்ளார்.

இது குறித்து அவர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில், இம்முறை 20/20 உலகக்கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு, இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், இலங்கை, பாகிஸ்தான், நியூஸிலாந்து அணிகளுக்கு உள்ளது.

இருப்பினும் எனது கணிப்பின் படி திறமையான சுழற் பந்து வீச்சாளர்களை கொண்டுள்ள இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள் அணியே கிண்ணத்தை வெல்லும் எனத் தெரிவித்துள்ளார். (த)

பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு பொறுப்புக்கள் இல்லாத 50 - 60 வயதிற்கு உட்பட்ட வீட்டிலேயே தங்கியிருந்து வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பெண் தேவை.
(சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்)
தொடர்பு:- 078 2846666

மிக மலிவாக 23 இலட்சங்களுடன் கனடாவில் படிக்க, உழைக்க அரிய வாய்ப்பு

இன்னும் சொற்ப தினங்களுக்கு. மிகச் சிலருக்கு மட்டுமே இந்தச் சந்தர்ப்பம் அரிய வாய்ப்பை கைநழுவ விடாதீர்கள்
(யாவும் நிபந்தனைகளுடன்)
7 நாள்களும் திறந்திருப்போம்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(45707)(10) 021 221 9016, 021 568 9090

மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு நாடுகளான சவூதி, கட்டார், டுபாய், ஓமான் போன்ற செல்வந்த நாடுகளில் பாதுகாப்பான, கௌரவமான வீடுகளில் வீட்டுப்பணிப் பெண்ணாகப் பணிபுரிய அரியசந்தர்ப்பம். House Maid (வீட்டுப்பணிப்பெண்) 10பேர் உடன் தேவை. உணவு, தங்குமிடம், மருத்துவம், விமானப் பயணம் என்பன முற்றிலும் இலவசம். ஒப்பந்த காலம் 2 வருடம், விஷேடமாக முன்கூட்டிய கொடுப்பனவும் வழங்கப்படும். மலேசியா நாட்டிலும் கௌரவமான வீடுகளில் வீட்டுப்பணிப்பெண்கள் தேவை.
நீங்களும் இரண்டு வருட விரைவில் கை நிறைய சம்பளத்துடன் திரும்பிவர விரையுங்கள். உடன் தொடர்புகளுக்கு: LANKA VOICE 077 058 4658
(43210)(12.3.6)

ஆசிரியர்கள் தேவை

திசைகாட்டியின் துன்னாலை இலவச அறநெறிப் பாடசாலைக்கு....
★ பண்ணிசை போதனாசிரியர்கள்:
முறைப்படி பண்ணிசை பயின்ற பட்டதாரிகள் விரும்பப்படுகின்றனர்.
★ அறநெறி ஆசிரியர்கள்:
இந்துமத அறநெறிக் கருத்துக்களைப் போதிக்கக்கூடிய கணினி அறிவுடைய ஆசிரியைகள் தேவை.
கவர்ச்சியான வேதனம்
நேர்முகத் தேர்வு: 16.03.2014 மு.ப. 10 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும்.
(45709)(7.6.3)
Ms.V. இந்துஜா
பொதுமுகாமையாளர்
(கௌரவ இயக்குநர் சபைக் கட்டளைப்படி)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 221 9016

நீங்கா நினைவலைகள்

| 28 ஆம் வருடம் | 26 ஆம் நாள் |
| --- | --- |

மலர்வு 21 ★ 07 ★ 1911
நிறைவு 30 ★ 03 ★ 1986



அமரர் சரவணமுத்து விசுவலிங்கம்
(முன்னாள் வடமாகாணக் கல்வி ஆலோசகர்)

மலர்வு 02 ★ 11 ★ 1926
நிறைவு 18 ★ 02 ★ 2014



திருமதி பத்மாஜனி விசுவலிங்கம்

எம் தந்தை தாயாரின் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நித்தமும் நினைவுகளுடன்
திருமதி சுபத்திரா சூரியநாதன்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய். (45663)(3.6.4)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வெளிநாட்டு உயர்கல்வி
பகுதி நேர வேலைவாய்ப்புடன்
ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூர் மலேசியா
ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L
■ மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு50,000/=-60,000/=
■ பாடநெறிக்கட்டணம்275,000/= 1 வருடம்
கட்டணம் 100% வீசா வந்தபின்
வீசா 14 நாட்களில்
Hotline: 077 3013060
Study in
AUSTRALIA, NEW ZEALAND, USA, CANADA, UK, LATIVIA CYPRUS ETC...
எந்த ஒரு வங்கியிலும் பண வைப்பிற்கான சரியான வழிகாட்டல்கள் எம்மால் வழங்கப்படும்.
iCS Study Overseas
இல. 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
021 7306000, 077 3013060
107, B-1/1 காலி வீதி, கொழும்பு-06,
011 434 3322 . 077 3013060

northern PC PARK வடக்கின் கணினிப் பூங்கா
Hot line- 0777 570 124, TP - 021-222 2050, 021-222 0388
HP Pavilion 15 i3 3rd
500/4GB/15.6"/
BT/WIFI/CAM-



Laptop mega offer
66,000/=
Dell 3521 i3 3rd
500/4GB/15.6"/
BT/WIFI/CAM
Windows 8 original
Laptop Bag, Mouse, Headphone Free
MAIN SHOW ROOM - 269E, PALALY ROAD, KANTHARMADAM, JAFFNA, TOWN SHOW ROOM - 10-14, STANLY ROAD, JAFFNA

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.